கோகுலம்

GOKULAM

செப்டம்பர் '83 ரூ.2/-






டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்

பிறந்த நாள் செப்டம்பர் 5 – ஆசிரியர் தினம்





கோகுலம்

கிண்டி, சென்னை-600 032

மலர்—1 இதழ்—8 1983 செப்டம்பர் மாத இதழ்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்

பாரதியார்

கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா

அருமைச் சிறுவர் சிறுமியரே,

'கோகுலம்' ஆகஸ்ட் இதழில் வண்ண மடலைப் பார்த்துவிட்டு, உங்களில் பலர் உற்சாகமாக எழுதியிருக்கிறீர்கள். பல பெற்றோர்களும், பள்ளி ஆசிரியர்களும் மிகவும் பாராட்டி எழுதியிருக்கிறார்கள். அனைவருக்கும் மனங்கனிந்த நன்றி.

கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் தொகை ஐயாயிரத்தைத் தாண்டி விட்டது. இதுவரை உறுப்பினர் அட்டை கிடைக்காதவர்களுக்கு விரைவிலே கிடைக்க ஏற்பாடு செய்து வருகிறோம்.

சென்ற இதழில், நம் தேசத் தந்தையின் படம் ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்க வேண்டியது அவசியம் என்றும், 'இதற்காக நீங்கள் அதிகமாகச் செலவு செய்ய வேண்டாம்; ஒரு பத்திரிகையில் வெளிவந்த படத்தைக்கூடத் தனியாக எடுத்து அட்டையில் ஒட்டிச் சுவரிலே மாட்டி வைத்துக் கொள்ளலாம்' என்றும் எழுதியிருந்தோம்.

''ஏன் நம் கோகுலத்திலேயே மகாத்மா காந்தி படத்தை வெளியிடக் கூடாது? அது எங்களுக்கு மிகவும் உதவியாக இருக்குமே!'' என்று பலர் எழுதியிருக்கிறார்கள். அக்டோபர் இதழில், நிச்சயம் உங்கள் ஆசையை நிறைவேற்றுவோம். மகிழ்ச்சி தானே?

- அழ. வள்ளியப்பா

மின்மினிக் கதைகள்



கோழி கூவவில்லை!

'கொக்கரக்கோ' என்று சேவல் கூவியதும், வீட்டுக்கார அம்மாள் எழுந்து விடுவாள். ஆனால், வேலைக்காரியோ நன்றாகத் தூங்கிக் கொண்டிருப்பாள். வீட்டுக்கார அம்மாள் அவளைத் தட்டி எழுப்பி, ''கோழி கூவிவிட்டது. இன்னுமா தூக்கம்?'' என்று கூறி, வீட்டு வேலைகளைப் பார்க்கச் சொல்லுவாள்.

''இந்தச் சேவல் அதிகாலையில் கூவுவதால்தானே நம்மை வீட்டுக்கார அம்மாள் எழுப்பி விடுகிறாள்? சேவலைத் தீர்த்துக் கட்டி விட்டால்...?'' என்று நினைத்தாள் வேலைக்காரி.

ஒரு நாள் யாருக்கும் தெரியாமல், சேவலைப் பிடித்துக்கொண்டு போய்க் கழுத்தைத் திருகிக் கொன்று விட்டாள். சேவல் கூவாததால் வீட்டுக்கார அம்மாளுக்கு நேரம் தெரியவில்லை. அதிகாலை என்று நினைத்துக் கொண்டு அர்த்தராத்திரியிலே வேலைக்காரியை எழுப்பி வேலை வாங்குவாள்.

''ஐயோ! சேவல் இருந்தாலும் அதிகாலையில் எழுந்திருக்கலாம். இப்போது நேரம் காலம் தெரியாமல், நினைத்த நேரத்தில் எழுப்புகிறாளே! முன் யோசனை இல்லாமல் சேவலைக் கொன்று விட்டேனே!'' என்று வருந்தினாள் வேலைக்காரி.

சிலையைச் செய்தது யார்?

ஒரு சிங்கமும் மனிதனும் நண்பர்களாக இருந்தார்கள். ஒரு நாள், அவர்கள் காட்டிலே பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டே அங்குமிங்குமாக நடந்தார்கள்.


அப்போது மனிதன், 'ஏ சிங்கமே, இந்த உலகிலே வீரத்தில் சிறந்தவன் மனிதன்தான்'' என்றான்.

''இல்லை, சிங்கம்தான்! ஒரு மனிதன் வீரனாகவோ தீரனாகவோ இருந்தால், உடனே அவனை என்ன சொல்லுகிறார்கள்? 'சிங்கம்' என்று புகழ்கிறார்கள். அதனால், சிங்கம்தான் வீரம் மிகுந்தது.''

இப்படி இவர்கள் பேசிக்கொண்டு வரும்போது வழியிலே ஓர் அழகான சிலை இருந்தது. அந்தச் சிலையில், ஒரு சிங்கத்தைக் கீழே மடக்கிப் போட்டு அதன் மேல் ஏறி நின்றான் ஒரு மனிதன்.

''இதோ இந்தச் சிலையைப் பார்த்தாலே தெரியுமே! யார் வீரம் மிகுந்தவர் என்பதற்கு வேறு சான்று வேண்டுமோ?'' என்று கேட்டான் மனிதன்.

உடனே சிங்கம் சிரித்தது. ''இந்தச் சிலையைச் செய்தது யார்? சிங்கமா? இல்லை, உன்னைப் போல ஒரு மனிதன்தானே! சிலைகள் செய்யும் கலை எங்களுக்குத் தெரிந்திருந்தால், நாங்கள் என்ன செய்



திருப்போம்? மனிதனை மடக்கிப் போட்டு, அவன் மார்பில் கால்களை ஊன்றிக் கொண்டு ஒரு சிங்கம் நிற்பது போல் சிலை செய்திருப்போம்'' என்றது.

ஓட்டம் எதற்கு?

வெள்ளை முயல் ஒன்றைத் துரத்திக் கொண்டு ஒரு வேட்டை நாய் ஓடியது. வெள்ளை முயல் பிடிகொடுக்காமல், துள்ளித் துள்ளி வெகு வேகமாக ஓடியது. வேட்டை நாயும் விடவில்லை. இரண்டும் வெகு தூரம் ஓடின. கடைசியில், வேட்டை நாய் களைத்துப்போய் ஓரிடத்தில் நின்று விட்டது. நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு இளைப்பாறியது.

அந்தக் காட்சியை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான் ஆடு மேய்க்கும் ஒரு சிறுவன். அவன் வேட்டை நாயிடம் வந்து, ''அதுவோ சின்னஞ் சிறு முயல். நீயோ பெரிய வேட்டை நாய். உன்னால் அதைப் பிடிக்க முடியவில்லையே!'' என்று கூறிக் கேலி செய்தான்.

உடனே வேட்டை நாய் பதில் கூறியது: ''தம்பி, நான் ஓடியது எதற்காக, அது ஓடியது எதற்காக என்பதைத் தெரிந்து கொண்டால், நீ இந்தக் கேள்வியைக் கேட்டிருக்க மாட்டாய். நான் ஓடியது என் உணவுக்காக. ஆனால், அது ஓடியதோ அதன் உயிருக்காக!

இரண்டு பானைகள்

அடைமழை பெய்தது. எங்கு பார்த்தாலும் ஒரே வெள்ளம். மரங்கள், மட்டைகள், செடி கொடிகள், வைக்கோல் போர்—இப்படிப் பல பொருள்களை அடித்துக் கொண்டு வந்தது வெள்ளம்.

அவற்றில் இரண்டு பானைகளும் இருந்தன. ஒன்று மண் பானை; இன்னொன்று வெண்கலப் பானை. அசைந்து அசைந்து மிதந்து வந்த அவை இரண்டுக்கும் சிறிது இடைவெளி இருந்தது. மண் பானை வெண்கலப் பானையை நெருங்க விடாமல், ஒதுங்கி, ஒதுங்கிச் சென்றது.


''நீ ஏன் என்னைக் கண்டு ஒதுங்குகிறாய்? நாம் இருவரும் பானைகள்தானே? ஒரே இனம் அல்லவா?'' என்றது வெண்கலப் பானை.


''உண்மைதான். நீயும் பானை; நானும் பானை. ஆனால், நானோ மண்ணால் ஆனவன். நீயோ வெண்கலத்தால் ஆனவன். நீ மெதுவாக என்னைத் தொட்டாலும் என் ஆயுள் முடிந்துவிடும்! ஆகையால், தயவு செய்து அருகில் வராதே!'' என்றது மண்பானை.

எல்லாரும் மனிதர்களாக இருந்தாலும், குணத்தால் வேறுபட்ட இருவர் நெருங்கி வாழ முடியுமா? அது போலத்தான் அந்தப் பானைகளின் நிலைமையும்.


போட்டி எது?

ஆடு மேய்ப்பவர்கள் வீட்டுப் பக்கமாக ஓர் ஓநாய் ஒரு நாள் பகலில் சென்றது. ஆட்டு மாமிச வாசனை அதன் மூக்கில் ஏறியது. உடனே அது அந்த வீட்டின் உள்ளே எட்டிப் பார்த்தது. அங்கே ஆட்டுக் கறியுடன் விருந்து நடந்து கொண்டிருந்தது.










''ஐயாமார்களே, நீங்கள் வளர்த்த ஆடுகளை நீங்களே துண்டு துண்டாக வெட்டிச் சமைத்து ஆனந்தமாகச் சாப்பிடுகிறீர்களே! ஆனால், உங்கள் ஆடுகளில் ஒன்றை நான் தூக்க வந்தால், உடனே வேட்டை நாயை ஏவி விரட்டுகிறீர்கள்; வேங்கை போலச் சீறுகிறீர்கள். என்னை விரட்டிவிட்ட பிறகு உங்களுக்குப் போட்டி ஏது? அதனால் நன்றாகத் தின்கிறீர்கள். தின்று ஏப்பம் விடப் போகிறீர்கள். நீங்கள் மிகவும் பொல்லாதவர்கள்!'' என்று கூறி விட்டு எடுத்தது ஓட்டம்!

பசி தீருமா?

குப்பை மேட்டை ஒரு கோழி கிளறிக் கிளறிப் பார்த்தது. தின்பதற்கு அங்கு தானியங்களோ புழுக்களோ பூச்சிகளோ கிடைக்க வில்லை. ஏக்கத்துடன் அது நிற்கும்போது, தரையில் ஏதோ பள பளப்பாகத் தெரிந்தது. உடனே அருகில் ஓடிச் சென்று அதை உற்றுப் பார்த்தது. அது ஒரு வைரக் கல்!

''ஆகா! நீ மிகவும் மதிப்புடைய பொருள். மனிதர்கள் உன்னைக் கண்டால் விடமாட்டார்கள். ஆனால், உன்னால் எனக்கு என்ன பயன்? நீயே ஒரு நெல் மணியாக இருந்தால், இப்போது நான் எவ்வளவோ மகிழ்ச்சி அடைந்திருப்பேன். ஆனால், இந்த உலகத்தி லுள்ள வைரத்தை யெல்லாம் என் முன் கொண்டு வந்து குவித்தா லும் என் பசி தீருமா?'' என்று கூறி வருந்தியது.



கருமியின் காசு


அவர் ஒரு சுத்தக் கருமி. தினமும் காலையில் அவர் ஓர் அறைக் குள் செல்லுவார். அங்கு பெட்டியில் பூட்டி வைத்திருக்கும் பொற் காசுகளை எடுத்து எண்ணி எண்ணிப் பார்ப்பார். அதிலே அவருக்கு ஒரு தனி மகிழ்ச்சி.


ஒரு நாள் காலையில் அவர் அப்படி எண்ணிப் பார்த்துக் கொண் டிருக்கும்போது ஒரு குருவி, 'விருட்'டென்று பறந்து வந்து ஒரு பொற்காசைத் தூக்கிக் கொண்டு போய், அருகில் இருந்த ஒரு பொந்தில் வைத்தது.

அதைத் துரத்திச் சென்ற கருமி, ''ஏ குருவியே, அந்தப் பொற்காசை உன்னால் தின்ன முடியுமா? இல்லை; செலவழிக்கத்தான் வழி தெரியுமா? ஏன் அதை எடுத்துச் சென்றாய்? உடனே கொடுத்து விடு. இல்லையேல் கொன்றுவிடுவேன்'' என்று மிரட்டினார்.

''ஐயா, பெரியவரே, தேவையும் பயனும் தெரியாமல் பொற் காசை நான் எடுத்ததாகக் கூறுகிறீர். ஆனால், நீர்என்ன செய்கிறீர்? யாருக்காவது உதவுகிறீரா? அல்லது, உமக்காகவாவது பயன்படுத்து கிறீரா? தினமும் எண்ணி எண்ணிப் பார்க்கிறீர். இதனால் என்ன பயன்? ஒரு பவுனை நான் எடுத்ததற்கே என் உயிரை வாங்குவதாக மிரட்டுகிறீரே, ஒருவருக்கும் பயன்படாமல் இத்தனை காசுகளையும் ஒளித்து வைத்திருக்கும் உமக்கு என்ன தண்டனை கொடுப்பதோ?'' என்று கூறி, அந்தப் பொற்காசை வீசி எறிந்துவிட்டு விண்ணிலே பறந்தது.

கதைக் கருத்து: ஜசாம்





இந்த இதழ் எழுத்தாளர்கள்



ராஜலக்ஷ்மி சுப்பிரமணியன்




ஜெயசீலன்



ஆர். பொன்னம்மாள்



சிவ. கிருஷ்ணன்



பா. ராகவன்

அட்டைப் பட விளக்கம்:




இங்கிலாந்து நாட்டின் காவல் துறையான ஸ்காட்லண்ட் யார்டின் (Scot land yard) புகழ் பெற்ற நாயான 'யோகி' (Yogi)யைப் போலத் தனது நாய் 'டாமி'யும் வீர தீரச் செயல்கள் செய்ய வேண்டும் என விரும்பும் இச் சிறுவனின் பெயர் 'பிரஷாந்த்'. Super dog of Scotland yard இப் படித்ததிலிருந்து யோகியைப் பற்றிய பேச்சுத் தான்! 'யோகி'யின் புகழை விளக்க ஒரு சம்பவத்தை விவரித்தான் பிரஷாந்த்.

போதைப் பொருளைக் கடத்தி வந்துள்ளதாகச் சந்தேகப்பட்ட போலீஸார் ஒரு கப்பலைச் சோதனையிட்டனர். ஆனால் அப்பொருள் சிக்கவில்லை. உடனே யோகி வரவழைக்கப்பட்டது. நாயைப் பார்த்த உடன், கப்பலின் தலைவர், ''அது யோகியா? இனிமேல் மறைத்துப் பயனில்லை. வாருங்கள், போதைப் பொருள் இருக்குமிடத்தை நானே காட்டுகிறேன்'' என்றாராம்.

இந்தப் புத்தகத்தைப் படித்ததிலிருந்து பிரஷாந்த், தன் நாய்க்குத் தானே பயிற்சி அளிக்க ஆரம்பித்தான். பேசிக் கொண்டிருக்கும்போதே கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, ''பயிற்சிக்கு நேரமாகி விட்டது, டாமி'' என்றான். ''நான் தயார்'' என்பது போல் டாமியும் சிலிர்த்துக் கொண்டு எழுந்தது!

வண்ணப் படம்: ஏ. வி. பாஸ்கர்



ஆகஸ்ட் இதழ் வண்ண இதழாகவும், சுதந்திர தினச் சிறப்பு இதழாகவும் இருந்தது. 'மாட்டிக் கொண்ட மந்திரவாதி' வெகு அருமை.

வி. அருள் (364), பேரூர்.

பıபிடித்த புத்தகம் பகுதிக்கு நான் கூட விமர்சனம் எழுதி அனுப்பலாமா?

ஜி. ஜோதிமணி, கோவை—1.

(15 வயதுக்குட்பட்ட சிறுவர்சிறுமியர்யார் வேண்டுமானாலும் இப்பக்கங்களுக்குள் எழுதி அனுப்பலாம். சமீபத்தில் வெளிவந்த புத்தகமாக இருக்கட்டும். புத்தகத்தின் ஒரு பிரதியையும் அனுப்பினால் நல்லது.

—ஆசிரியர்.)

'திருக்குறள் புதிர்' படம் பார்த்தவுடனே திருக்குறள் நினைவு வருகிறது. இன்னும் 665 மாதங்கள் இது தொடரட்டும்.

கு. ப. இரகுநாதன், பூவிருந்தவல்லி.

'இந்தியத் தாயின் இரு குழந்தைகள்' மிக நன்றாக இருந்தது. செல்வியின் உயரிய பண்பு எங்கள் மனத்தைக் கவர்ந்தது.

ஆர். பாலாஜி (3174) வேலூர்—1.

'விஞ்ஞான விந்தை' வண்ணப்படம் என்னை மிகவும் கவர்ந்தது. இரண்டு ரூபாய்க்கு இத்தனை கதைகளையும், வண்ணப் படங்களையும் உயர்ந்த விஷயங்களையும் அளிக்கும் 'கோகுலம்' சிறுவர்களின் வரப் பிரசாதமாகும்.

பி. சிவக்குமார் (235), காங்கயம்.

சென்றஇதழ் நாம்பெற்றசுதந்திரத்திற்குப் பெருமை சேர்த்தது மட்டுமில்லாமல், சுதந்திரத்திற்காகப் பாடுபட்டு, அரும்பெரும் தியாகங்களைச் செய்த தலைவர்களையும் நினைவுபடுத்தி அவர்களுக்கு அஞ்சலி செய்ய வைக்கிறது.

ஏ. கணேசன், பம்பாய்—58.

'வெற்றி வேல் வீரவேல்' மிக விறுவிறுப்பாக இருக்கிறது.

ஆர். விஷ்ணுப்ரியா (441)

பத்திரிகையில் வந்த காந்திஜியின் படத்தை வெட்டி ஒட்டி வைத்துக் கொள்ளச்சொன்னீர்கள். இப்போதெல்லாம் பெரும்பாலான பத்திரிகைகள் நடிகர்களின் படங்களையே வெளியிடுகின்றன. ஆதலால், கோகுலமே பெருந்தலைவர்கள் படத்தை வெளியிடக் கோருகிறேன்.

செல்லூர் சி. கணேசன்

'பிருந்தாவனம்' பெரியவர்களே அசந்து போகும் அளவு அறிவுப் பெட்டகமாகக் காட்சி அளிக்கிறது.

எஸ். ஆர். சின்னமணி கடையாறுருட்டி.

'பிருந்தாவனம்' பகுதி என் போன்ற சிறுமியர்க்கு அமுத விருந்து!

காயத்ரி ரங்கநாதன், டோம்பிவில், (மகாராஷ்டிரம்)

நம் நாட்டுப் பெருந்தலைவர்களின் படங்களையும் வண்ணத்தில் வெளியிடலாமே?

இரா. வில்சன் சேலம்—2.

'இந்தியத் தாயின் இரு குழந்தைகள்' நாமும் நம் நாட்டுக்காக உழைக்க வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

இரா. சுந்தரம், நத்தக்காடையூர்.

காந்திஜி பிறந்தநாளில் பிறந்தவர்

அக்டோபர் 2ந் தேதி காந்தி தாத்தா பிறந்தார். இது உங்கள் அனைவருக்கும் தெரியும்.

காந்தித் தாத்தா பிறந்த அதே மாதத்தில் அதே தேதியில் பிறந்த சில சிறுவர் சிறுமியர் இருக்கலாம்.

அவர்கள் ஒவ்வொருவரும் தனது பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன் பெயர், முகவரி இரண்டையும் 10—9—83க்குள் அனுப்பினால், அக்டோபர் இதழில் வெளியிடுவோம்.

—ஆசிரியர்

சிக்கலான வழக்குகளைத் தீர்த்து வைத்து 'சிக்கலான வழக்குக்கு ஒரு சின்னான்' என்று பேர்பெற்ற சின்னானுக்கு அன்று ஒரு வழக்கு வந்தது. அதுதான் ''சந்தைக்கு வந்த செக்குமாடு'' — வழக்கு.

சர்க்கரைச் செட்டியார் ஒரு எண்ணெய்ச் செக்கு வைத்திருந்தார். சக்கரபாணிச் செட்டியாரை ஊர் மக்கள் சர்க்கரைச் செட்டியார் என்பார்கள். சர்க்கரைச் செட்டியாருக்கு இரண்டு மாடுகள் இருந்தன. நேர்மையான மனிதர். வியாபாரத்தில் கலப்படம், பொய் எதுவும் இருக்காது. அதனால் அவரிடம் எல்லோரும் நல்ல மரியாதை வைத்திருந்தார்கள். வியாபாரமும் செழிப்பாக நடந்தது. வியாபாரத்தில் தனக்கு உதவியாக ஒரு சிறுவனை மட்டும் வைத்திருந்தார். அவன் பெயர் சொக்கலிங்கம். பெரியவர்களை வைத்தால் வியாபாரத்தில் கலப்படம் செய்து தன் பெயரைக் கெடுத்து விடுவார்களோ என்று பயம். தன் சொந்த ஊரிலிருந்து சின்ன வயதிலேயே சொக்கலிங்கத்தைத் தன்னுடன் கூட்டிவந்து, நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக்கொடுத்து, தனக்கு உதவியாக வைத்திருந்தார். அவர் அவனைச் செல்லமாய் ''சொக்கு'' என்றுதான் அழைப்பார்.

செட்டியார் ஊரில் இல்லாதபோது ''சொக்கு''தான் கடையைப் பார்த்துக் கொள்வான்.

செட்டியாரின் உறவுக்காரர் ஒருவர் திடீரென்றுதவறிவிட்டதனால், ஊருக்குப் போய் வரவேண்டியதிருந்தது. பத்துப் பதினைந்து தினங்கள் கடையை மூடுவது சாத்தியமல்லவே! அதனால், சொக்குவிடம் சொல்லிவிட்டுக் குடும்பத்துடன் சர்க்கரைச் செட்டியார் ஊருக்குப் போனார்.

அப்போதுதான் சொக்குவிற்கு வந்தது சோதனை. வழக்கம் போல் மாட்டைக் கொட்டகையில் கட்டிவிட்டு, இரவு பத்து மணிக்குக் கடையைப் பூட்டிவிட்டுப் படுத்தான் சொக்கு. விடிந்து எழுந்து மாட்டைப் பிடிக்கக் கொட்டகைக்குப் போனான். அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது! கட்டியிருந்தஇரண்டுமாடுகளில்ஒன்றைக்



சாட்சி சொன்ன செக்கு மாடு

எம். ஆர். ராஜன்

காணேம்! என்ன செய்வதென்றே புரியவில்லே சொக்கலிங்கத்துக்கு. அன்று கடையைத் திறக்கவேயில்லே. மாட்டைத் தேடிக் கொண்டு போனுன். சைக்கிளில் எல்லா இடமும் சுற்றி விட்டான். அக்கம் பக்க ஊர்களில் சென்று பார்த்தான். வழியில் தென்பட்டவர்களேயெல்லாம் கேட்டான்.

''ஏங்க இந்தப் பக்கம் செவத்தக் காளே, செவப்பு வர்ணம் பூசின


பிறந்த நாள்

"தன் பிறந்த நாளே வருஷா வருஷம் கொண்டாட முடியலேயே என்று பாபு ரொம்ப வருத்தப்படறுன்."

"பெரிய பணக்காரர் மகனுச்சே! வருஷா வருஷம் கொண்டாட வேண்டியதுதானே?"

"அதுதானே முடியாது. அவன் 1972-ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் 29-ம் தேதி அல்லவா பிறந்தான்? நாலு வருஷத்துக்கு ஒரு முறைதானே பிறந்த நாளே வரும்?"

-லலிதா செல்லப்பா



கொம்பு, முன்னங்காலிலே புண்ணிருக்கும்... அந்த மாதிரி மாடு ஏதுனுச்சும் போச்சுங்களா?''

யாருமே பார்த்ததாகச் சொல்லவேயில்லே.

அன்றிரவு பஞ்சாயத்தாருக்கு ஓர் அறிக்கை கொடுத்தான். காணுமற்போன தன் முதலாளி வீட்டு மாட்டைப் பற்றிய விவரங்களேச் சொல்லி, பக்கத்து ஊர்களில் எங்காவது சந்தையில் சந்தேகத்திற்குரிய முறையில் மாடு விற்பனைக்கு வருமானுல் விசாரணை செய்து மாட்டைக் கண்டு பிடித்துத் தருமாறு அதில் கேட்டுக் கொண்டான்.

ஒரு பத்துப் பதினைந்து தினங்கள் சென்றது. ஊர்க் காரியங்களெல்லாம் முடிந்து சர்க்கரைச் செட்டியார் திரும்பி வந்தார். அவரைப் பார்த்ததும் 'ஓ'வென அழுது விட்டான் சொக்கு. செட்டியார் விவரம் கேட்டார். அழுதுகொண்டே சொன்னுன்..

''இதற்குப் போயா அழுகிறுய்... எவனுவது களவாணிப் பயலுக திருடிக்கிட்டுப் போயிட்டிருப்பான். பஞ்சாயத்துலே அறிக்கை கொடுத்துட்டே இல்லே... எப்படியும் கண்டுபிடிச்சுடலாம். நீ போய் வேலேயைக் கவனி.''

செட்டியார் ஆறுதல் கூறினுர். சொக்கு வேலேயில் இறங்கி வியாபாரத்தைக் கவனிக்கப் போய்விட்டான்.

அடுத்த ஊருக்கு அடுத்த ஊரான மாம்பட்டியில் புதன்கிழமை சந்தை. அன்றைக்குச் சர்க்கரைச் செட்டியார், தம் மனைவி உலகம்மையை வியாபாரத்தைக் கவனிக்கச் சொல்லிவிட்டு, சொக்கனேயும் கூட்டிக் கொண்டு பஞ்சாயத்தாரிடம் விவரத்தைச் சொல்லிவிட்டுச் சந்தைக்குப் போனுர்.

சந்தையில் எக்கச்சக்கமான ஆடுகள், மாடுகள் வந்திருந்தன. கொளுத்தும் வெயிலில் வியாபாரம். கொடுக்கல், வாங்கல் நடந்து கொண்டிருந்தது. செட்டியாரும் சொக்கலிங்கமும் கூட்டத்தில் புகுந்து சந்து சந்தாக ஒவ்வொரு மாடாகப் பார்த்துக்கொண்டு வந்தார்கள்.

சர்க்கரைச் செட்டியாருக்குத் திடீரென்றுஒருபரபரப்பு.''டேய்சொக்கா... அதோ பாரு, அங்கே ஒரு ஒத்தைமாடு! விலே பேசறுன் பாரு. ஒரு அரை நிக்கர் போட்டுக்கிட்டு — ஒரு முண்டாசுக்காரன்... அந்த மாடு நம்ப மாடு — செவத்த மாடுல்லே...''

''ஆமாண்ணே... நம்ம செவத்த மாடுதான். ஆனு கொம்புக்கு நாம செவப்புச் சாயமில்லே பூசியிருந்தோம். இது நீல சாயம் பூசியிருக்குதுங்களே..''

''அடே மட்டி... அதோ பாருடா.. முன்னங்காலிலே புண்ணு... தெரியுதுல்லே...''

''ஆமாண்ணே... ஆமாண்ணே. நம்ம மாடுதான்.''

''ஏலே சொக்கா... நீ இங்கேயே ஒரு பத்து நிமிஷம் பார்த்துக்கினு இரு. நீயும் போய் விலே பேசற மாதிரி பேசிக்கிட்டிரு. மாட்டை ஓட்டிக்

கிட்டுப் போயிடாமப் பார்த்துக்க. நான் போய் அதிகாரிங்களைக் கூட்டியாறேன். பிறகு பார்த்துக்கலாம்...''

செட்டியார் நாட்டாண்மை, பஞ்சாயத்துக்காரர், ஊர்ப் பெரியதனக்காரர்களை எல்லாம் கூட்டிவந்தார். தம் அறிக்கையையும் கொணர்ந்தார். பஞ்சாயத்துக்காரர்கள் முண்டாசுக்காரனையும், மாட்டையும் கூட்டிக்கொண்டு செட்டியாருடன் பஞ்சாயத்துக் கூடுமிடத்துக்குப் போனார்கள். முண்டாசுக்காரனுடன் வந்த இரண்டு அடியாட்களும் உடன் போனார்கள். பஞ்சாயத்து கூடிற்று.

சர்க்கரைச் செட்டியார் வழக்குத் தொடர்ந்தார். வழக்கு விசாரணை நடந்தது. முண்டாசுக்காரன் அந்த மாடு தன்னுடைய இரண்டு வண்டி மாடுகளில் ஒன்று என்றும், இன்னொன்று சீக்காகி இறந்து போனதால் இந்த மாட்டை விற்க வந்ததாகவும் சாதித்தான்.

செட்டியார் அது தனது மாடுதான் என்று கூறி, அதன் அடையாளங்களைச் சொன்னார். தான் ஊரில்லாத போது முண்டாசுக்காரன் திருடிக்கொண்டு போய், கொம்பில் மாற்று வர்ணம் பூசி விற்க வந்திருப்பதாக வாதிட்டார்.

விசாரணை முடிந்தபாடில்லை. பஞ்சாயத்துக்காரர்களால் ஒரு தீர்மானத்துக்கும் வரமுடியவில்லை. சிக்கலான வழக்கல்லவா...? சின்னானை வரவழைத்தார்கள்.

சின்னான் வந்தான். சின்னான் விசாரித்துக் கொண்டிருந்த போது, மாட்டின் முன்னங்காலில் உள்ள புண்ணில் ஈ மொய்க்கவே மாடு காலைத் தூக்கி உதைத்தது. இதைக் கவனித்துக் கொண்டிருந்தான் சின்னான். மாடு மேய்ப்பவனானாலும் அதிபுத்திசாலியல்லவா? டக்கென்று ஒரு யோசனை தோன்றியது.

முண்டாசுக்காரனை விசாரித்தான். ''மாட்டை எதற்கு வச்சிருந்தீங்க? உழவுக்கா, சரக்கு ஏற்றும் வண்டி மாடாகவா?''

நாய்க்கு சீசன் டிக்கெட்!

ஹாலந்தில் உள்ள மேற்கு நகரில் டிராம்களிலும், பஸ்களிலும் நாய் பிரயாணம் செய்ய அனுமதிக்கப்படுகிறது. அவற்றிற்கும் டிக்கெட் உண்டு. நாய்களுக்கான 'சீசன் டிக்கெட்'டும் வழங்கப்படுகிறது!

நாய் வைத்திருக்கும் வீட்டுக்காரர்கள் 'நாய்கள் ஜாக்கிரதை' என்று போர்டு போடுவது நம் நாட்டு வழக்கம். வட அயர்லாந்தில் வீட்டு வாசலில் கூரைப் பக்கமாகக் கொஞ்சம் வைக்கோலைச் செருகி வைத்திருந்தால், அந்த வீட்டில் நாய் இருக்கிறது என்று அர்த்தம்!

துக்கத்தை வெளிப்படுத்த கறுப்புச் சின்னம் அணிவது நமது வழக்கம். ஆனால், சீனாவில் வெள்ளை நிற பாட்ஜ் அணிகிறார்கள். துருக்கியில் நீல நிறம்; எகிப்தில் மஞ்சள் நிறம்!

ஒரிசாவில் உள்ள மலை வகுப்பினர் ஊரில் மழை பெய்யாவிட்டால் ஒரு தவளையைப் பல்லக்கில் வைத்து ஊர்வலமாக எடுத்துச் செல்கிறார்கள்.

உலகிலேயே மிக நீளமான தேசிய கீதம் கிரேக்க நாட்டுடையது. 128 வரிகள்! மிகவும் குறுகிய தேசிய கீதம் நான்கு வரிகளைக் கொண்டது. அது ஜப்பானிய தேசிய கீதம்!

நோயாளிகளைப் பரிசோதிப்பதற்காக டாக்டர்கள் பயன்படுத்தும் கருவியின் பெயர் 'ஸ்டெதாஸ்கோப்' என்பது சரி. இதே போன்று கண்களைப் பரிசோதனை செய்ய டாக்டர்கள் பயன்படுத்தும் கருவிக்கு என்ன பெயர் தெரியுமா? 'ஆப்தெல்மாஸ்கோப்' என்பதாகும்.

—சரஸ்வதி பஞ்சு



மழை பெய்யாவிட்டால்...?



தமிழ்நாட்டில் மழை பெய்யாததால் ஏற்பட்ட வறட்சியைப் போக்கப் பல முயற்சிகள் நடைபெறுகின்றன. மழை பெய்யாவிட்டால், அதைப் பொழியவைக்க, சில நாடுகளில் கடைப்பிடிக்கும் பழக்கத்தைக் கீழே கொடுத்துள்ளோம். படித்துப் பாருங்கள். வேடிக்கையாகத் தெரியலாம்.

ஜப்பானில் கறுப்பு நிற நாயைப் பலி கொடுப்பார்கள்.

ஜாவாவில் ஆண்—பெண் பூனைகளைக் குளிப்பாட்டி ஊர்வலம் நடத்துவார்கள்.

அசாமில் மலை உச்சியில் ஆட்டுக் குட்டியைப் பலி கொடுப்பார்கள்.

சீனாவில் கொடும்பாவி (பொம்மை) செய்து மழை வரும்வரை உதைப்பார்கள்.

தாய்லாந்தில் கோவில் கூரையை மழை பெய்யப் பிரித்து வைப்பார்கள்.

தொகுப்பு: சுகுமாரன்

''இது வண்டி மாடுங்க... ரெண்டுலே ஒண்ணு போயிருச்சு... அதனாலே தான் இதை விற்க வந்தோம்''

''சரி, எத்தனை தொலைவு போய் வரும் தினமும்?''

''ஒரு நாளைக்கு முப்பது மைல் போய் வருங்க...''

''சரி, மாட்டுக்கு எத்தனை மாசத்துக்கு ஒருமுறை லாடம் கட்டுவே?''

''அதிக தொலைவு போகிறதாலே சீக்கிரம் தேய்ஞ்சு போயிடுங்க. அதனாலே தேயத் தேயப் புதுசு கட்டுவேனுங்க.''

சின்னான் இப்போது சர்க்கரைச் செட்டியாரை விசாரிக்கலானான்: ''என் மாடு வீட்டுக்கு வெளியே உள்ள செக்கை ஆட்டவே பயன்படுத்தப்படுவதால் லாடம் கட்டுவதே யில்லை'' என்று செட்டியார் சொன்னார்.

நாட்டாண்மைக்காரரிடம் மாட்டின் ஒவ்வொரு காலாகத் தூக்கிக் காட்டினான் சின்னான். லாடம் அடித்த சுவடே இல்லை.

முண்டாசுக்காரனுக்கு நெஞ்சு படபடவென அடித்துக் கொண்டது.

சின்னான் தொடர்ந்தான்: ''இந்த மாடு சர்க்கரைச் செட்டியாருடையது தான் என்று சந்தேகமில்லாமல் நான் நிரூபிக்க வேண்டியிருப்பதால் எதற்கும் மாட்டையும் ஒரு கேள்வி கேட்கப் போகிறேன்.''

'என்ன மடத்தனம் இது... மாட்டிடம் விசாரிக்கப் போகிறானாமே சின்னான்...! மாடு எப்படிப் பேசும்...?' என்றெல்லாம் பஞ்சாயத்துக்காரர்களும் கூடியிருந்தோரும் ஏளனமாகப் பார்த்தார்கள்.

சின்னான் ஒரு ஒற்றை மாட்டு வண்டியைக் கொண்டு வரச் சொன்னான். வண்டியைக் கொண்டு வந்து கொடுத்தார்கள் பஞ்சாயத்துக்காரர்கள். அந்த வண்டியிலிருந்த மாட்டை அவிழ்த்துவிட்டு, சர்ச்சைக்குரிய வழக்கு மாட்டை வண்டியில் பூட்டினான். ''ஏ மாடே, நீ முண்டாசுக்காரன் மாடா... செட்டியார் வீட்டு மாடான்னு பஞ்சாயத்துக்காரங்களுக்குச் சொல்லு, பார்ப்போம்.'' என்று உரக்கக் கூறி, ''ஹேய்... ஹேய்...'' என்றான். வண்டியுடன் மாடு சுற்றிச் சுற்றி வந்தது. செக்கு மாடல்லவா...? எங்கும் போகாமல் சுற்றியபடியே இருந்தது.


சின்னான் தீர்ப்பு சொன்னான். ''இது வண்டி மாடாயிருந்தால் இவ்வளவு நேரம் ஒரு பர்லாங்கு தூரம் போயிருக்கும். இது செட்டியார் வீட்டுச் செக்கு மாடு. அதனால்தான் செக்கைச் சுற்றுவது போல இங்கேயே சுற்றிச் சுற்றி வருகிறது. எனவே, இந்த மாட்டைத் திருடிய குற்றத்திற்காக முண்டாசுக்கார முத்தையனுக்கு, ஐநூறு ரூபாய் அபராதம். இல்லையானால் ஐம்பது சவுக்கடி தண்டனை.''

செட்டியார் மகிழ்ச்சியுடன் மாட்டை ஓட்டிச் சென்றார்.

சின்னானின் புகழ் மேலும் உயர்ந்தது.

புகைப்பட ஆல்பம்

பசைபோல் வெண்மையாய்ப்
பற்களைக் காப்போம்






அக்காள் காதின் அருகே வைத்ததும்
டிக்.. டிக்.. டிக்..!


புகைப்படம்:
என். ராமகிருஷ்ண



ஒரு நொடியிலே ஒன்பது பலூன்
ஊதித் தள்ளுவேன்!



தண்ட வாளத்துக்கு மத்தியிலே
தைரியசாலிகள் நடக்கிறார்கள்!



விலையைப் பற்றிக் கவலை இல்லை;
வெடிக்காத பலூன் வேணும்.

அடைத்த 'கேட்'டுக்கு
ஆள் இரண்டு காவலா?



புகைப்படங்கள்:

பி. சுந்தரம்

அன்புடன் நான் ஊட்ட
ஆசையாய்க் குடிக்கும்






கைக்குள் இருந்து
வாய்க்குள் போகுது!

திருக்குறள் புதிர் புதிர்கள்-5,6





திருக்குறள் புதிர்

மேலேயுள்ள இரு படங்களும் உங்களுக்கு எந்த எந்தத் திருக்குறளை நினைவூட்டுகின்றன?

அந்த இரண்டு குறள்களையும் பிழையின்றி எழுதுங்கள். பிறகு, நீங்கள் எழுதியிருப்பது சரிதானா என்று 33ஆம் பக்கத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்.



கிறிஸ்து பிறப்பதற்கு முன் 1427—ஆம் ஆண்டின் தலைசிறந்த போர் வீரர் இரண்டாம் அமென் ஹோடெப் படகில் துடுப்பு வலிப்பதில் விற்பன்னர். 200 படகு மனிதர்கள் அடங்கிய படகினைச் செலுத்துவதில் திறமைசாலி என்ற புகழைப் பெற்றவர்.

கிரேக்க, ரோம சரித்திரத்தில் படகுப் போட்டிகளைப் பற்றிய விவரங்கள் காணப்படுகின்றன. போரில் வெற்றி கிட்டுவதற்குப் படகுகளின் துடுப்பு போடும் வல்லுநர்களின் திறமை தேவைப்பட்டது. ஏதெனிய ராணுவ தளபதிகள் துடுப்பு வலிக்கும் வீரர்களுக்கு அதிக அளவு பயிற்சிகள் கிட்டுவதற்காகப் படகுப் போட்டிகளை நடத்தியிருக்கிறார்கள்.


18—ம் நூற்றாண்டு இறுதியில் லண்டனிலுள்ள தேம்ஸ் நதியில் மூன்று படகுப் போட்டி கிளப்கள் உருவாயின. ஸ்டார், ஆரோ, ஷார்க் என்று மூன்று படகுப் போட்டி கிளப்கள். இவை படகுகளின் திருப் பெயர்கள்.

ஆஸ்திரேலிய புரொபஷனல் படகோட்டும் சாம்பியன் மகன் பாப் பியர்ஸ் 1928—ம் வருஷம் ஒலிம்பிக் தங்கப் பதக்கம் பெற்றவர். பில டெல்பியா தங்கக் கோப்பையைப் பெற்று உலக சாம்பியன் பட்டம் பெற்றவர். ஓய்வு பெற்ற போது உலக சாம்பியன் பதவியை இழக்காமலிருந்தது இவரது தனிச்சிறப்பு.

அமெரிக்காவில் முதல் படகுப் போட்டி 1756—ம் வருடம் நடைபெற்றிருக்கிறது.

ரஷ்யாவில் படகோட்டிகள் 20—ம் நூற்றாண்டு மத்தியில் தான் சர்வதேசப் படகுப் போட்டிகளில் ஈடுபடத் தொடங்கினர். ரஷ்யாவில் முதல் ஒலிம்பிக் தங்கப் பதக்கத்தைப் படகுப் போட்டியில் பெற்றுத் தந்தவர் வியாசெலவ் (Vyacheslav Ivanov) ஐவனேவ். 1952-ம் ஆண்டிலிருந்து 1972—ஆம் ஆண்டு வரை ரஷ்யா தனியார் துடுப்பு வலிக்கும்போட்டி இரட்டையர் துடுப்பு வலிக்கும் போட்டிகளில் ஒன்பது தங்கப் பதக்கங்களைப் பெற்றுள்ளது.

1896—ம் வருஷம் ஒலிம்பிக்கில் முதல் தடவையாகப் படகுப் போட்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் கடுமையான காலநிலை படகுப் போட்டிகளை நடத்த விடாமல் தடுத்து விட்டது. 1908—ம் வருஷம் தான் படகுப் போட்டிகள் ஒலிம்பிக்கில் ஒரு விளையாட்டாக அங்கீகாரம் பெற்றது. ஹென்லியில் நடைபெற்ற





ஒலிம்பிக் படகுப் போட்டிகளில் பிரிட்டனே வெற்றி பெற்றது.

ஒலிம்பிக் போட்டிகளில் ஸ்டாண்டர்ட் தூரம் 2000 மீட்டர்: அதாவது 1 மைல் 427 கெஜம். 1976—ம் ஆண்டு ஒலிம்பிக்கில் கிழக்கு ஜெர்மனி படகோட்டிகள் 2000 மீட்டர் தூரத்தை 5 நிமிடங்கள், 32.17 செகண்டுகளில் கடந்து வெற்றி வாகை சூடினர்.

படகோட்டும் இலக்கணத்தில் 27 முக்கிய விதிகளைத் துடுப்பாளர்கள் பகுத்தறிய வேணும். தங்கள் பலத்தையும் உடல் கனத்தையும் எந்த அளவுக்குப் பயன்படுத்த வேண்டும் என்பதைத் துடுப்பாளர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். படகில் அவர்கள் கனம் இருக்கும். ஆனால் துடுப்பாளர் தங்கள் பலத்தை அபரிமிதமாகச் செலுத்தினால் வெகு சீக்கிரம் களைத்துப் போய் விடுவார்கள்.

பயிற்சியாளர்கள் நதிக்கரையில் மிதக்கும் பிளாட்பாரங்கள் (Fixed tubs) அமைத்து, அவற்றில் ஆசனங்கள், துடுப்புக்களையும் வைத்துப் பயிற்சியாளருக்குக் கற்றுத் தருவார்கள். துடுப்பாளர்கள் எப்படி எப்படித் துடுப்பு செலுத்த வேண்டும், 'ஸ்டிரோக்' கள் எப்படியிருக்க வேண்டும் என்பதெல்லாம் 'கோச்'கள் கற்றுக் கொடுப்பார்கள்.

படகுப் போட்டிகளுக்கான விசேஷப் படகுகளில் ஒன்றிலிருந்து பன்னிரண்டு துடுப்பாளர்கள் அமர்ந்து செலுத்துவதற்கான வசதிகள் அமைக்கப்படுகின்றன.

எட்டுப் பேர் துடுப்பு வலிக்கும் படகு 55—லிருந்து 60 அடி நீளம் கொண்டிருக்கும்: இரண்டு அடி உத்தரத்தைப் பெற்றிருக்கும். பந்தயப் படகு 240 பவுண்ட் எடை கொண்டிருக்கும். துடுப்புகள் மரத்தாலானவை. துடுப்பு நீளத்துக்கோ, கனத்துக்கோ கட்டுப்பாடு இல்லை. ஆனால் சாதாரணமாகத் துடுப்பு 12 அடி நீளம்: 8 பவுண்டு எடை இருக்கும். துடுப்பை விட Sculls 10 அடி நீளத்திலிருக்கும்: எடையும் குறைவு.

படகு செலுத்தும் போட்டி இரு வகைப்படும். இரண்டுக்கு மேற்பட்ட படகுகள் நாக்கவுட் முறையில் சென்று இறுதி இலக்கை அடைவதை நிர்ணயிப்பது. மற்றொரு வகை போட்டியில் இடைவெளிவிட்டுப் படகுகள் நேரத்தைக் குறித்துக் கொண்டு அனுப்பி இறுதி இலக்கை அடையும் நேரத்தைக் கொண்டு ரிஸல்ட்டை முடிவு செய்வார்கள்.

போட்டிகள்

குண்டுமணி



படகுப் போட்டியில் Regatta பந்தயத்தில் நதியிலோ, ஏரியிலோ படகுகளை நேராகச் செலுத்தவைத்து முடிவு செய்யப்படும். இந்தப் படகுப் போட்டியில் ஆண்களுக்கு 2000 மீட்டர் தூரமும் பெண்களுக்கான போட்டிகளுக்கு 1000 மீட்டர் தூரமும் இருக்கும்.

படகுப் போட்டியை நிர்வகிக்க ஒரு கமிட்டி செயல்படும். இரண்டு மேற்பார்வையாளர்கள் படகுப்போட்டி தொடங்குமிடத்திலும் முடிவிலும். படகைச் செலுத்தும் விற்பன்னர்களையும் படகு வகையையும் பரிசோதிக்க இருப்பார்கள். படகுப் போட்டி பாதையினை அம்பயர்கள் முன்நின்று நிர்வகிப்பார்கள். விரைந்து செல்லும் படகுகளை மற்றொரு படகில் அமர்ந்தபடி பின் தொடர்ந்து அம்பயர்கள் பந்தயத்தை நிர்வகிப்பதும் உண்டு. படகுப் போட்டியைத் தொடங்கி வைக்கத் தனியாக 'Starter' இருப்பார். மேலும் படகுப் போட்டிகளின் ரிஸல்ட்டைத் 'தீர்வு' செய்ய நீதிபதிகளும் நியமிக்கப்படுவார்கள்.

படகுப் போட்டியினர் திறமைக்கேற்ப வரிசைப்படுத்தப்படுவார்கள். படகு செலுத்தும் விற்பன்னர்கள் வயது, அனுபவம், படகின் கனத்துக்கேற்பப் பிரிக்கப்படுவார்கள்.

துடுப்புப் போடும் கலைஞர்கள் கால் சராயும் சட்டையும் அணிவதோடு தங்கள் குழுவின் அடையாளத்தையும் சட்டையில் பொறித்திருப்பார்கள்.

படகு செலுத்தும் விற்பன்னர்கள் விபத்தில் சிக்கிக் கொண்டால் தங்களது ஸ்தலத்திலேயே இருக்கவேண்டும். புறப்படும் இடத்திலிருந்து 100 மீட்டர் தூரத்துக்குள் விபத்து படகுக்குப் பிறரது இடையூறினால் ஏற்பட்டால், மறுபடி படகுப் போட்டியை நடத்தும்படி பந்தய நிர்வாகிகளுக்குக் கட்டளையிட அதிகாரமுண்டு.

தனியார் படகுப் போட்டிக்குப் பிரதியாளர்கள் அனுமதிப்பதில்லை. படகுப் போட்டியில் பங்கேற்கும் கலைஞர்கள் பந்தயம் தொடங்குவதற்கு இரண்டு நிமிஷங்களுக்கு முன்பே தயாராயிருக்க வேண்டும். படகு செலுத்தும் கலைஞர்கள் படகில் ஏறுவதற்குத் தயாராகும் வரை Starter ஒரு வெள்ளைக் கொடியை உயரப் பிடித்திருப்பார்.

பந்தயத்தைத் தொடங்கி வைக்கும் ஆட்ட நிர்வாகி, ''எல்லோரும் தயாரா?'' என்று கேட்டுவிட்டு, அதற்கு மறுப்பு எழாவிட்டால்உடனே உயரத் தூக்கிப் பிடித்த வெள்ளைக் கொடியைத் தாழ்த்தி விடுவார். தொடக்கம் பழுதானால் மணியடித்துக் கொடியை அசைத்து மறுபடியும் பந்தயத்தைத் தொடங்குவதுண்டு.

பந்தயத்தில் செல்லும் படகுகளுக்கு அதற்கென்று தனிப்பாதை இருக்கும். அவற்றை விட்டு விலகிச் சென்றால் அந்தப் படகுக் கலைஞரைப் போட்டியிலிருந்து விலக்கி விடுவார்கள். படகுக் கலைஞர்களுக்கு வெளி ஆட்களிடமிருந்து ஆலோசனைகள் தரக் கூடாது.

ஒரு படகோடு மற்றொரு படகு இடிக்கும் போலிருந்தால் அம்பயர் உடனே எச்சரிக்கை விடுப்பார்! இந்த எச்சரிக்கைக்குப் பிறகு படகுகள் மோதிக் கொண்டால் அவற்றைப் போட்டியிலிருந்து அம்பயர் விலக்கி விடுவார்.

படகு முடிவை எட்டிவிட்டதாகக் கருதப்படுவது படகுக் கலைஞர்களில் துடுப்பாளரது துடுப்பு வெற்றிக் கோட்டைத் தொட்டு விட்டபோதுதான்!

பந்தயம் முடிவுற்றதைக் காட்ட, பந்தயம் சரியான முறையில் முடிவுற்றதைக் காட்ட அம்பயர் வெள்ளைக் கொடியைத் தூக்கிக் காட்டுவார். ஏதாவது தகராறோ, முடிவில் கோளாறோ எழுந்தால் அம்பயர் சிவப்புக் கொடியைக் காட்டிவிடுவார்!

இறுதிக் கோட்டை இரண்டு மூன்று படகுகள் எட்டியிருந்தால் படகுப் போட்டியின் தேர்வை நீதிபதிகள் புகைப்படங்களை வைத்து முடிவெடுப்பார்கள்.

சர்வதேசப் போட்டிகளின் படகுகளில் பயன்படுத்தப்படும் துடுப்புக்களில் தேசிய வண்ணங்கள் தீட்டப்பட்டிருக்கும்.

காற்றுக்குக் காசு!

"காத்துக்குக் கூட காசு கேட்கருங்கடா"

"அநியாயமாக இருக்கே. எங்கே? பீச்சிலா?"

"சைக்கிள் கடையிலேதான். காத்தடிக்கக் காசு கேட்கருங்களே"

சைபீரியக் குட்டிக் கதைகள்

ஸ்ரீதேவி

குதிரையையும் கொடுத்தான்!

கூலி வேலை செய்யும் சைபீரியன் ஒருவன், ஒருநாள் துருக்கி தேசத்துக்கு வந்தான். அங்கு உள்ள ஆற்றங்கரையில் ஒரு பெண்மணி அமர்ந்திருந்தாள். அவளுடைய கணவன் தன் குதிரையைத் தண்ணீர் குடிப்பதற்காகச் சிறிது தூரத்திலிருந்த ஆற்றுக்கு அழைத்துச் சென்றிருந்தான்.

அப்பெண்மணி சைபீரியனுக்குக் காலை வணக்கம் கூறி, அவன் எங்கிருந்து வருகிறான் என்று கேட்டாள். அவன், தான் மேல் உலகத்திலிருந்து வருவதாகக் கூறினான். உடனே அந்தப் பெண், ''அப்படியானால் இறந்து போன என்னுடைய மகனை உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டாள்.

''ஓ, தெரியுமே!'' என்றான் அவன்.

''அவன் எப்படி இருக்கிறான்? நல்லாயிருக்கிறானா?'' என்று கேட்டாள்.

''நன்றாகத்தான் இருக்கிறான். ஆனாலும் கறுப்புக் காப்பியும், புகையிலையும் வாங்கப் பணம் இல்லாததால் கஷ்டப்படுகிறான்'' என்றான்.

உடனே அவள், தன் பணப் பையை அவனிடம் கொடுத்து, ''இந்தா இதைக் கொண்டு போய் என் மகனிடம் கொடுத்து, அவனுக்கு வேண்டியதை வாங்கிக் கொள்ளச் சொல்'' என்றாள்.

சைபீரியனும், அதைப் பெற்றுக் கொண்டு உடனே அங்கிருந்து கிளம்பி விட்டான்.

சிறிது நேரத்தில் அந்தப் பெண்மணியின் கணவன் குதிரையுடன் திரும்பினான். அவனிடம் மேல் உலகத்தில் இருந்து வந்தவனைப் பற்றியும், அவனிடம் மகனுக்காகப் பணப்பையைக் கொடுத்தது பற்றியும் அவள் கூறினாள். தன் மனைவி ஏமாந்ததை அறிந்த அவன், ஏதும் கூறாமல் குதிரை மீது ஏறி அவன் சென்ற திசையில் குதிரையைச் செலுத்தினான்.

குதிரையின் காலடி ஓசை கேட்ட சைபீரியன் விஷயத்தை ஒருவழியாகப் புரிந்து கொண்டான். அவன் சென்ற வழியில் மாவரைக்கும் ஆலையில் வேலைபார்க்கும் ஒருவன் அமர்ந்திருந்தான். அவனிடம், ''உன்னைக் கொல்வதற்காக ஒரு துருக்கியன் குதிரையில் வருகிறான்'' என்றான். உடனே அவன் விழுந்தடித்துக் கொண்டு அங்கிருந்த குன்றில் ஏறி வேகமாக ஓடினான். சைபீரியன் அவன் இருந்த இடத்தில் அமர்ந்து கொண்டான்.

குதிரையில் வந்த துருக்கியன் அங்கு அமர்ந்திருந்த சைபீரியனிடம், ''இந்த வழியாக ஒரு திருடன் வந்தானே,



பார்த்தாயா?'' என்று கேட்டான். சைபீரியன், ''அவன் இந்தக் குன்றில் ஏறித்தான் ஓடினான்'' என்று கூறினான். ''இந்தக் குதிரையைப் பார்த்துக் கொள்'' என்று கூறி, குன்றில் ஏறி ஓடியவனைத் தேடிக் கண்டுபிடித்து விட்டான், துருக்கியன்.

''எங்கே பணப் பை?'' என்று அவனைக் கேட்டான். அவன் தனக்கு எதுவும் தெரியாது என்று கூறினான். சிறிது நேரம் இருவரும் வாதாடினர். பிறகு, இருவருமே தங்களை வேறு ஒருவன் ஏமாற்றி விட்டதை உணர்ந்தனர். குன்றின் அடிவாரத்திற்கு ஓடிவந்து பார்த்தனர். அங்கு யாருமே இல்லை. குதிரையையும் காணோம்!

குதிரையை இழந்து திரும்பி வந்த கணவனிடம், அவன் மனைவி, ''எங்கே உங்கள் குதிரை?'' என்று கேட்டாள்.

''நீ பணப்பை கொடுத்தவனிடமே குதிரையையும் கொடுத்து விட்டேன். இனி நம் மகன், மேல் உலகத்தில் குதிரையில்நான் சவாரி செய்வான்'' என்றான்.

நூறுவது மாப்பிள்ளை

ஒருவருக்கு நூறு மகன்கள் இருந்தார்கள். அவர்களுக்கு உடைகள், உணவு, விளையாட்டுப் பொருள்கள் வாங்கவே நிறையச் செலவானது!

அவர்கள் எல்லாம் வளர்ந்து கொண்டே வந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவராக, ''அப்பா, எனக்குக் கல்யாணம் செய்து வை'' என்று நச்சரிக்க ஆரம்பித்து விட்டார்கள். உடனே தந்தை ஒரு குதிரையில் ஏறிப் பல இடங்களிலும் பெண் தேடி அலைந்தார்.

வழியில் ஒரு கிழவர் நிலத்தை உழுதவாறு கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தார். குதிரையில் சென்ற மனிதர் கிழவரிடம் சென்று ''ஏன் அழுகிறீர்கள்?'' என்று கேட்டார்.

அதற்கு அந்தப் பெரியவர், ''என்னைப் போல் நூறு பெண்களைப் பெற்றவர் அழாமல் என்ன செய்வார்கள்?'' என்று கேட்டார்.

''உங்களைப் பார்த்தது நல்லதாயிற்று'' என்று கூறிக் கொண்டே



குதிரையிலிருந்து கீழே இறங்கினார் நூறு மகன்களைப் பெற்றவர்.

பிறகு இருவரும் நண்பர்களானார்கள். அடுத்து இருவரும் சம்பந்திகளானார்கள். அவர் தமது நூறு மகன்களையும் முதியவரின் நூறு மகள்களுக்குத் திருமணம் செய்து கொடுத்தார்.

திருமணம் முடிந்து எல்லோரும் திரும்பும் வழியில் ஒரு பெரிய ஆறு இருந்தது. அதனைக் கடக்க ஒரு பாலம். அந்தப் பாலத்தின் மீது திருமணத் தம்பதிகளின் ஊர்வலம் வந்து கொண்டிருந்தது. திடீரென்று பாலம் ஒருபக்கமாகச் சாய்ந்தது! எல்லோரும் கூச்சலிட்டனர். அப்போது அங்கே புகை எழுந்தது. அதிலிருந்து ஒரு பெரிய பூதம் தோன்றியது. ''யார் இந்த ஊர்வலத்தின் தலைவர்?'' என்று கேட்டது.

உடனே மாப்பிள்ளைகளின் தந்தை ''நான்தான் தலைவன். இது உன்னுடைய பாலமாக இருந்தால் தயவு செய்து எங்களைமன்னித்துப்பாலத்தைச் சரிசெய்து எங்களைப் போகவிடு'' என்று கேட்டார்.

அதற்கு அந்தப் பூதம், ''சரி, போக விடுகிறேன். ஆனால், ஒன்று. நீ திருமணம் நடந்த வீட்டில் எதை மறந்து விட்டு வந்தாயோ, அதை எனக்குத் தந்துவிட வேண்டும். நான் பிறகு மூன்று வருடம் கழித்துத்தான் மறுபடி அதைக் கொடுப்பேன்'' என்றது. வேறு வழியின்றி அவரும் ''சரி'' என்றார். உடனே பாலம் பழைய நிலையை அடைந்தது. அனைவரும் வீட்டை நோக்கிச் சென்றார்கள்.

வீட்டை அடைந்ததும் நூறு மாப்பிள்ளைகளில் ஒருவன் குறைவது தெரிந்தது. உடனே பெண் வீட்டிற்குச் சென்று பார்த்தார், அவனுடைய தந்தை. அவன் அங்கேயே தூங்கிக் கொண்டிருந்தான். தந்தை அவனை எழுப்பி, ''எப்படி நீ மட்டும் இங்கேயே இருந்தாய்?'' என்று ஆச்சரியமாகக் கேட்டார். திருமண வேலைகளை மும்முரமாகப் பார்த்துக் கொண்டிருந்ததால் அசதியில் உறங்கிவிட்டதாக அவன் கூறினான்.

அவனுடைய தந்தை வழியில் நடந்ததை அவனிடம் கூறினார். அப்போது பூதம் தோன்றி அந்த மாப்பிள்ளைப் பையனை அழைத்துச் சென்றது. மூன்று வருடம் கழித்து அவனைத் திருப்பித் தருவதாகக் கூறியது.

மூன்று வருடங்கள் கழித்து அவனது தந்தை அந்தப் பாலத்திற்குச் சென்றார்.

பூதத்திடம் தன் மகனைக் கேட்டார். பூதம் ஒரு கிளி, ஒரு மரங்கொத்தி, ஒரு புறா ஆகிய மூன்றையும் காட்டி, ''இதில் உன் மகன் யாரோ? அவனை அழைத்துச் செல்'' என்றது.

கிளியின் கண்ணில் விரோதம் தெரிந்தது. மரங்கொத்தியிடம் வித்தியாசமாக ஒன்றும் இல்லை. ஆனால், புறாவின் கண்ணில் கண்ணீர் வழிந்தது. அதைக் கவனித்த தந்தை, ''இதுதான் என் மகன்'' என்று புறாவைக் காட்டினார். உடனே புறா அவருடைய மகனாக மாறியது. மகிழ்ச்சியுடன் மகனோடு அவர் வீடு வந்து சேர்ந்தார்.



மூன்று சகோதரர்கள்

சைபீரியாவில் மூன்று ஏழைச் சகோதரர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவர்களிடம் அவர்களுடைய ஆடைகள், மிகப் பழைமையான ஒரு சிறியவீடு, ஒரு பேரிக்காய் மரம் — இவை தவிர வேறு எதுவுமே இல்லை. அவர்கள் மூவரும் அந்த மரத்தில் காய்க்கும் பேரிக்காயைத்தான் உணவாகக்கொண்டார்கள். ஒவ்வொரு இரவும் ஒவ்வொருவர் என்ற முறையில் அந்த மரத்தைக் காவல் காத்து வந்தார்கள்.

ஒருநாள் இரவு மரத்தைக் காத்துக் கொண்டிருந்த ஒரு சகோதரன், யாரோ ஒருவர் அந்த மரத்தை நெருங்குவதைக் கண்டான்.

அந்த மனிதன், ''நான் மிகவும் பசியாக இருக்கிறேன். எனக்கு ஏதாவது கொடுங்கள்'' என்று கேட்டான். இதோ இந்த மரத்தில் உள்ள பழங்களைப் பறித்து வயிறு நிறையும் வரை உண்ணுங்கள்'' என்று சொன்னான் காவல் காத்த சகோதரன்.

அடுத்த இரண்டு இரவுகளும் மற்ற இரண்டு சகோதரர்களிடமும் அந்த மனிதன் வந்து இவ்வாறே கூறினான். அவர்களும் அவன்மேல் இரக்கப்பட்டுப் பழங்களைப் பறித்துத் தின்று பசியைத் தீர்த்துக் கொள்ளச் சொன்னார்கள்.

அந்த மனிதன் வேறு யாருமல்ல; ஒரு தேவதைதான்! 'அவர்களுக்கு உதவி செய்யலாமா? அதற்குத் தகுதியானவர்கள்தானா?' என்று அறியவே அது அவ்வாறு செய்தது. எனவே நான்காவது நாள் அவர்கள் வீட்டில் ஒரு பெரியவர் போல் தேவதை தோன்றியது. ''நீங்கள் எனக்குச் செய்த உதவிக்கு நான் நன்றி செலுத்த வேண்டும். எனவே என்னுடன் சிறிது தூரம் நடந்து வருகிறீர்களா?'' என்று கேட்டது. அவர்களும் அதனுடன் நடந்து சென்றார்கள்.

அந்தத் தேவதை முதல் சகோதரனிடம், ''இந்த உலகத்திலேயே உனக்கு எது மிகவும் பிடிக்கும்?'' என்று கேட்டது. அதற்கு அவன், ''ஆற்றில் உள்ள தண்ணீர் முழுவதும் மதுவாக மாறவேண்டும். அதுவும் எனக்கே சொந்தமாக இருக்க வேண்டும்'' என்றான்.

தேவதையும் அவ்வாறே செய்தது. மற்ற இருவருடன் சிறிது தூரம் சென்றது. வழியில் ஒரு நிலத்தில் நிறையப் பறவைகள் அமர்ந்திருந்தன. அதைக் கண்ட இரண்டாவது சகோதரன் ''இந்தப் பறவைகள் எல்லாம் மாடுகளாக மாறவேண்டும். அந்தப் பண்ணைக்கு நானே உரிமையுடையவனாகவேண்டும்'' என்று கூறினான்.

தேவதை அவனுடைய ஆசையையும் நிறைவேற்றியது. மூன்றாவது சகோதரனிடம், ''உனக்கு என்ன பிடிக்கும்?'' என்று கேட்டது. அவன், எல்லா நல்ல குணங்களும் உடைய ஒரு பெண் எனக்கு மனைவியாக வரவேண்டும்.'' என்று வேண்டினான். தேவதை அவனை ஓரிடத்துக்கு அழைத்துச் சென்றது. அங்கு ஓர் இளவரசி தாய் தந்தையருடன் அமர்ந்திருந்தாள். அங்கு சென்ற தேவதை அரசனிடம் மூன்றாம் சகோதரனைக் காட்டி, ''இவன் உங்கள் பெண்ணை மணக்க வந்திருக்கிறான்'' என்றது.



'குப்புசாமி அப்புசாமி' பாடலைத் தொடர்ந்து படித்து வந்த செல்வன் பா. ராகவனுக்கு, 'நாமும் ஏன் இப்படி ஒரு பாட்டை எழுதக் கூடாது?' என்று தோன்றியது. சிந்தனை செய்தான். 'அய்யாசாமி, அழகுசாமி' என்ற ஓர் அழகிய பாட்டை இயற்றி விட்டான்! எப்படி இருக்கிறது இந்தப் பாட்டு?

அய்யாசாமி, அழகுசாமி

அழகுசாமி:

அய்யா சாமி, அய்யா சாமி,
   கொய்யா தர்றீங்க.
மெய்யா வயிறு வலிக்குதுங்க,
   ஐயோ என்செய்ய?

அய்யாசாமி:

ஆசுப் பத்திரி சென்று நீயும்
   ஊசி போட்டுக்கோ,
அதற்கு நானும் என்ன செய்ய,
   அழகு சாமியே?

அழகுசாமி:

ஆசுப் பத்திரி செல்வ தற்குக்
   காசு வேண்டாமோ?
பீசு கேட்டால் என்ன செய்ய?
   ஓசி டாக்டரா?

அய்யாசாமி:

காசு இல்லை என்று தானே
   கவலைப் படுகிறாய்? - இதோ
காசு! இதனை எடுத்துக் கொண்டு
   கடிதில் செல்லுவாய்.

அழகுசாமி:

காசு கொடுத்து பீசு கொடுத்து
   ஊசி எதுக்குங்க?
காபிக் கடை அல்வா போதும்,
   காசைக் கொடுங்கோ!

- பா. ராகவன்

அரசர், ''இரண்டு இளவரசர்கள் அவளுக்காகக் காத்திருக்கிறார்கள். மூன்றாவது ஒரு பிச்சைக்காரனா?'' என்றார் கேலியாக. அதற்குத் தேவதை, ''இளவரசிக்குத் தகுந்த கணவனை ஒரு போட்டி மூலம் தேர்ந்தெடுக்கலாமே! மூவரிடமும் திராட்சைக் கொடியைக் கொடுத்து நடச் செய்வோம். யாருடைய செடியில் விரைவில் திராட்சை வருகிறதோ அவர்களுக்கே இளவரசியை மணம் முடிக்க வேண்டும்'' என்று கூறியது. அரசரும் இதற்கு ஒப்புக் கொண்டார். மூன்றாம் சகோதரனே இதில் வெற்றி பெற்றான். அரசர் வேறு வழியில்லாமல் அவனுக்கே தன் பெண்ணை மணமுடித்துக் கொடுத்தார். ஆனாலும் மகளையும், மாப்பிள்ளையையும் வெறுத்து அரண்மனையிலிருந்து துரத்தி விட்டார்.

ஒரு வருடம் கழித்துத் தேவதை மறுபடியும் ஒரு மனிதன் போல உருவெடுத்து அந்த மூன்று சகோதரர்களையும் காண வந்தது. முதல் சகோதரனிடம் போய், ஒரு கோப்பை மது கேட்டது. அதற்கு அவன் ''இப்படிக் கேட்பவர்களுக்கெல்லாம் கொடுத்தால் நான் அழிந்து விடுவேன்.'' என்றான். அவன் சொல்லி முடித்த அளவிலேயே ஆற்றிலிருந்த மது முழுதும் தண்ணீராகி விட்டது!

இரண்டாவது சகோதரனிடம் சென்றது. அவனிடம் கொஞ்சம் வெண்ணெய் கேட்டது. அதற்கு அவன், ''நீ எந்த வேலையும் செய்யவில்லை. உனக்கு எதற்காக நான் கொடுக்க வேண்டும்?'' என்று கேட்டான். உடனே அவன் பண்ணையில் இருந்த மாடுகள் எல்லாம் பறவைகளாக மாறிப் பறந்து விட்டன!

மூன்றாம் சகோதரனின் வீட்டிற்குச் சென்றது தேவதை. ''இன்று நான் இங்கு தங்கலாமா?'' என்று கேட்டது. ''ஓ! தாராளமாக'' என்று கூறி அவனுக்குத் தங்க இடமளித்தனர். ''இதோ ரொட்டி சுடப் போகிறேன். சாப்பிடுங்கள்'' என்றாள் இளவரசி. ஆனால், அவள் சுட்ட ரொட்டி அழுக்கு நிறத்தில் இருந்தது. அதை அவள் வெட்டும்போது திடீரென்று அது வெள்ளை நிறமாக மாறியது. கணவனும் மனைவியும் அதிசயப்பட்டனர். அதே சமயம் அவர்களது விருந்தாளி மாயமாய் மறைந்து விட்டார். அவர்களுடைய சிறிய வீடோ அரண்மனையாக மாறியது. அங்கே எல்லா வசதிகளும் இருந்தன.

வளரும் வயதில் குழந்தைகளுக்குத் தேவை காம்ப்ளான்



காம்ப்ளான்®

ஒன்றில்தான் அவர்களுக்கு அன்றுடம் தேவைப்படும் 23 ஊட்டச் சத்துக்கள் அடங்கியுள்ளன

வளரும் குழந்தைகளுக் கென்றே சிறப்பான சில தேவைகள் உள்ளன— வளரும் வயதிலே உடம் புக்குத் தேவைப்படும் மிகச் சிறந்த புரதம், 22 மூலாதார ஊட்டச்சத்துக்கள்—அளிக் கிறது காம்ப்ளான். மறவாதீர், டாக்டர்களின் சிபாரிசு பெற்ற, திட்டமிட்ட உணவு காம்ப்ளான.

காம்ப்ளான் கிடைக்கிறது இனிய சுவைகளில்: சாக்கலேட், ஏலக்காய்—குங்குமப்பூ மற்றும் ஸ்ட்ரபெர்ரி— மற்றும் சாதாரகத்திலும் கூட.

GLC.6-2012 TM

இலவசம்! 32 பக்கங்கள் கொண்ட கைப்புத்தகம். ''குடும்பத்திற்கான பரிபூரண ஊட்டச் சத்துணவு வழிகாட்டி'' 50 பைசா தபால் தலை இணைத்து இம் முகவரிக்கு எழுதிப் பெறுக: தபால் பை நம்பர் 19118, (Comp) பம்பாய் 400 025.

திட்டமிட்ட பரிபூரண உணவு
காம்ப்ளான்®

கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் பட்டியல்—தொடர்ச்சி


உறுப்பினர் எண், பெயர், முகவரி

642. ஆர். மணி, 2/115, கூனவேலம்பட்டி, புதூர், சேலம் மாவட்டம்.
643. டி. சாயிலட்சுமி, 68/சி, நாடார் வீதி, நாயக்கர் தோட்டம், கோவை—1.
644. ஆர். சுந்தர், S/o. ராமமூர்த்தி, ஆசிரியர், விக்கிரபாண்டியம்—610 107.
645. பி. செந்தில்குமரன், 5, பாராங்குச அக்ரகாரம் மன்னார்குடி.
646. எம். எம். ஹிதாயத்துல்லா, 162, காந்தி ரோடு, ராஜமன்னார்குடி—614 001.
647. ஆர். சுஜாதா, 'ரங்க விலாஸ்', பி. ஏ. சடகோபன் தெரு, மன்னார்குடி—614 001.
648. க. பத்மாவதி, 7, சர்வமான்ய அக்ரகாரம், நீடாமங்கலம்—614 404.
649. மோ. அருண், 26—சி, கோபாலசமுத்திரம் வடக்குவீதி, மன்னார்குடி—614 001.
650. க. குமரேசன், 62, தேவாங்கர் கிழத்தெரு, மதுரை ரோடு, ஸ்ரீவில்லிபுத்தூர்
651. சு. ஆனந்தன் 33/பி, புதுப்பேட்டை வடக்குத் தெரு, சிதம்பரம்.
652. எஸ். சுரேஷ், 41/402, 2—வது புத்தன் தெரு, மணக்காடு, திருவனந்தபுரம்—9.
653. ஆர். மகேஷ்குமார், 39, சின்னக் கம்மாளத்தெரு, திருச்சி—8.
654. பி. பாஸ்கர், சி/51, இருநெல்வேலி சாலை பிளாக்—2, நெய்வேலி—1.
655. வி. எஸ். வித்யா, சி—33, அமெரிக்கன் சாலை, வட்டம்—25, நெய்வேலி—3.
656. பா. ஹரிஹரன், 3/321, தொளார் கைகாட்டி, இறையூர், பெண்ணாடம்—606 111.
657. ஆர். ராமகிருஷ்ணன், வேத பாட சாலை ஆத்தூர்—603 101.
658. ஆர். வசுமதி, 76, மேற்கு குளக்கரைத் தெரு, திருவள்ளூர்—602 001.
659. K. Ramkumar 2715/B II-Main 8th Cross V.V. Mohalla Mysore 570002
660. மு. கா. நெடுமாறன், 243, கோவிந்த செட்டித் தெரு, காவேரிப்பட்டணம்—635 112
661. N.V. Dev 18/1, Clarkspet-6' Amstrong Road Cross, Bangalore-1.
662. எஸ். ரமேஷ், த/பெ. சி. சண்முகம், கண்டவராட்டி—604 502.
663. சு. மீரா, 6/36, திருவள்ளுவர் நகர், இராமநாதபுரம் போஸ்ட், கோவை—18.
664. எஸ். ராதை, 141, வடக்குச் சித்திரை வீதி, ஸ்ரீரங்கம், திருச்சி—6.
665. வி. விசாலாட்சி, 11, 4—வது கிராஸ் தெரு, வள்ளீஸ்வரன் தோட்டம், சென்னை—28
666. என். மீரா. பிளாட் எண்: 215 நடேசநகர் சென்னை—92.
667. ஜி. எஸ். கணேஷ் 32 மகாதேவன் தெரு, சென்னை—33.
668. ஹெச். ரமா. C/o. எம். ஹரிஹர ஐயர் சந்நதித் தெரு வலிவலம்—610 207.
669. ஆர். ரமேஷ் 21 இரண்டாவது மெயின் ரோடு, கஸ்தூரிபாய் நகர் சென்னை—20.
670. ஆர். ரம்யா 70 வாயிட்ஸ் ரோடு, சென்னை—14.
671. கே. ஸ்ரீராம் 30 பழனி ஆண்டவர் கோவில் தெரு, சென்னை—11.
672. K.S. Raman C-II/115, Lodicolony, New Delhi-3.
673. வி. பாபு 229 அக்ரகார வீதி ஈரோடு—638 001.
674. ஏ. இந்துமதி 32/ஏ புத்தர் தெரு கிழக்குத் தாம்பரம் சென்னை—59.
675. எஸ். ஜெயஸ்ரீ த/பெ. ஆர். பி. சுப்பிரமணியம், மானேஜர், கனரா வங்கி கோபி செட்டி பாளையம்
676. எஸ். லட்சுமண் C/o. ஆர். சிவசுப்பிரமணியம் கார்டன் ஹாஸ்டல் சாம்ராஜ் எஸ்டேட் நீலகிரி—4.
677. த. ரத்தினகுமார் த/பெ. என். தண்டபாணி ஜோதிடர் புதுத்தோட்டம் பல்லடம் ரோடு திருப்பூர்—4.
678. உ. இராஜகோபால் நெல்லை கனி பவன் ஆலந்துறை கோவை—641 101.
679. டி. ஆர். சரஸ்வதி, 15 வீரராகவ கவுண்டர் தெரு, தர்மபுரி.
680. டி. ஏ. சசிகலா 2 அக்ரஹார வீதி தாராமங்கலம்—636 502.
681. அ. சுப்பிரமணியன் 35 காரைக்காட்டு வெள்ளாளத் தெரு சிதம்பரம்—1.
682. என். மணிகண்டன் 158 மேலத்தெரு கே-னேரி ராஜபுரம் —612 201.
683. இ. கேசவன் சி—3 ஔவை நகர் தருமபுரி—5.
684. ஜி. இளஞ்செழியன் 72 எழில்நகர் வ. உ. சி. நகர் அஞ்சல் தஞ்சை—7.
685. இல. சுந்தரராஜன் 101 தச்சத்தெரு பட்டுக்கோட்டை—1.
686. டி. சித்ரா 211—பி என். ஜி. ஓ. காலனி திருநெல்வேலி—7.
687. ஆர். விஸ்வநாதன் 17 ஜி. கே. எஸ். நகர் பாப்பநாயக்கன்பாளையம் கோவை—37.
688. பி. எஸ். வசந்தி 6/87 பூசாரி மாரியப்பத்தேவர் வீதி இராமநாதபுரம் கோவை—18
689. ஆர். சரஸ்வதி ஈ—110 கெமிகல்ஸ் காலனி மேட்டூர் அணை—2.
690. எஸ். ஆர். பிரபு 102 ஐந்தாவது தெரு காந்திபுரம் கோவை—12.
691. சி. ஆர். பாலகிருஷ்ணன் T—69—D கோவைப்புதூர் கோவை—42.
692. ப. பாலமுருகன் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைப் பள்ளிக்கூடம் மோகனூர் 637015
693. டி. செந்தில்குமார் 105 பெண்ணாடம் வெங்கட்ராமன் தெரு சேலம் —1.

694. கே. வி. ரவி 4 அம்பாயிரம் சாவடி தெரு சேலம்—1.
695. என். எல். அரி 59 அய்யங்குள அக்ரகாரம் திருவண்ணாமலை.
696. கே. வெங்கடேஷ்: ஒன்பதாம் வகுப்பு 'சி' அரசுயர் பள்ளி, வெள்ளோடு—638 112.

697. மீ. ஸ்ரீ. நித்யா, 5, தெற்கு வெளி வீதி, மதுரை—1.
698. கே. சக்திநாதன், 5, சம்பத் நகர், சூளீஸ்வரன்பட்டி—642 006.
699. ஆர். ஜானகிராமன், 10, ரத்தினம் தெரு, சீனிவாசபுரம், கரூர்.
700. எஸ். பாலமுருகன், த./பெ. வி. என். சக்திவேல், மெயின்ரோடு, வெள்ளக் கோவில்—638 111.
701. டி. சுதா, 25/பி, திலகர்வீதி, ஆர். எஸ். புரம், கோவை—2.
702. ஏ. சத்தியவதி, சாவித்திரி டீ ஸ்டால் கே. என். பி. ரோடு, காரமடை—641 104.
703. டி. ரமேஷ்பாபு, 8—ஏ, சாலிச்சு அப்பு முதலி தெரு, புதுப்பேட்டை, குடியாத்தம்.
704. சுப. மகேஸ்வரி, 11, விவேகானந்த நிலையம் கலவை சாலை, ஆர்க்காடு—632 503.
705. பி. ஜான்சன் சாமுவேல் ஜேசுதாஸ், 'எபனேசர் இல்லம்', கன்னிராஜபுரம்—626 135.
706. சி. எல். சரவணன், 50, தெற்குப் பெருமாள் மேஸ்திரி வீதி, மதுரை—1.
707. பி. சங்கீதா, பிளாட் எண்—519, அண்ணாநகர், மதுரை—20.
708. ஏ. என். வெங்கடகிரி ராஜன், 92]பி, பி. டபிள்யூ. காலனி, காமராஜர் தெரு, மதுரை.
709. ஸ்ரீ. பிருந்தா, 26, வடக்கு ரத வீதி, ஸ்ரீவில்லிபுத்தூர்.
710. எஸ். உமா, 44]7, சம்பந்தமூர்த்தி தெரு, மதுரை—1.
711. சுப்பு பூங்கோதை (சுபா), 145/9, பள்ளிவாசல் தெரு, கொடைக்கானல்.
712. வி. சத்யநாராயணன், பி—31, வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு, பெரியார் நகர், ஈரோடு—1.
713. கே. கோவிந்தராஜன், 32, எம். பி. எஸ். அக்ரஹாரம், குளித்தலை, திருச்சி மாவட்டம்
714. செ. அமுது அரசி, 60, முடிச்சூர் சாலை, தாம்பரம், சென்னை—45.
715. எல். பிரியா, 33, எஃப், குடும்ப நலக் குடியிருப்பு, வடக்கு ரத வீதி, தென் திருப்பேரை.
716. எஸ். ஸ்ரீனிவாசன், C/o. ஸ்ரீனிவாசா நியூஸ் மார்ட், தேர் வீதி, சேலம்—1.
717. நீ. ஆனந்த், 15, எல். ஐ. சி. காலனி, திருநெல்வேலி—11.
718. கே. எம். ஒளி, அறை எண்: 19, வெள்ளாள ஹாஸ்டல், கோபிசெட்டிப்பாளையம்—
719. எஸ். ரவிசங்கர், 753]ஏ, சீதாராமன் வீதி, அம்பூர்பேட்டை, வாணியம்பாடி635 751
720. எஸ். ஜெய்குமார், 26, வடக்கு கீழவாடித் தெரு, திருக்காட்டுப்பள்ளி.
721. பழ. நாகப்பன், ரவில் வீடு, 1—97, மெயின் ரோடு, மேலச்சிவபுரி—622 403.
722. எம். வி. சண்முகம், 26, துளசிங்கம் தெரு, பெரம்பூர்— சென்னை—11.
723. சித. நாராயணன், 26, குமரகோயில் தெரு, திருவாரூர்—8.
724. ச. பாலாஜி, 81, விநாயகர் கோவில் தெரு, கொரட்டூர், சென்னை—80.
725. பா. சேகர், 18—ஏ, லட்சுமி மாநகர், தெற்குத் தெரு, ஆறுமுகநேரி—628 202.
726. பி. எஸ். பேபிலதா, C/o. பி. எஸ். செல்வன், பஞ்சலிங்கபுரம், சாமிநாதபுரம் போஸ்ட்—638 104.
727. நா. தமிழ்ச்செல்வன், ஆர்ப்பாக்கம், அஞ்சல்—606 752.
728. ரா. ராமசுப்பிரமணியன், C/o. நரசிம்மன், சுப்பிரமணிய விலாஸ், ஜலகண்டபுரம்—புரம்—636 501.
729. பி. எஸ். தேவசேனாதிபதி, 32, ஆரோக்கியசாமி வீதி, சாயிபாபா காலனி, கோவை—38.
730. வி. சிவராமன், 49, அக்ரஹாரம், ஆனாங்கூர் அஞ்சல், விழுப்புரம்.
731. கே. சங்கர், 24, கற்பக விநாயகர் கோவில் தெரு, அரக்கோணம்.
732. ஆர். சுஜாதா, 73/1, பஜார் ரோடு, சென்னை—4.
733. எஸ். வி. ராமதாஸ், C/o. ஏ. ஆர். கே. பண்ணை, கீழ அமராவதி, மேல அமராவதி அஞ்சல்—612 801.
734. எல். சீனுவாசன், 25, கிழக்கு மாட வீதி காஞ்சிபுரம்,—3.
735. எல். உஷா, 3—ஏ, சுப்பராயர் தெரு, பெரிய காஞ்சிபுரம்—2.
736. எஸ். சீதாலெட்சுமி 32 எம். பி. எம். ஸ்டோர்ஸ், மேலச்சிந்தாமணி, திருச்சி—2.
737. எம். பசுபதி, 330, காவேரி பவர் பிரஸ், ஜவஹர் பஜார், கரூர்.
738. நா. ஸ்ரீராம்குமார், 99, மேற்குத் தெரு, சிறுகமணி அக்ரஹாரம், பெருகமணி வழி. திருச்சி மாவட்டம்.
739. எஸ். பவானி, 70, என். ஜி. ஜி. ஓ. காலனி, திருவள்ளூர்—602 001.
740. பி. கந்தவேல், 16, பஸ்லுல்லா சாலை, சென்னை—17.
741. பி. குருமூர்த்தி, 40, நாயக்கம்மார் தெரு, சென்னை—33.
742. கே. ஸ்ரீவித்யா, 44, முத்தியால் செட்டி தெரு, சென்னை—7.
743. கோ. ஸ்ரீதர், 28, மு. பி. கோவில் தெரு, சின்னசேலம்—606 201.
744. இரா. குப்புசாமி, 2, சம்பத்குமார் தெரு, கிழக்குத் தாம்பரம் சென்னை—59.
745. ஆர். கர்தர், த/பெ. ஆர். ராஜப்பன், மெயின் ரோடு, சிக்கலவம், புலியூர், நாகப் பட்டினம் தாலுகா.
746. N. Kerthikeyan 5-A/78 WEA Karolbagh, New Delli-5
747. எஸ். நிலோபர் D/o. டாக்டர் மரூத், வள்ளுவர் தியேட்டர் பின்புறம், பழனி.
748. கே. டி. வேதமூர்த்தி, 179, மேலரத வீதி, சிதம்பரம்—1.
749. வி. சுதர்சன், 8, பெரியவீதி, சத்தியமங்கலம், பெரியார் மாவட்டம்.
750. வி. முரளி, 8, பெரிய வீதி, சத்தியமங்கலம், பெரியார் மாவட்டம்.

(இன்னும் வரும்)



பறவைகள் பற்றிய பழமொழிகள்

-: முடிவு :-



கடந்த ஜூலை இதழில் பறவைகளை பற்றிய பழமொழிகளை எழுதி அனுப்பும்படி கேட்டிருந்தோம். மொத்தம் 412 பேர் இப் போட்டியில் கலந்து கொண்டார்கள். அவர்களில் 214 பேர் நூற்றுக்கு மேற்பட்ட பழமொழிகளை எழுதி அனுப்பி யிருந்தார்கள்.

எல்லாவற்றையும் கவனமாகப் பரிசிலனை செய்து, கீழ்க்கண்ட முடிவை அறிவிக்கிறோம்:

முதல் பரிசு (அனுப்பிய பழமொழிகளில் சரியானவை — 360)

மு. சேக் அலாவுதீன் *(3149)*
67, காஜியார் வீதி,
காரைக்கால் — 609 602

இரண்டாவது பரிசு (அனுப்பிய பழமொழிகளில் சரியானவை — 225)

ச. சிவக்குமார் *(3318)*
118, ஹாஜியப்பா தைக்காத் தெரு,
காயல்பட்டணம்.

முதல் பரிசு பெற்ற மு. சேக் அலாவுதீனுக்குத் தொடர்ந்து ஓராண்டுக்கும், இரண்டாவது பரிசு பெற்ற ச. சிவக்குமாருக்குத் தொடர்ந்து ஆறு மாதங்களுக்கும் 'கோகுலம்' அன்புப் பரிசாக அனுப்பி வைக்கப்பெறும்.

—ஆசிரியர்

சிரிப்பு—ஒரு தொகுப்பு

✽ இடுக்கண் வருங்கால் நகுக!

—வள்ளுவர்

✽ சிரித்துச் சிரித்துக் கவலைகளின் கூர் முனைகளை மழுங்கச் செய்து கொள்ளாமல் இருந்திருந்தால், நான் எப்போதோ செத்திருப்பேன்!

—காந்தியடிகள்

✽ சிரிப்பிலும் ஓர் உன்னதமான சுவை இருக்கிறது! அதனாலேயே அதனை எல்லோரும் விரும்புகிறார்கள்.

—தாமஸ்

✽ சமுதாயத்தில் மனிதன் அணியக் கூடிய மிக உயர்ந்த ஆடை 'நகைச் சுவை' என்னும் நல்லாடைதான்.

—தாக்கரே

✽ பிறர் வெறுக்கும்படி, அளவுக்கு அதிகமாக எவன் சிரிக்கிறானோ அவனைப் போல் துன்புறுபவன் எவனுமிலன்!

—ரிட்சர்

✽ பற்களை வெளிக் காட்டாமல் சிரிப்பவன் ரகசியங்களை உள்ளடக்கிக்கொள்பவன்; உரக்கச் சிரிப்பவனின் உள்ளமோ வெள்ளை!

—கோல்ட்ஸ்மித்

✽ துன்பம் நிறைந்து சோர்ந்து கிடக்கும் உன் மனத்தைத் திறப்பது சிரிப்பு என்னும் திறவுகோலே!

—தாமஸ்

✽ மிருகங்களால் அன்பையும், ஆத்திரத்தையும், ஏன்; அழுகையைக் கூட வெளிப்படுத்த முடியும்: ஆனால், சிரிப்பை மட்டும் வெளிப்படுத்த முடியாது.

—டிரைவன்

✽ ஆண்டவன் படைப்பில் மனிதன் மட்டுமே சிரிக்கும் தகுதி பெற்றவன்! அதே வேளையில் பிறர் பார்த்துச் சிரிக்கும் நிலைக்கு ஆளாகிறவனும் அவனே!

—கிரிவிதே

—தொகுப்பு: முத்து மணியன்



தேவையா சேவையா?

ஆர். பொன்னம்மாள்

''போம்மா, இதை நான் கொண்டு போகமாட்டேன். பசங்களெல்லாம் 'பழையசோறு'ன்னுகேலி செய்யறாங்க..., பலகாரம் செஞ்சு குடு...,'' அந்த அலுமினிய சம்புடத்தைக் காலாலே எத்தினான் ராஜு.

''டே, டேய்! சோத்தைக் காலாலே எத்தலாமாடா... அன்ன லட்சுமி இல்லே... அரிசி என்ன விலை விக்குது! எண்ணெய் விலை என்ன?... தினம் வீட்டிலே பலகாரம் போட முடியுமாடா? அதுவுந் தவிர வீட்டிலே நான் நீட்டி முழக்கி மாவாட்டிக்கிட்டிருந்தா வெளி வேலையை எவ கவினிப்பாள்...?''— அஞ்சலை பேசிக் கொண்டிருக்கும்போதே முணு முணுத்தபடி பள்ளிக்குப் புறப் படத் தயாரானான் ராஜு.

''என்னம்மா நீ... தம்பி பள்ளிக் கூடம் போகிறப்போ., தினமும் ஏதா வது சொல்லிக்கிட்டு... டேய் ராஜா, இந்தாடா, இந்த ஒரு ரூபாய்க்கு ஏதாச் சும் வாங்கிச் சாப்பிடு. நாளையிலே யிருந்து மங்காத்தா அத்தை கிட்டே சொல்லி, இடியாப்பமோ, இட்டிலியோ எடுத்து வைக்கச் சொல்றேன்.''

அவனை வழிமறித்து ஒரு ரூபாயை அவன் கையில் அழுத்தினாள் அவன் அக்கா வள்ளி.

''ஒரு ரூபாய்க்கு என்ன வருமாம்!'' என்று முணு முணுத்தாலும் அதை வாங்கிக் கொண்டான்.

''இதோ பாரு... இனி அந்த நசுக்கல் தூக்கிலே டிபன் கொண்டு போக மாட் டேன்! புதுசா எவர்சில்வர் டிபன் பாக்ஸ் வாங்கித் தந்தாத்தான்...''— தமக்கையிடம் எச்சரித்து விட்டுப் போனான் அவன்.

* * *

பள்ளி இடைவேளை. ஐஸ்கிரீம், கமர் கட், கடலை உருண்டை — இப்படிக் கண்டதையும் தின்றுவிட்டு, இரண்டு டம்ளர் தண்ணீருடன் வயிற்றைச் சரிக் கட்டி வைத்திருந்தான்.

''டேய் ராஜு... நாங்களெல்லாம் எக்ஸ்கர்ஷனுக்குப் பேர் கொடுத்துட் டோமே! நீ வரல்லியா?'' என்றான் மணி.

''டேய், நீ வந்தா ஜாலியா இருக் கும்டா... வாடா'' — கெஞ்சினாற்போல் சொன்னான் மகேஷ்.

ராஜுவுக்குக் கோபம் கோபமாக வந்தது. எக்ஸ்கர்ஷன் அது இதெல் லாம் எதற்கு? படிப்பு மட்டும் சொல் லிக் கொடுத்தால் போதாதா? அவனது இல்லாமையைப் பறைசாற்றுவதுபோல், நேற்று பாட்மிண்டன் 'பேட்'டும், பந் தும் கொண்டு வந்தால்தான் விளையாட் டுக் குழுவில் இடம்பெற முடியும் என்று தீர்மானமாகச் சொல்லி விட்டார் மாஸ்டர்.

வீட்டிலே அம்மாவானால் இல்லைப் பாட்டுப் பாடிக் கண்ணீர் வடிக்கிறாள்.

மகேஷுக்கு நான்கு அடுக்குப் பள பளப்பான டிபன் செட்டில், அவன் அம்மா காரில் சாப்பாடு கொண்டுவந்து ஊட்டுகிறாள். தினம் வித விதமாக, ருசி ருசியாக... கட்லெட், பிரியாணி, வெங் காய ஊத்தப்பம், பட்லர் ரவாவாமே? அடேயம்மா! தொட்டுக்கப் பட்டாணி போட்ட காரத் துவையல்... அப்பா... நினைக்கும் போதே எச்சில் ஊறுகிறது!

அசோக் பாஸ் மார்க் வாங்கிப் பாஸ் பண்ணுகிறான். அதுவும் போன வரு ஷம் பெயில். இதற்கு அவன் வீட்டில் எத்தனை வசதி செஞ்சு கொடுத்திருக் காங்க... டேபிள், சேர், ஃபேன், டேபிள் லாம்ப், சோபா-கம்-பெட், கொசுவலை கட்டிய ஃபோம் மெத்தை

யோடு கட்டில், விதவிதமான பேனு, குட்டி லைப்ரரி, புஸ்தகம் வைச்சுக்க அழகழகான அலமாரி....

நம்ம வீட்டிலே ஓர் இழவும் இல்லே. ராத்திரி பூரா நை நைன்னு பம்ப் அடிக்கிற சத்தம்... பக்கத்து வீட்டுக் கோபால் கண்டதைக் குடிச்சுட்டு வந்து பண்ணுகிற ரகளை, குப்பம்மா அத்தையுடைய பேத்தி ஒண்ணு ராப் பூரா ஓயாமே இருமுது. குத்திருமலாம். இந்த அழகிலே 'ஙொய்'யினு சங்கீதம் பாடுகிற கொசுக்கள், இன்ஜெக்ஷன் போடுகிற மூட்டைப் பூச்சிகள், தட்டிக்கு அந்தப் பக்கம் காய்கறிக் கடைக்



கண்ணம்மா வீட்டிலே அழுகின காய் கறி நாத்தம். இதுலே எங்கே நிம்மதியாத் தூங்க முடியுது!

குப்புறப் படுத்து எழுதி எழுதி முது கெலும்பும் கழுத்தும் ஒரே நோக்காடு. புஸ்தகத்தை வைக்கச் சீரா ஒரு இடம் இல்லாததாலே ஓரமெல்லாம் வாழைக் குருத்துப் போலச் சுருண்டு கிடக்குது.. கரப்பான் பூச்சி, கரையான் தொல்லை வேறே! வைச்ச சாமான் வைச்ச இடத்திலே இருக்கா... எழுத உட்கார்ந்ததுமே, ''என்னடா எழுதறே''ன்னு தட்டிக் கதவைத் திறந்துட்டு யாராவது மாத்தி மாத்தி வந்துக்கிட்டே இருக்காங்க.

அன்னைக்கு மணி வந்தானே! உட்கார வைக்க ஒழுங்கா ஒரு ஸ்டூல் உண்டா... நின்னுக்கிட்டே இருந்து நோட்டை வாங்கிட்டுப் போனான்... சே, அவமானம்!

நான் ஏன் இப்படி இருக்கணும்...? நான் நல்லாப் படிக்கிறேன். நாளைக்குப் பெரிய வேலை பார்த்து நிறையச் சம்பாதிப்பேன். அப்போ அம்மாவையும், அக்காவையும் சந்தோஷமா வைச்சுப்பேன்! அதனாலே அவுங்க இன்னிக்குச் சிரமப்பட்டா தப்பில்லே... மணியும் மகேஷும் சொல்றாப் போல என் தேவைகளை அழுது அடம் பிடிச்சு வாங்கிறதுதான் உண்டு. இரக்கம் பார்த்தோம், கேலிக்கு ஆளாகணும்.'

ராஜுவின் மனத்தில் ஜெட் வேகமாக இத்தனை எண்ணங்களும் மோதின.

''என்னடா இவன்... ஒண்ணுமே சொல்லாம யோசிச்சிக்கிட்டிருக்கான்?'' என்றான் மணி.

''நாளைக்குப் பணத்தோட வரேண்டா'' — தீர்மானமாக ராஜு கூறவும், பள்ளி மணி அடிக்கவும் சரியாக இருந்தது.

* * *

''என்னக்கா அம்மாவுக்கு?'' இழுத்துப் போர்த்திக்கொண்டு படுத்திருந்த அம்மாவைச் சுட்டிக் காட்டிக் கேட்டான் ராஜு.

''என்னமோ தெரியலே... ஊரெல்லாம் பரவிக்கிட்டிருக்கிற விஷக் காய்ச்சலோ என்னமோ.. மதியமே கஞ்சி குடிக்கலே... படுத்திருச்சு. முடியலென்னு காலையிலே வேலைக்குப் போகாமலே இருந்திருக்கணும்...'' — அக்கா வள்ளி தன்பாட்டில் புலம்பிக்கொண்டிருந்தாள்.

''டாக்டரைக் கூட்டியாரவா?''

''அம்மா கோவிக்கும்... கசாயம் வைச்சுக் கொடுத்திருக்கேன். இதைப் பார்த்தியா சம்புடம்!''

பளபளவென்று இருந்த சம்புடம் ராஜுவின் மனத்தை உறுத்தியது.

''நாயர் ஓட்டல்லேருந்து சூடா சப்பாத்தி, குருமா வாங்கி வைச்சிருக்கேன். எடுத்துக்கடா... நானும் வேலைக்குப் புறப்படறேன்.''

வள்ளி போய் விட்டாள். சப்பாத்தி, குருமா சூடாகத்தான் இருந்தது. ஆனால் ராஜுவுக்குத்தான் உள்ளே இறங்கவில்லை.

அம்மா வேலை பார்த்த வீடுகளின் வேலையையும் சேர்த்துப் பார்த்ததாலோ என்னவோ, இரண்டாம் நாளே வள்ளியையும் ஜுரம் பற்றிக் கொண்டது. ஆளுக்கொரு மூலையில் சுருண்டு கிடந்தார்கள்.

விடியற்காலை மணி நான்கு. வள்ளி மெதுவாக ராஜுவை எழுப்பினாள்

''ராஜு, என் கண்ணுல்லே... நீ ஒரு உதவி செய்யணும். உன்னை விட்டால் வேறே வழியில்லே... ஓரடி கூட எடுத்து வைக்க முடியல்லேடா... நீ போய்ச் சீதம்மா வீட்டிலேமட்டும் பம்ப் அடிச்சுட்டு வந்துடு... வக்கீலய்யா வீட்டிலே, டாக்டர் வீட்டிலே லீவு சொல்லிடு... மத்தது பாப்பம்மா கிட்டே சொல்லிக்கிறேன். ரெண்டுநாள் முன்னே தான் 25 ரூபா கைமாத்து வாங்கி இருக்கேன். சீதம்மா கூச்சல் போடும்.''

ராஜுவுக்கு அந்த விடியற்காலைத் தூக்கம் கரும்பாயிருந்தது. முனகிக் கொண்டேதான் போனான். 'சீதம்மா வீட்டு கார் ஷெட் இதை விடப் பெரிசாய் இருக்கும். அங்கே போய்த் தூங்கலாம். இதோ கூப்பிடு தூரம்தானே!' என்று கண்ணை மூடிக்கொண்டே போனவன் கேட்டை நெருங்கும்போதே எஜமானி அம்மாளின் கூப்பாட்டைக் கேட்டு அயர்ந்து போனான். அவன் தூக்கம் போன இடம் தெரியவில்லை.

''பணம் வாங்கறப்போ மணலைக் கயிறுத் திரிப்பேன்... வானத்தை வில்லாய் வளைப்பேங்கறது... இதுவரை ஐம்பது ரூபா வாங்கியாச்சு. இன்னிக்கிக்குத் தண்ணி வர்ற நாள்... தொட்டியை ரொப்பணும். மணி நாலேகால். ஐந்தரைக்கெல்லாம் தண்ணி நின்னுடும். மாணிக்கம், வள்ளி வீடு தெரியுமானு ஒரு நடை போய்ப் பார்த்துட்டு வா.''

''இதோராஜு வந்துட்டாங்கம்மா'' என்ற மாணிக்கம் கதவைத் திறந்தபடி ''சீக்கிரம் போயி பம்ப் அடி'' என்று முடுக்கினான்.

விளம்பரம்

"ஏண்டா குப்பு, பரீட்சை சமயத்திலே சினிமாவுக்குப் போறியே?"

"அந்த சினிமா விளம்பரத்திலேதான் 'படமல்ல; இது பாடம்'னு போட்டிருக்கே"


—நீடை அ. கதிர்வேல்



''இவன் என்னத்தை அடிச்சான்!... பணம் வாங்கறப்போ பெரியவங்க வர்து... வேலை செய்யறதுக்கு இந்தப் பொடியனை அனுப்பிச்சாட்டாளாக்கும்!'' சலித்துக் கொண்டே உள்ளே போனாள் சீதம்மா.

பத்தடி ஆழம், பன்னிரண்டடி நீளம் உள்ள சிமெண்ட் தொட்டி. மாக்கு மாக்கென்று அடித்தும் லேசில் நிரம்புவேனென்கிறதா? முக்கால் மணி நேரம் ஆனதும், நெற்றியிலிருந்து வியர்வை காதோரம் வாய்க்கால் கட்டிக்கொண்டு ஓடியது.

மாணிக்கம் அருகில் வந்து மெதுவாக ''வேர்வையைத் துடைச்சுக்கப்பா. அதுக்கு வேறே ஏச்சு வாங்கப் போறே! நாமெல்லாம் குடிக்கத் தண்ணி இல்லாமே கஷ்டப்படுறோம்... இவுங்க தோட்டத்துக்குப் பாய்ச்சவும், மீன்



மட்டம்

"யானை படுத்தால் குதிரை மட்டம் என்பார்கள். ஸ்கூல் பஸ் படுத்தால்...?

"பள்ளிக்கூடம் மட்டம்"

—வி. வசுமதி (39)

தொட்டிக்கும் உழைப்பை விலை பேசிச் சேமிச்சு வச்சுக்கறாங்க. ஜீரணத்துக்கு மருந்து சாப்பிடுகிற கும்பல்! சோப்புப் போட்டால் நுரை வருகிறதில்லேன்னு நினைத்துத் தண்ணியை உபயோகிக்கிறதில்லே. பாவம், உன் கை செவந்து போச்சு... உங்காத்தா பார்த்தா உயிரையே விட்டுடும்... தள்ளு. நான் கொஞ்சம் அடிக்கிறேன். இந்தப் பைப்பாலே நீ செடிகளுக்குத் தண்ணி ஊத்து. வேரிலே அடிச்சு மணலைப் பறிக்காமே லாகவமா தண்ணி பாய்ச்சு. ஏதோ எக்ஸ்கர்ஷன் போகவேணும், டிபன் பாக்ஸு வேணுமின்னு கேட்டியாம். ஆத்தாளுக்கு மருந்து வாங்க வேணுமுன்னு தான் உன் அக்கா அட்வான்ஸு வாங்கிச்சு... அவள் மனசாரக் காசு செலவழிக்க மாட்டாள். எல்லாம் தம்பிக்கு, படிப்புக்கு, புஸ்தகத்துக்கு, தீவாளிக்கு, சட்டைக்குன்னு சதா உன் பேச்சுத் தான்..."

மாணிக்கம் சொல்லச் சொல்ல மனசுக்குள் பிள்ளைப் பூச்சி ஓடினாற் போல் குறுகுறுவென்றது ராஜுவுக்கு. தண்ணீர் பாய்ச்சிக் கொண்டே சொன்னான்.

"இப்ப எட்டாவது வந்திட்டேன். இன்னும் மூணு வருஷம்... அப்புறம் டைப் படிச்சு ஒரு வேலை தேடிக்கிட்டா ரெண்டு பேரையும் சொகுசா வைச்சுக்க மாட்டேன்!"

ராஜுவின் பேச்சை வெட்டுவது போல் எஜமானியின் குரல் கேட்டது. மாணிக்கம் ஓடிவிட்டான். தண்ணீர் அடித்துக்கொண்டே சிந்தித்தான், ராஜு. எண்ணக் குமிழ்கள் வெடித்தன.

"இந்த எஜமானியைப் போலத் தானே நானும் இருக்கிறேன்! ஊரிலே தண்ணீருக்குக் கஷ்டம்... இங்கே இத்தனை விரயமாகிறது. அம்மாவும், அக்காவும் அவசியமான தேவைகளைக் கூடக் குறைத்துக்கொண்டு, உழைத்து உழைத்து உருக் குலைந்து போக, நான் மதியம் டிபன், எக்ஸ்கர்ஷன், பேட், பந்து, டிபன் பாக்ஸ்.... சேச்சே! நான் ரொம்ப மோசம்... இன்று ஒரு நாளுக்கே என் கை அசந்து, தோல் எரிகிறதே! இதோடு எத்தனை வீடுகளில் துணி துவைக்கவும், பாத்திரம் தேய்க்கவும் செய்கிறார்கள்! ஒரு மணி நேரம் நின்றதுக்கே கால் கடுக்கிறதே! அவர்கள் இதோடு பள்ளிக்கூடப் பிள்ளைகளைக் கொண்டு விடவும், இடைவேளை ஆபீஸ்களுக்குச் சாப்பாடு எடுத்துப் போகவும் எத்தனை உழைக்கிறார்கள்!

என்னால் முடிந்த அளவு அனாவசியச் செலவுகளைக் குறைக்கலாமல்லவா?

மணி, அசோக், மகேஷ், போன்றவர்களைப் பார்த்து ஆடம்பரத்தை நான் கற்றுக் கொள்வதைவிட, என்னைப் பார்த்து அவர்கள் சிக்கனமாக மாறினால் அதல்லவா எனக்குப் பெருமை!

நாளை கைக்கு வளையலும், கடிகாரமும் மாட்டுவதை விட இன்று கையில் சிரங்கோ, கனுக்கோ இல்லாமல், அடிபடாமல் பாதுகாக்க வேண்டியதுதான் முக்கியம்! இனி பொறுப்புணர்ந்து நடந்து கொள்வேன். வீணாக அழுது அடம் பிடித்து அம்மா அக்காவை அல்லல் படுத்த மாட்டேன்.

எதிர்காலத்தில் நான் கைநிறையச் சம்பாதிக்கும்போது இப்போது உருக்குலைந்துபோன என் அம்மா சுகமாக உயிரோடு இருக்க வேண்டும். ஆண்டவனே, இதுவரை அம்மாவின் அருமை தெரியாமல் நடந்து கொண்டு விட்டேன். என்னை மன்னித்துவிடு."


"ஏண்டா ராஜு அழுறே? கை வலிக்குதா? போதும் போ... அரைத்தொட்டி ரொம்பிடிச்சே... அம்மா போகச் சொல்லிட்டாங்க..."

மாணிக்கத்தின் குரல் கேட்டுத் தன்னைச் சுதாரித்துக் கொண்டான் ராஜு.

ராஜுவின் மாற்றத்துக்குக் காரணம் இன்றளவும் அம்மா அஞ்சலைக்கும், அக்கா வள்ளிக்கும் புரியவில்லை.

அவர்களுக்கு மட்டுமா? மணி, மகேஷுக்குக்கூட விளங்கவில்லை.

எனக்கும் உங்களுக்கும்தான் தெரியும் அந்த ரகசியம்!

இளமையில் இவர்கள்

14 அணாவில் படிப்பை முடித்தவர்!

ஏழாவது வயதில் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து ஏழு மாதங்களே கல்வி கற்ற ஒருவர், ஒரு பெரிய பல்கலைக் கழகத்தில் பன்னிரண்டு ஆண்டுகள் பேராசிரியராகத் திகழ்ந்தார்! ஆம், பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், அவரது சொந்த ஊரிலிருந்த திண்ணைப் பள்ளிக் கூடத்தில் சேர்ந்து ஏழு மாதங்களே படித்தார். இரண்டணா பள்ளிக்கூடச் சம்பளம். 14 அணாவில் பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டார். சிறு வயதிலே இளம்பிள்ளை வாதத்தால் அவர் பீடிக்கப்பட்டதால், தொடர்ந்து அவரால் படிக்கவில்லை.

பண்டிதமணியின் சொந்த ஊர் மகிபாலன்பட்டி. 'யாதும் ஒரே; யாவரும் கேளிர்' என்று பாடிய கணியன் பூங்குன்றனார் பிறந்தது இந்தப் பகுதியில்தான்!

பள்ளியில் படித்த ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், உலக நீதி ஆகிய நூல்களில் அவர் மனம் பெரிதும் ஈடுபட்டது. ஆகையால், கம்பராமாயணம் திருத்தொண்டர் புராணம் போன்ற நூல்களைத் தாமே வீட்டிலிருந்து படித்துப் புரிந்து கொண்டார். அவற்றிலிருந்த நயங்களை நன்கறிந்து கொண்டார்.

பதினோராம் வயதில் அவரை இலங்கைக்கு வட்டித் தொழில் செய்வதற்காக அவரது தந்தையார் அனுப்பி வைத்தார். அங்கே சென்ற பிறகு நோய் முற்றியது. தந்தையார் இறந்த செய்தியும், வந்ததால் சொந்த ஊருக்குத் தமது பதினாறாவது வயதில் திரும்பி வந்தார்.

வீட்டுக்கு அவர்தாம் மூத்தபிள்ளை. அதனால், குடும்பப் பொறுப்பையும் அவரே ஏற்க வேண்டியிருந்தது. வர வர நோயின் தொல்லையும் அதிகமாகியது. வாத நோய் முற்றி இடக்காலையும் இடக்கையையும் பயன்படுத்த முடியாதபடி செய்துவிட்டது. கோல் ஊன்றி நடக்கும் நிலை ஏற்பட்டது.

இவ்வளவு தொல்லைகளுக்கு இடையிலும், அவர் தமிழ் நூல்களைப் படிப்பதிலும் ஆராய்ச்சி செய்வதிலும் இடைவிடாமல் ஈடுபட்டார். அதோடு, சம்ஸ்கிருத மொழியையும் அறிந்து கொள்ள ஆவல் கொண்டார். தக்க ஆசிரியரிடம் படித்து, அந்த மொழியிலும் நல்ல புலமை பெற்றார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை நிறுவிய ராஜா சர் அண்ணாமலை செட்டியாரின் வற்புறுத்தலினால், அவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அவரிடம் தமிழ் கற்றுப் புகழ் பெற்ற அறிஞர்கள் பலர். அவர்களின் பட்டியல் மிக நீளமானது!

கதிரேசனாரின் தமிழ்ப் புலமையையும் சமஸ்கிருதப் புலமையையும் பாராட்டி அவருக்கு அரசாங்கம் 'மகாமகோபாத்யாய' என்னும் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது.





விஞ்ஞான வகுப்பில் ஒரே ஒரு மாணவன்!

அந்த அம்மா தன் கையில் கட்டியிருந்த கடிகாரம் ஓடவில்லையே, என்று கவலைப்பட்டார். ஆட்டிப் பார்த்தார் அசைத்துப்பார்த்தார். முட்கள் நகரவே இல்லை!

"உன் கடிகாரத்தைக்கொடு அம்மா. நான் சரி செய்ய முடியுமா என்று பார்க்கிறேன்" என்று பன்னிரண்டு வயது மகன் அம்மாவிடமிருந்து கடிகாரத்தை வாங்கினான். அதைப் பிரித்துப் பார்த்து, அதிலே என்ன கோளாறு என்று கண்டுபிடித்துச் சரி செய்து விட்டான்! கடிகாரம் ஓடியது: சரியான மணி காட்டியது. மகனின் திறமையைக் கண்டு அம்மா மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள்.

ஒருநாள் அவன் கையிலே ஒரு கேமரா கிடைத்தது. அதன் உள்ளே இருந்த பாகங்களையெல்லாம் தனித் தனியாக எடுத்து உற்றுப் பார்த்து ஆராய்ந்தான். பிறகு, முன்போல் அவற்றை ஒன்று சேர்த்தான். அதன் பிறகு, அவனே ஒரு காமிராவைத் தயார் செய்தான். அந்தக் காமிராவால் பல இயற்கைக் காட்சிகளையெல்லாம் படம் பிடித்துப் பார்த்து மகிழ்ந்தான்.

அவன் படித்த பள்ளியில், அவனது வகுப்பில் விருப்பப் பாடமாக விஞ்ஞானத்தை எடுத்துப் படித்தவன் அவன் ஒருவனேதான்! அவனோடு படித்தவர்களில் யாருக்குமே விஞ்ஞான ஆர்வம் இல்லை. 10 வயதுப் பையனாக இருந்த போது ஆங்கிலப் பேராசிரியர் ஒருவர் எழுதிய பௌதிக நூல் அவனுக்குக் கிடைத்தது. அதை அவன் ஆர்வமுடன் படித்தான். படிக்கப் படிக்க அவனுக்கு விஞ்ஞானத்தில் அதிகமான ஆர்வம் ஏற்பட்டது. விஞ்ஞானப் புத்தகங்களைப் படிப்பதிலும், சிறுசிறு ஆராய்ச்சிகள் செய்வதிலும் அதிகஆர்வம் காட்டினான்.

விஞ்ஞானத்தில் ஆர்வம் இருந்ததால், அவனுக்கு விளையாட்டில் ஆர்வமில்லை என்று நினைக்க வேண்டாம். கால் பந்தாட்டத்தில் அவன் பல முறை வெற்றி பெற்றிருக்கிறான். தோட்ட வேலையிலும் அதிக அக்கறை காட்டி வந்தான்.

சோம்பல் என்றால் என்ன என்பதையே அறியாத அச்சிறுவன், பிற்காலத்தில் உலகம் போற்றும் ஒரு பெரிய விஞ்ஞானி ஆனான். உலகத்திலே மிகப் பெரிய பரிசாகிய நோபல் பரிசையும் பெற்றான்

அணுவுக்குப் பல ஆற்றல்கள் உண்டு, அந்த ஆற்றங்களை ஆராய்ந்து உலகுக்கு அறிவித்தவர்களில் மிகவும் முக்கியமானவராகிய எர்னஸ்ட் ரூதர் போர்ட் தான் அந்த இளம் விஞ்ஞானி.

வந்தேமாதரம் தந்த அறிஞர்!

நம் தேச விடுதலைப் போரில் தீவிரமாகப் பங்கு கொண்டவர்களுக்கு 'வந்தே மாதரம்' என்ற சொல் தாரக மந்திரமாக இருந்தது. மேடையில் ஏறிப் பேசுபவர்களும், 'வந்தே மாதரம்' என்றே முழங்குவார்கள். ஏன், தடியடி படும் போதும், கைதாகிச் சிறைச்சாலைக்கு இழுத்துச் செல்லப் படும் போது கூட 'வந்தே மாதரம்' என்று வானமே அதிரும்படி உணர்ச்சி ததும்ப முழக்கம் செய்வார்கள்.



'வந்தே மாதரம்' என்றால் தாயை வணங்குவோம்' என்றுதானே பொருள். அர்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல், ஆனால் ஆங்கிலேயர் அதன் 'வெள்ளைக் குரங்குகளைக் கொல்லுங்கள்' என்று அனர்த்தம் பண்ணிக் கொண்டார்கள்! அதனால் 'வந்தே மாதரம்' என்று எவருமே சொல்லக் கூடாது என்று உத்தரவிட்டார்கள். யாராவது சொன்னால் உடனே தடியால் அடித்தார்கள்; தண்டனை அளித்தார்கள்.

இந்த 'வந்தே மாதரம்' என்ற சொல்லைத் தந்தவர் யார்?

பங்கிம் சந்திரர் எழுதிய 'ஆனந்த மடம்' என்ற நாவலில் 'வந்தே மாதரம்' என்று ஒரு பாடல் இருக்கிறது. இந்தியத் தாயின் பெருமைகளையெல்லாம் எடுத்துக் கூறும் அப்பாடலை முதல் முதலாகத் தமது இனிய குரலில் பாடி அறிமுகப் படுத்தியவர் ரவீந்திர நாத தாகூர். 1896—ஆம் ஆண்டு கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் அவர் பாடிய இந்தப் பாடல் பிறகு இந்தியா முழுவதும் பாடப்பட்டது. இப்பாடலைக் கேட்டு எழுச்சி பெற்றனர் கோடிக் கணக்கான இந்தியர்கள்.

பங்கிம் சந்திரர் வங்காளத்தில் காந்தல்பாரா என்ற சிறு கிராமத்தில் பிறந்தார். அவர் பிறந்த குடும்பத்தை 'டெபுடி கலெக்டர் குடும்பம்' என்று கூறுவார்கள். அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த பலர் டெபுடி கலெக்டர்களாக இருந்ததால், அப்படி அழைத்தார்கள்.

பங்கிம் சந்திரரின் தந்தையாகிய ஜாதவ் சந்திரரும் ஒரிசாவில் டெபுடி கலெக்டராக இருந்தார். பங்கிம் சந்திரரும் பிற்காலத்தில் டெபுடி கலெக்டராக விளங்கினார்!

பங்கிம் சந்திரர் சிறுவராக இருக்கும்போதே தம்முடைய கிராமத்தைச் சுற்றியுள்ள காடுகளுக்குச் செல்வார். அங்குள்ள இயற்கைக் காட்சிகளையும், விலங்குகளையும், பறவைகளையும் பார்த்துப் பார்த்து மகிழ்வார்.

அவர் தமது பதினைன்காம் வயதிலே வங்க மொழியில் கவிதை இயற்றத் தொடங்கினார். அவரது கவிதைகள் மிகவும் நன்றாக இருந்ததால், அவற்றைப் பத்திரிகைகள் தொடர்ந்து வெளியிட்டு ஊக்கமளித்தன. அந்த வயதிலே, ஒரு பத்திரிகை நடத்திய கவிதைப் போட்டியில் அவர் கலந்து கொண்டு பரிசும் பெற்றார்.

கல்லூரியில் சேர்ந்ததும், நாவல் எழுதத் தொடங்கினார். அக்காலத்தில் நாவல் எழுதுவது ஒரு புதுமையாக இருந்தது. அவரது நாவல்கள் பல மொழிகளில் வெளிவந்திருக்கின்றன. நம் தமிழ் மொழியிலும் வெளிவந்திருக்கிறது!

திருக்குறள் புதிர்

விடைகள்

புதிர்—5

அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று (78)

உள்ளத்தில் அன்பு இல்லாமல் வாழுகின்றவனுடைய வாழ்க்கை, பாலைவனத்தில் பட்டுப்போன மரம் தளிர்ப்பதற்கு ஒப்பாகும்.

புதிர்—6

உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன் உறைந் தற்று (890)

உள்ளப் பொருத்தம் இல்லாதவருடன் கூடி வாழும் வாழ்க்கை, ஒரே குடிசையில் பாம்புடன் கூடி வாழ்வது போலாகும்.

குழந்தை இலக்கியப் போட்டி.

ஏ.வி.எம். தங்க, வெள்ளிப் பதக்கப் பரிசு

"உங்கள் சங்கத்தில் இப்போது எத்தனை அங்கத்தினர்கள் இருக்கிறார்கள்?" என்று 1956ஆம் ஆண்டில் நடந்த ஒரு விழாவில் குழந்தை எழுத்தாளர் சங்கத் தலைவரைக் கேட்டார், ராஜாஜி.

"107 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள்" என்று பதிலளித்தார் சங்கத் தலைவர்.

"108 மிக நல்ல எண். என்னை 108வது அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளுங்கள்" என்று ராஜாஜி சொன்னார்.

"உலகத்திலே இது ஒரு புதுமை. இப்படிப்பட்ட சங்கம் வேறு எங்குமே இருப்பதாக எனக்குத் தெரியவில்லை" என்று இச்சங்கத்தைப் பாராட்டினார் அமெரிக்காவின் பிரபல குழந்தை எழுத்தாளரான மன்றோ லீஃப்.

குழந்தை இலக்கிய மாநாடு, குழந்தைப் புத்தகக் காட்சி, குழந்தைகள் நாடக விழா, குழந்தை இலக்கிய முன்னோடிகளுக்குப் பாராட்டு, குழந்தைகள் தினத்தில் புத்தக வெளியீட்டு விழா, குழந்தைகளுக்குக் கதை சொல்லும் நிகழ்ச்சி, சிறப்பு மலர்கள் — இப்படிப் பல நல்ல செயல்களைக் கடந்த 33 ஆண்டுகளாகச் செய்து வருகிறார்கள் குழந்தை எழுத்தாளர் சங்கத்தினர்.

கவிதைகள் வாழ்க்கை வரலாறு, சிறுகதை, நாடகம், நாவல், அறிவியல்— ஆகிய ஆறு துறைகளில் ஒவ்வோராண்டும் இரு துறைகளுக்கு ஏவி.எம். அறக் கட்டளைப் பரிசுகளை இச் சங்கம் 1972-ஆம் ஆண்டு முதல் வழங்கி வருகிறது. ஒவ்வொரு துறைக்கும் முதல் பரிசாகத் தங்கப் பதக்கமும், இரண்டாவது பரிசாக வெள்ளிப் பதக்கமும், குழந்தைகள் நாளில் வழங்கப் பெறுகிறது.

இந்த ஆண்டு அறிவியல், நாவல்— ஆகிய துறைகளுக்கும் போட்டி அறிவித்திருக்கிறார்கள். "சிறுவர் சிறுமியர்க்குப் புத்தகமாக வெளியிடுவதற்கு ஏற்ற வகையில் வெள்ளைத் தாளில் ஒருபுறத்தில் மட்டும் எழுதிய கையெழுத்துப் பிரதியில் இரண்டுபிரதிகளை அனுப்பவேண்டும். 100 பக்கங்களுக்குள் இருக்கவேண்டும். 'இந்தக் கையெழுத்துப் பிரதியில் கண்டவை நான் சொந்தமாக எழுதியவையே. இதுவரை அச்சிலே வெளிவரவில்லை' என்ற உறுதிமொழியைத் தனித் தாளில் எழுதி, பெயர். முகவரியுடன் அனுப்ப வேண்டும். 30—9—83க்குள் கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும்" என்பது அச்சங்கச் செயலாளரின் வேண்டுகோள்:

குழந்தை எழுத்தாளர் சங்கம், ஏ. எல். 183, அண்ணாநகர், சென்னை-40

காப்பி அடிக்கலாமா?

உங்களில் பலர் அழகாக, அற்புதமாகக் கற்பனை செய்து எழுதி அனுப்புகிறீர்கள். உங்கள் திறமையை உலகறியச் செய்யவே பிருந்தாவனம் பகுதியைத் துவக்கினோம். பிற பக்கங்களிலும் உங்கள் எழுத்தோவியங்களுக்கு இடம் அளித்து வருகிறோம். ஆயினும் சிலர் மிகச் சுலபமாகப் பெயர் எடுக்க விரும்பி, மற்றவர்கள் எழுதியதைக் காப்பி அடித்து எங்களுக்கு அனுப்பி விடுகிறார்கள்.


நாங்கள் மிகவும் விழிப்போடு இருந்தாலும் சில சமயங்களில் ஏமாந்து விடுகிறோம். நாங்கள் ஏமாந்தாலும் வாசகர்கள் விடுவார்களா? இதழ் வெளிவந்ததும் காப்பியடிக்கப்பட்ட துணுக்குகளைத் தக்க ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டி எங்களுக்கு எழுதுகிறார்கள். இது காப்பி அடித்தவர்களுக்குக் கெட்ட பெயரைத் தேடித் தருவதோடு எங்களையும் சங்கடத்தில் ஆழ்த்திவிடுகிறது.

இனிமேலாவது நகைச் சுவைத் துணுக்குகள் எழுதுவோர் சொந்தமாகக் கற்பனை செய்து எழுதுங்கள். அறிவியல் துணுக்காகவோ நடந்த ஒரு நிகழ்ச்சியாகவோ இருந்தால், தக்க ஆதாரத்துடன் எழுதி அனுப்புங்கள். மனமார வரவேற்கிறோம். மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம்.


உங்கள் கற்பனை பெருக வேண்டும், எழுத்தாற்றல் ஓங்கவேண்டும் என்பதுதானே எங்கள் விருப்பம்!

—ஆசிரியர்

உங்களுக்குத் தெரியுமா?




முதன் முதலாக ஈரமான களிமண் துண்டுகளில் எழுத்துக்கள் சித்திரங்கள் போலவே எழுதப்பட்டன. அதற்கு உபயோகமான கருவி பார்வைக்கு 'ஆப்பு' போலவே இருந்தது. ஆப்பு போன்ற கோடுகளைக் கொண்டே எழுதப்பட்டதால் அந்த எழுத்து முறைக்கு 'ஆப்பெழுத்து' முறை என்று பெயர்.



பிரிட்டிஷ் கடல்களிலும், வட மேற்கு அட்லாண்டிக் கடலிலும் மிகப் பெரிய இராட்சத 'ஜெல்லி' மீன்கள் இருக்கின்றன. கடுமையான விஷமுடைய இந்த மீன் மனிதனைக் கொட்டினால் அவன் மூன்றே நிமிடத்திற்குள் இறந்து விடுவான்.

'க்ரோமாக்னன்' என்னும் பெயருடைய பழங்குடி மக்களே முதன் முதலாக குகையில் சித்திரம் தீட்டியவர்கள். அவர்களுடைய 'வேட்டையாடும் மனிதன்' ஓவியம் சரித்திர ஆராய்ச்சியாளர்களால் போற்றப்படும் ஒரு உன்னதமான ஓவியமாகும்.





பழங்கால மனித இனத்தில் 'க்ரோமாக்னன்' என்னும் இனமும் ஒன்று. அந்த மக்களிடையே அக்காலத்தில் மிகவும் மதிப்பு வாய்ந்த ஆடம்பரப் பொருளாகக் கருதப்பட்டது கல்லில் செதுக்கப்பட்ட ஒரு 'கல்விளக்கு'.

— செந்தமிழ்ச்செல்வன் —

பற்களைப் பாதுகாப்போம்

'பல்லுப் போனால் சொல்லுப் போச்சு' என்பார்கள். பற்கள் இல்லாத போனால் சொற்களைச் சரியாக உச்சரிக்க முடியுமா? சிறு குழந்தை பேசுவது மழலை மொழி. அது தெளிவாக இருக்காது. குடுகுடு கிழவர் பேசுவதும் தெளிவாக இருக்காது. காரணம்? பற்கள் குறைவாக இருப்பதனால்தான்! ஆகையால், நாம் நமது பற்களை நன்கு பாதுகாக்க வேண்டும்.

பற்கள் இல்லாத போனால், முறுக்கு, சீடை போன்றவற்றை நொறுக்கி உள்ளே தள்ள முடியுமா? எந்த உணவுப் பொருளையும் நன்றாக மென்று தின்றால்தான் ஜீரணமாகும்; உடலிலே ஒட்டும். இதற்குப் பற்கள் அவசியமல்லவா?

நாம் எல்லோருமே காலையில் பல் துலக்குவதை வழக்கமாக வைத்திருக்கிறோம். ஆனால், காலையில் துலக்குவது மட்டும் போதாது. இரவில் படுக்கப் போவதற்கு முன்பும் பல் துலக்க வேண்டும்.

நாம் சாப்பிடும் உணவுப் பொருள்களிலுள்ள சிறுசிறு துணுக்குகள் பற்களுக்கு இடையே தங்கி விடலாம். அப்படித் தங்கும் பொருள்கள் அங்கேயே இருந்து, அழுகிப் பற்களுக்குக் கேடு உண்டாக்குகின்றன. இதனால் பற்களின் ஆயுளும் குறைந்து விடுகிறது.

பற்களின் வெளிப்புறம் எனாமல் என்று சொல்லப்படும் கடினமான சுண்ணாம்புப் பொருளால் மூடப்பட்டிருக்கிறது. இது தேய்ந்து போனால், கடையிலே எனாமல் வாங்கிப் பூசி விடலாமா? முடியாது. இது எப்போதும் வெண்மையாக, வழுவழுப்பாக இருக்கும்படி நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அதற்கு நாம் என்னசெய்ய வேண்டும்?

செங்கற்பொடி, கரிப் பொடி, மணல் போன்ற சொர சொரப்பான பொடிகளைக்கொண்டு பல் துலக்கினால் எனாமல் விரைவிலேயே தேய்ந்து போகும்.

'ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி' என்பது பழமொழி. ஆலங் குச்சியோ, வேப்பங் குச்சியோ எதுவாக இருப்பினும் அது பச்சையாக இருக்க வேண்டும். அதை நன்றாக மென்று மிருதுவாக்கிய பிறகே பல் துலக்க வேண்டும். அந்தக் குச்சிகளிலிருந்து வரும் சாறு பல் சுத்தத்திற்கு மிகவும் உதவக் கூடியது.

இதோ எதிரே உள்ள படத்தில் ஒரு தம்பி பல் பசினால் (பேஸ்ட்) பிளாஸ்டிக் பல் துலக்கியைக் கொண்டு பல் துலக்குகிறான். பல் பசினைக் காட்டிலும், மருத்துவர்களால் கவனமாகத் தயாரிக்கப்பட்ட மிருதுவான, தூய்மையான வெள்ளைப் பற்பொடி மேலானது என்பது டாக்டர்களின் கருத்து.

பல் துலக்கும்போது, மேலிருந்து கீழ் நோக்கியும், கீழிருந்து மேல் நோக்கியும் துலக்குவதே நல்லது. அப்போதுதான் பற்களின் இடையிலுள்ள அழுக்கு நீங்கும். முன்னும் பின்னுமாகத் துலக்குவது நல்லதன்று.

பல்துலக்கியைப் பயன்படுத்திய பிறகு நன்றாகக் கழுவ வேண்டும். பிறகு நன்றாக உலர வைக்க வேண்டும். சிலர், பல் துலக்கியைக் கழுவிய பிறகு உப்புக் கரைசலில் நனைத்துத் தொங்க விடுகிறார்கள். இது மிகவும் நல்லது.

பல் துலக்கும்போது ஈறுகளை விரல்களைக் கொண்டு நன்றாக அழுத்தித் தேய்ப்பது நல்லது. இப்படிச் செய்வதால், ஈறுகளுக்கு இரத்தம் நன்றாகப் பாய்கிறது. பற்களும் உறுதியடைகின்றன.

இவ்வளவையும் படித்த பிறகு, நீங்கள் நாளையிலிருந்து ஒரு நாளுக்கு எத்தனை தடவைகள் பல் துலக்கப் போகிறீர்கள்?

எழுந்தவுடனே ஒரு தடவை, படுக்கப் போகு முன் ஒரு தடவை—ஆக இரண்டு தடவைகளா? சரி, அப்படியே செய்யுங்கள். முப்பத்திரண்டு பற்களும் முழுமையாக, வெண்மையாக என்றென்றும் உங்களுக்கு இருக்கும்.

வண்ணப்படம்: ஏ. வி. பாஸ்கர்



நாடோடிப்



குண்டுமல்லியும் அடுக்கலரியும்

குளத்தருகே குண்டுமல்லி
கொத்துக் கொத்தாய்ப் பூக்கதாம்.
குண்டுமல்லிப் பூமுடிக்கப்
பின்னும் கொஞ்ச நேரமாகும்.

ஆற்றருகே அடுக்கலரி
அழகழகாய்ப் பூத்திருக்கும்.
அடுக்கலரிப் பூமுடிக்கப்
பின்னுங் கொஞ்ச நேரமாகும்.

மாமா வந்தவேளை

மாமா, மாமா, மாமா,
நீங்க வந்த வேளை

கம்பஞ் சோறு சமைச்சிருக்கு.
கத்தரிக்காய்க் குழம்பிருக்கு.

தின்னுவிட்டு மாமா நாமும்
தெருப் பார்க்கப் போகலாம்.

காசு நீங்க கொடுத்திங்கன்னு
கடலை வாங்கித் திங்கலாம்.

பறந்துபோன மூக்குத்தி

அல்லித் துறையிலே
அழகான மூக்குத்தி.

அழகான மூக்குத்தி
வெச்சு மறந்தாளாம்.

பார்த்தவங்க கொடுத்துடுங்க;
பசுவை வித்துப் பணம் தாரேன்.

எடுத்தவங்க கொடுத்திடுங்க;
எருமை வித்துப் பணம் தாரேன்.

பத்தும் நாலும்

டிங்கிரி டிங்காலே
மாண்டிச் சாலே.
தோசை சுட்டாளே.

பட்டணத்து மாமனுக்குப்
பத்துக் கொடுத்தாளே.

நான் போய்க் கேட்டதுக்கு
நாலு சொன்னாளே.

பாடல்கள்

கத்தரிக்காய்

சின்னச் சின்னக் கத்தரிக்காய்.
சீரான கத்தரிக்காய்.

நாராயணன் தோட்டத்திலே
நட்டு வச்ச கத்தரிக்காய்.

கூடலூருச் சந்தையிலே
நலிஞ்சிருக்கும் கத்தரிக்காய்.

நம்பிடிக்கு ஒண்ணுதான்!
நாரானமாய் வாங்கிப்போ.

அத்தானின் உத்தியோகம்

கழுதையலைச் சம்பந்தம் — அத்தானைக்
கலெக்டர் என்று சொன்னாங்க.

கழுகுமலை போய்ப்பார்த்தேன்-அத்தான்
கழுதை மேய்க்கக் கண்டேனே!

வண்ணார்பேட்டை சம்பந்தம்-அத்தானை
வக்கீல் என்று சொன்னாங்க.

வண்ணார்ப்பேட்டைபோய்ப்பார்த்தேன்
-அத்தான்
வறட்டி தட்டக் கண்டேனே!


ஆத்தாளின் கதி

அக்கா, அக்கா ஊர்க்குருவி
ஆத்தாள் எங்கே போனாளோ?

வேடன் வலையிலே
விழுந்து துடிச்சவளை
அரிவாள் முனையாலே
அரிந்திருப்பார் இந்நேரம்.
குயவனூர் சட்டியிலே
கொதித்திருப்பாள் இந்நேரம்.
அன்னத்தைக் கீழேவச்சு
ஆத்தாளை மேலே வச்சு
எச்சிப் பயல் மக்களெல்லாம்
பிச்சுப் பிச்சுத் திம்பாங்க.







குப்புசாமி, அப்புசாமி

அழ.வள்ளியப்பா

அப்புசாமி:

குப்பு சாமி, குப்பு சாமி,
கப்பல் ஏறியே
எப்போ தேனும் பார்த்த துண்டோ?
எனக்குச் சொல்லுவாய்.

குப்புசாமி:

அப்பு சாமி சார் எனக்கே
அதிர்ஷ்டம் இருந்ததால்,
கப்பல் ஏறிப் பார்த்து வந்தேன்,
கஷ்டம் இன்றியே!

அப்புசாமி:

ஆட்கள் ஏறும் கப்ப லுக்குள்
செல்ல முடிந்ததா?
அங்கே உள்ள வசதி யெல்லாம்
அறிய முடிந்ததா?

குப்புசாமி:

சண்டைக் கப்பல், சரக்குக் கப்பல்
இரண்டை யுமேநான்
கண்டு வந்தேன், ஆட்கள் ஏறும்
கப்பல் கூடவே!

அப்புசாமி:

கப்பல் ஏறிப் பார்த்து வந்த
குப்பு சாமியே,
எப்போ கப்பல் ஏறினாயோ?
எனக்குச் சொல்லுவாய்.

குப்புசாமி:

சென்ற கோடை விடுமுறையை
நன்கு போக்கவே,
சென்று நானும் இவற்றை யெல்லாம்
கண்டு வந்தேனே!

அப்புசாமி:


நன்று, நன்று. அவற்றை யெல்லாம்
கண்ட தெவ்விடம்?
சென்னை நகரத் துறைமுகம்தான்
என்றே நினைக்கிறேன்.

குப்புசாமி:

சென்னை நகரத் துறைமுகமா?
இல்லை, இல்லையே!
அன்று பார்த்த துறைமுகமே
டில்லி அல்லவா?

அப்புசாமி:

கடலே இல்லா டில்லி நகரில்
கப்பல் பார்த்தியா?
அடடே, அண்டப் புளுக னேஉன்
அறிவும் பூஜ்ஜியம்!



கண்ணன் கண்டு பிடித்தான்!

நெ.சி. தெய்வசிகாமணி



சிவகாமியினுடைய பெரியப்பாவின் மகன்தான் கண்ணன். அப்பா, அம்மா இல்லாத அவனைச் சித்தப்பாவாகிய, சிவகாமியின் தந்தைதான் காப்பாற்றி வந்தார்.

சித்தி — சிவகாமியின் அம்மா கண்ணனைச் சதா திட்டிக் கொண்டே இருப்பாள்.

கண்ணன் பதில் பேசாமல் அனைத்தையும் பொறுத்துக்கொண்டிருப்பான். அது அவனுக்கு சகஜமாய்ப் போய்விட்டது. சித்தியின் ஏசலையும், அடியையும் பொருட்படுத்தாமல் அங்கேயே இருந்து வந்தான் கண்ணன்.

அன்று அவர்களுடைய பள்ளிக்கூடம் விடுமுறை. மயிலாப்பூர் அறுபத்துமூவர் திருநாளுக்காக அரைநாள் பள்ளிக்கூடம் விடுமுறை விட்டிருந்தார்கள்.

கண்ணன் ஹாலில் உட்கார்ந்து கொண்டு என்னவோ படித்துக்கொண்டிருந்தான். சிவகாமி மாடியிலிருந்து ''கண்ணா! கண்ணா!'' என்று கூப்பிட்டுக்கொண்டே மாடிப்படிகளில் இறங்கி வந்தாள்.

சிவகாமியின் குரலைக் கேட்ட கண்ணன், படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை மூடி மேஜைமேல் வைத்துவிட்டு மாடிப்படியருகில் வந்துநின்றான்.

''டேய், இன்றைக்கு மயிலாப்பூர் அறுபத்துமூவர் திருநாளுக்குப் போவோமா?'' என்று கண்ணனைப் பார்த்துக் கேட்டாள் சிவகாமி.

''ஐயையோ! சித்திக்குத் தெரிந்தால் என் முதுகைப் பிளந்துவிடுவாள்!'' என்று பயம் கலந்த குரலில் கூறினான் கண்ணன்.

''நான் அம்மாவிடம் சொல்லி அனுமதி வாங்கி விடறேன். என்னைக் கூட்டிப் போகிறாயாடா?'' என்றாள் சிவகாமி.

''ஹூம்... சரி! போய் அம்மாவிடம் அனுமதி வாங்கிக்கொண்டு வா. அப்படியே ஏதாவது சில்லறைக் காசு இருந்தாலும் எடுத்துவா. ஏதாவது வாங்கிச் சாப்பிடலாம்'' என்றான் கண்ணன்.

சற்று நேரத்திற்கெல்லாம் அம்மாவை அழைத்துக் கொண்டே அவ்விடத்திற்கு வந்துவிட்டாள் சிவகாமி.

''கண்ணா, ஜாக்கிரதையாகப் போய் வா! தெரிந்ததா? எங்கேயாவது கூட்டத்தில் பராக்குப் பார்த்துக் கொண்டு, அவளைத் தனியாக விட்டுவிடப் போறே. ஜாக்கிரதை!''' என்று சொல்லி வழியனுப்பினாள் சித்தி.

கண்ணனும் மகிழ்ச்சியுடன் தலையை ஆட்டிவிட்டுச் சிவகாமியைக் கூட்டிக் கொண்டு சென்றான்.

நான்கு மணிக்கே அறுபத்துமூவர் பார்க்க வந்த கூட்டம் 'ஜே' ஜே' என்று இருந்தது.

கண்ணனும், சிவகாமியும் எப்படியோ கூட்டத்தில் நெக்கி நெருக்கிக் கொண்டு சென்றார்கள். 'எங்கேயாவது சற்று ஒண்ட இடம் கிடைத்தாலாவது நின்று பார்த்துவிட்டு வரலாம்' என்ற எண்ணத்துடன் கூட்டத்தில் இருவரும் புகுந்து புகுந்து சென்று கொண்டிருந்தார்கள்.

வீடு, வாசல், மாடி, தெரு அனைத்தும் ஜனக்கூட்டத்தால் நிரம்பி வழிந்தது.

'திமுதிமு'வென்று பின்னால் வந்த ஜனக்கூட்டம் நெட்டித் தள்ளவே, கண்ணனின் கையை விட்டுவிட்டாள்

சிவகாமி. கண்ணனும் கூட்டத்தை விட்டு வெளியே வந்து, ''சிவகாமி...! சிவகாமி...! சிவகாமி...!'' என்று தொண்டை கிழியக் கத்திக் கொண்டிருந்தான்.

கண்ணனின் குரலைக் கேட்டுப் பெண்கள் கூட்டத்திலிருந்த இரண்டு மூன்று பேர் திரும்பிப் பார்த்தார்கள். அவர்களுடைய பெயரும் சிவகாமி போலும்!

கண்ணன் தொண்டைவரளக் கத்திக் கொண்டிருந்தான். 'சித்திக்கு என்ன பதில் சொல்லுவது? சிவகாமி இல்லாமல் எப்படி வீட்டுக்குப் போவது?' என்று குழம்பிய மனத்துடன் தத்தளித்துக் கொண்டிருந்தான் கண்ணன்.

நேரம் 'கிறுகிறு' வென்று போய்க் கொண்டேயிருந்தது. அத்துடன் ஜனக்கூட்டமும் நேரம் ஆக ஆக அதிகரித்துக் கொண்டேயிருந்தது.

கண்ணன் செய்வதறியாது திகைத்தான். குழம்பிய மனத்துடன் எங்கு போகிறோம் என்பதையே அறியாமல் மனம் போனபடி சென்று கொண்டிருந்தான்.

இரவு ஏழு மணிக்கு, மெள்ளத் தட்டுத் தடுமாறி, குழம்பிய மனத்துடன் 'சாந்தோம்' கடற்கரையை அடைந்தான் கண்ணன்.

கடற்கரையில் எங்கோ ஒன்றிரண்டு பேர் உட்கார்ந்திருந்தனர். மெல்ல இருள் பரவிக் கொண்டு வந்தது. அந்த இருட்டில் மனிதர்கள் உட்கார்ந்திருப்பதுகூடத் தெரியவில்லை.

கண்ணன் தன்னை மறந்து கடற்கரையில் உட்கார்ந்துகொண்டு என்னென்னவோ யோசித்துக் கொண்டிருந்தான். இரண்டு பேர் அவனைத் தாண்டிச் சென்று சற்றுத் தூரத்தில் அமர்ந்ததுகூட அவனுக்குத் தெரியவில்லை. அவர்களுக்கும் கண்ணன் அங்கு உட்கார்ந்திருப்பது தெரியாது.



அவர்களுடைய பேச்சுக் குரலைக் கேட்ட பிறகுதான், கண்ணன் சிந்தனையிலிருந்து விடுபட்டு அவர்களைப் பார்த்தான்; அவர்கள் பேச்சையும் கேட்டான்.

''ஏன், அண்ணே! ஆமாம், அந்தப் பெண்ணைக் கூட்டி வந்து நகைகளை எல்லாம் பிடுங்கிக் கொண்டோம். இப்பொழுது அந்தப் பெண்ணை என்ன செய்கிறது?''

''பேசாமல் விரட்டிவிடுவோம். இது கூடவா உனக்குத் தெரியவில்லை?''

''விரட்டி விடுவதா! நன்றாகச் சொன்னாய் போ! அந்தப் பெண் என்ன, சின்னக் குழந்தையா? வயது பதினொன்றுக்கு மேல் இருக்கும். வெளியே விட்டால் நம் வீட்டை

அடையாளம் காட்டி, நம்மைப் போலீசில் பிடித்துக் கொடுத்துவிட்டால் என்ன செய்வது?''

''எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. பேசாமல், மெல்ல அந்தப் பெண்ணிடம், 'உன் வீட்டிலே கொண்டு போய் விட்டுவிடுகிறோம்' என்று கூறி, அவளை இங்கு கொண்டு வந்து, கடலிலே தள்ளிக் கொலை செய்து விட்டால் என்ன...?''

''ஆ! அதுதான் சரியான யோசனை! இரவு பன்னிரண்டு மணிக்கு மேல் அந்தப் பெண்ணை இங்கே கூட்டிவந்து கடலில் தள்ளிவிடுவோம்.''

அந்த இரண்டு பேரும் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் பேசுவதிலிருந்து, அந்தப் பெண் சிவகாமியாகத்தான் இருக்க வேண்டும் என்ற தீர்மானத்துக்கு வந்த கண்ணன், அவர்கள் பேசுவதை ஒளிந்திருந்து கவனமாகக் கேட்கலானான்.

''ஏன் அண்ணே! நம்ம கருப்பனை ஒரு வாரமாகக் காணோமே! அவனைப் பார்த்தாயா?''

''நேற்றுக்கூட அவனைச் சைனா பஜாரிலே பார்த்தேன்.''

''அவனை வரச் சொல்லக்கூடாது?''

''அவன் நாம் முன்பு குடியிருந்த வீட்டிலே போய் நம்மைத் தேடியிருக்கிறான். நான்தான் அவனுக்கு நம்முடைய புதிய விலாசத்தைக் கொடுத்து அவனை வரச் சொன்னேன்.''

''ஏண்டா, நம்முடைய விலாசத்தை அவனுக்குச் சரியாகச் சொன்னாயா?''

''வீரபத்திரக் கோனார் தெரு, 13–ஆம் நெம்பர் வீடு என்று ஒரு தடவைக்கு மூன்று தடவையாக அவனிடம் சொல்லியிருக்கிறேன். இன்றைக்கே வந்து பார்ப்பதாகக் கூறியிருக்கிறான். ஒருவேளை, அவன் நமக்காக வந்து அங்கே காத்திருக்கப் போகிறான். வா, போவோம்.''

இருவரும் எழுந்தனர். கடற்கரையிலிருந்து வேகவேகமாக வெளியேறினர்.

'வீரபத்திரக் கோனார் தெரு, 13–ம் நெம்பர் வீடு... இரவு பன்னிரண்டு மணிக்குக் கடலில் தள்ளிக் கொலை செய்யப் போகிறார்கள்... இவர்களைச் சும்மா விடக்கூடாது' என்று நினைத்தவனாக நேரே காவல் நிலையத்தை நோக்கி நடந்தான், கண்ணன்.

காவல் நிலையத்தை அடைந்ததும் கண்ணன் நேரே சப் – இன்ஸ்பெக்டரிடம் சென்று பூராச் செய்தியையும் கூறினான். சப் – இன்ஸ்பெக்டரும்

சிரியுங்கள்! சிரியுங்கள்!

''ஏண்டா கோபு! உங்கப்பா உன்னை வெளுவெளுன்னு வெளுத்துட்டாராமே!''

''ஆமாம் லாண்டரியிலே துணியை வெளுக்கப்போடச் சொன்னாரு. மாட்டேன்னேன். அதான் அவரே வெளுத்துட்டார்!''

- ஆர். பி. ராஜ்



''ஏண்டா செய்யுளைச் சத்தம் போட்டுப் படிச்சு மனப்பாடம் பண்ணிட்டு வரச் சொன்னேனே, ஏன் படிக்கலே?''

''நேத்து நான் மௌன விரதம் சார்!''

- ஆர். பி. ராஜ்





தம்முடன் சில போலீஸ்காரர்களை அழைத்துக் கொண்டு கண்ணனையும் ஜீப்பில் ஏற்றிக் கொண்டு வீரபத்திரக் கோனார் தெரு, 13—ஆம் நெம்பர் வீட்டை நோக்கி வண்டியை விட்டார்.

சப் — இன்ஸ்பெக்டரையும் போலீஸ்காரர்களையும் கண்ட திருடர்கள் வெலவெலத்துப் போய்விட்டார்கள். மிக எளிதாக அவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

கண்ணன் அங்கு உள்ள அறைகளில் சென்று சிவகாமி எங்கு இருக்கிறாள் என்று தேடினான். கடைசியில் ஓர் அறை பூட்டியிருப்பதைக் கண்ணன் கண்டான். அந்த அறைக்கு ஒரு ஜன்னல் இருந்தது. ஜன்னலைத் திறந்து உள்ளே பார்த்தான், கண்ணன். உள்ளே இருந்த பெண்ணும் திரும்பிக் கண்ணனைப் பார்த்தாள்.

ஒருகணம் கண்ணனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை? திடுக்கிட்டு விட்டான்.

ஏன்—?

அங்கு — அந்த அறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த பெண் சிவகாமி அல்ல; வேறு யாரோ ஒரு பெண்!

சப் — இன்ஸ்பெக்டர் அந்தத் திருடர்களை உதைத்து விஷயத்தை அறிந்து கொண்டார்.

அதாவது, அந்தப் பெண் ஒரு பெரிய பணக்கார வீட்டுப் பெண் என்றும், திருவிழாக் கூட்டத்தில் தவறிப்போன அந்தப் பெண்ணை அவளுடைய வீட்டில் கொண்டு போய்ச் சேர்க்கிறோமென்று கூட்டி வந்து நகைகளை எல்லாம் கழற்றிக் கொண்டு, கொலை செய்யத் திட்டமிட்டிருப்பதாகவும் அந்தத் திருடர்கள் கூறினார்கள்.

சப் — இன்ஸ்பெக்டர் கண்ணனின் முதுகில் தட்டிக் கொடுத்தார். கண்ணன் முகத்தில் ஈயாடவில்லை. வருத்தத்துடன் காணப்பட்டான்.

"ஏன் தம்பி! நீ சொன்ன பெண்ணைத் தான் கண்டுபிடித்து விட்டோமே! இன்னும் ஏன் உனக்கு வருத்தம்?" என்று கேட்டார் சப் — இன்ஸ்பெக்டர்.

"நான் சொன்னது இந்தப் பெண் இல்லை சார்! இந்தப் பெண் வேறு யாரோ! என் தங்கை சிவகாமியைக் காணோமே! என்ன செய்வேன்?" என்று கவலையுடன் கூறினான் கண்ணன்.

உடனே திருடர்களிடமிருந்து கைப்பற்றிய சாவிக் கொத்தைக் கொண்டு, பூட்டிய அறையைத் திறந்தார் சப் — இன்ஸ்பெக்டர். அந்தப் பெண்ணை வெளியே வரவழைத்து விசாரணை செய்தார்.

''நாங்க கோபாலபுரத்திலே இருக்கிறோம். எங்கள் அப்பா பெயர் சோமசுந்தரம் செட்டியார். சைனாபஜாரில் எங்களுக்குப் பெரிய நகைக்கடை இருக்கிறது'' என்று சப் – இன்ஸ்பெக்டரைப் பார்த்துக் கூறினாள் அந்தப் பெண்.

''அடடே, பிரபல நகை வியாபாரி சோமசுந்தரம் செட்டியாரின் மகளா நீ? நீ எப்படியம்மா இவர்களிடம் சிக்கிக் கொண்டாய்?'' என்று அந்தப் பெண்ணைப் பார்த்துக் கேட்டார் சப் – இன்ஸ்பெக்டர்.

''வீட்டுக்குத் தெரியாமல் என் சிநேகிதியுடன் அறுபத்தி மூவர் திருவிழாப் பார்க்க வந்தேன். கூட்டத்தில் என் சிநேகிதியை விட்டுப் பிரிந்து விட்டேன். கூட்டத்திலிருந்து வெளியே வந்து என் சிநேகிதியைத் தேடிக் கொண்டிருக்கும் போது, இங்கிருப்பவர்கள், ''ஏன் தங்கச்சி, நீ கூட வந்தவர்களை விட்டுவிட்டாயா?'' என்று கேட்டார்கள். ''ஆமாம்!'' என்று அழுதவாறே கூறினேன். ''அழாதே தங்கச்சி. உங்க வீட்டு விலாசத்தைச் சொல். உன்னைப் பத்திரமாகக் கொண்டு போய் உன் வீட்டிலே சேர்க்கிறோம்'' என்றார்கள். நானும் அவர்கள் பேச்சை நம்பிக்கொண்டு என் வீட்டு விலாசத்தைக் கூறினேன். உடனே, அவர்கள் ஒரு டாக்ஸியைக் கூப்பிட்டு என்னை ஏற்றிக் கொண்டார்கள். பிறகுதான் அந்த டாக்ஸிக்காரனும் அவர்களுக்கு உடந்தை என்று தெரிய வந்தது. எல்லோருமாகச் சேர்ந்து என்னைப் பயமுறுத்தி இங்கே கொண்டு வந்து, என் நகைகளைக் கழற்றிக்கொண்டு என்னை பூட்டிவைத்து விட்டார்கள்'' என்றாள், அந்தப் பெண்.

''கவலைப்படாதே, உன்னைக் காப்பாற்றுவதற்கு உதவி புரிந்தவன் இந்தச் சிறுவன்தான்'' என்ற சப்–இன்ஸ்பெக்டர், ''தம்பீ, கவலைப் படாதே! எப்படியும் உன் தங்கை சிவகாமியையும் கண்டுபிடித்து உன் வீட்டில் கொண்டு வந்து சேர்த்து விடுகிறோம். கவலைப்படாமல் வீட்டுக்குப் போ!'' என்று கண்ணனைச் சமாதானப் படுத்தினார்.

கண்ணன் வீட்டை அடைந்ததும், வீட்டு வாசலில் சிவகாமி நின்றிருப்பதைக் கண்டான்! அவளைக் கண்டதும் அவனுக்கு ஒரே வியப்பாக இருந்தது. கண்ணனைப் பார்த்ததும் சிவகாமி ஓடிவந்தாள்.

''என்னைக் கூட்டத்திலே விட்டு விட்டு எங்கேயோ போய் விட்டாய்? உன்னை எவ்வளவு நேரம் தேடினேன், தெரியுமா? கடைசியிலே நம் பக்கத்து வீட்டுக் கமலாக்கா வந்திருந்தாள். அவளுடன் வந்துவிட்டேன். ஹும்... இன்னொரு ரகசியம். இப்படி உன் காதைக் கொண்டு வா. அம்மா உன்னைக் கேட்டால், ''வழியில் வாத்தியார் பார்த்தார். கூடவே அழைத்துச் சென்றார்.'' என்று சொல்லு. நான் அப்படித்தான் கூறியிருக்கிறேன். நீயும் அப்படியே சொல்லிவிடு'' என்றாள், சிவகாமி.

ஃ ஃ ஃ ஃ

மறுநாள் வீட்டு வாசலில் ஒரு பெரிய கார் வந்து நின்றது. அதிலிருந்து சப் – இன்ஸ்பெக்டரும் நகை வியாபாரி சோமசுந்தரம் செட்டியாரும் இறங்கினார்கள்.

''உங்க பையனாலேதான் எங்க மகளை மறுபடியும் காண முடிந்தது. இவன்தான் சப் – இன்ஸ்பெக்டரைக் கூட்டிப்போய்த் திருடர்களைப் பிடித்துக் கொடுத்தானாம். இவன் செய்த உதவியை மறக்கவே முடியாது'' என்று கண்ணனைச் சரமாரியாகப் புகழ்ந்தார் சோமசுந்தரம் செட்டியார்.

சோமசுந்தரம் செட்டியார் போகும் பொழுது கண்ணனுக்கு ஆயிரம் ரூபாய் பரிசாக அளித்து விட்டுச் சென்றார்.

இப்பொழுது கண்ணனுக்கு வீட்டில் ராஜ உபசாரம்தான்! சித்திகூடக் கண்ணனை வாயாரப் புகழ்ந்து கொண்டிருக்கிறாள்!

மருந்துச் சிட்டில்


''டாக்டர் மாமா, நீங்கள் எனக்கு எழுதிக் கொடுக்கிற மருந்துச் சிட்டிலே, சாக்லெட் நாலு, பலப்பம் ஒரு கட்டு, ஐஸ் ப்ரூட் மூணு, பிஸ்கட் ஒரு டின்னு எழுதிக்கொடுங்க! ப்ளீஸ்!''

-சுதர்ஸன்



மூளைக்கு வேலை...


ஆ. தேவராஜ்




3 தீக்குச்சிகளை எடுக்க வேண்டும்
3 கட்டங்கள் குறைய வேண்டும்.




8 தீக்குச்சிகளைக் கொண்டு
9 சதுரம் அமைக்க.




9 வட்டங்களையும் தொடர்ச்சியான
மூன்று நேர்க்கோடுகளால்
இணைக்க வேண்டும்.



நான்கு முக்கோணங்களை நீக்கிய -
பின்பு நான்கு முக்கோணங்களே
இருத்தல் வேண்டும்.



படத்தில் காட்டிய படி 6 துண்டுகள்
எடுத்து அவற்றைக்கொண்டு பிறைநிலா
அமைக்க வேண்டும்.



3 நேர்க்கோடுகளைக் கொண்டு
7 பூக்களையும் தனித்தனியே
பிரிக்கவும்.

உலகப் புகழ்பெற்ற சிறுவர் கதை-6

ஆலிவர் ட்விஸ்ட்



மூலம்: சார்லஸ் டிக்கன்ஸ் ✿ தமிழ்ச் சுருக்கம்: எச். கிருஷ்ணமூர்த்தி

ஆலிவர் ட்விஸ்ட் ஓர் ஏழைச் சிறுவன், அநாதை. இங்கிலாந்தில் ஒரு சிறு ஊரில் உள்ள ஏழைகளின் காப்பகத்தில் அவன் பிறந்தான். பிறந்ததுமே அவன் அம்மாவை இழந்தான். அவனுடைய அப்பாவைப் பற்றிய விவரம் யாருக்கும் தெரியவில்லை. ஆலிவர் அந்தக் காப்பகத்திலேயே சேர்க்கப்பட்டான். காப்பகத்தின் தலைவர் மிஸ்டர் பம்பிள் மிகவும் கடுமையானவர். சிறுவர்களை அவர் மிகவும் மோசமாக நடத்தினார்.

ஆலிவருக்கு வயது ஒன்பது ஆயிற்று. மற்ற பிள்ளைகளைப் போலவே அவனும் எலும்பும் தோலுமாக இருந்தான். காப்பகத்தின் சிறுவர்கள் நன்றாக உழைக்க வேண்டும். ஆனால், அரை வயிற்றுக்குக் கூட உணவு கிடைக்காது. எப்போதும் அவர்கள் பசியின் கொடுமையால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தனர். 'இன்னும் கொஞ்சம் சாப்பாடு வேண்டும்' என்று கேட்க அவர்களுக்குப் பயம். யாராவது அப்படித் துணிந்து கேட்டால், மிஸ்டர் பம்பிள் அவனைச் சும்மா விடமாட்டார்; அடித்து நொறுக்கிவிடுவார்.

ஒரு நாள் இரவு ஆலிவருக்குத் தாங்க முடியாத பசி. மற்றச் சிறுவர்களும் அவனைத் தூண்டினர். 'இன்னும் கொஞ்சம் கஞ்சி வேண்டும்' என்று ஆலிவர் தயங்கிக் கொண்டே கேட்டான். மிஸ்டர் பம்பிளுக்கு மூக்குக்கு மேல் கோபம் வந்தது. ஆலிவரை நன்றாக அடித்து நொறுக்கினார்; ஓர் இருட்டு அறையில் அடைத்துப் பூட்டினார். அவனை எங்காவது யாரிடமாவது வேலைக்காரனாக அனுப்பத் தீர்மானித்தார்.

அந்த ஊரில் சோயர் பெரி என்பவர் சவப் பெட்டிகளைச் செய்து வந்தார். அவருக்கு உதவி ஆள் தேவைப்பட்டது. ஆலிவரை வேலைக்கு எடுத்துக் கொள்ளச் சம்மதித்தார். காப்பகத்தை விட்டுச் சவப் பெட்டி செய்யும் பட்டறையில் ஆலிவர் சேர்ந்தான்.

ஆலிவருக்கு வேளா வேளைக்கு உணவு கிடைத்தது. ஆனால், சோயர் பெரியும் அவருடைய மனைவியும் அவனைத் துச்சமாக மதித்தனர். எப்போதும் வாய்க்கு வந்தபடி திட்டினர். பகலையும் இரவையும் அவன் சவப் பெட்டிகளுடனேயே கழித்தான். சவப் பெட்டிகளுக்கு நடுவில் இரவில் படுத்திருப்பான். அப்பெட்டிகளுக்குள் பிணங்கள் இருப்பது போலவும் பிசாசுகள் நெருங்கி வருவது போலவும் அவனுக்குத் தோன்றும். சரியாகத் தூக்கம் வராது.

அந்தப் பட்டறையில் நோவா என்று இன்னொரு சிறுவன் வேலை செய்தான். அவன் கொஞ்சம் பெரியவன். ''ஏழை இல்லம்'' என்று கூப்பிட்டு ஆலிவரைக் கிண்டல் செய்வான். அவனுக்கும் ஆலிவருக்கும் ஒரு நாள் வாக்குவாதம் நடந்தது. ஆலிவருடைய அம்மாவை அவன் வாயில் வந்தபடி பேசினான்.

ஆலிவருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. நோவாவின் மீது

வண்ணப் பூக்களே!



காலை நேரம் கண்விழித்த
குழந்தையைப் போல — இன்பச்
சோலை எங்கும் பூத்திருக்கும்
வண்ணப் பூக்களே!

காற்றில் எங்கும் வாசம் வீசிக்
களிக்கச் செய்கிறீர் — அன்பர்
போற்றும் தெய்வப் பூசைக் கேற்ற
புனிதம் சேர்க்கிறீர்.

அம்மா தங்கை அக்கா தலையில்
அழகு செய்கிறீர் — இங்கே
சும்மா பேசும் தலைவர் கழுத்தில்
தூங்கிச் சிரிக்கிறீர்.

பிறப்பென் றாலும் இறப்பென் றாலும்
கூட வருகிறீர் — என்றும்
மறப்பில் லாத துணைவ ராக
வருகை தருகிறீர்!

உங்கள் வாழ்வு கொஞ்ச நேரம்.
உயர்ந்த பயனுண்டு — இதை
எங்கள் போன்ற மனிதர் எண்ணில்
இனிமை நிறைவுண்டு.

சிவ. கிருஷ்ணன்

பாய்ந்து கழுத்தை இறுகப் பற்றினான்.

"ஆலிவருக்குப் பைத்தியம் பிடித்து விட்டது! என்னைக் கொல்லுகிறான்! காப்பாற்றுங்கள்!" என்று நோவா கூச்சலிட்டான். எல்லோரும் ஓடிவந்தனர். மிஸ்டர் பம்பிளேயும் அழைத்து வந்தனர். ஆலிவருக்கு நல்ல உதை கிடைத்தது.

இரவெல்லாம் ஆலிவர் அழுதான். அந்தப் பட்டறையையும், அங்கிருந்த அன்பில்லாத மனிதர்களையும் அவனுக்குப் பிடிக்கவில்லை. ஓடிப் போகத் தீர்மானித்தான். விடியற்காலையில் அங்கிருந்து வெளியேறினான்.

ஊரை விட்டு ஆலிவர் வெகு தூரம் நடந்தான். ஓர் இடத்தில், 'லண்டனுக்கு இன்னும் எழுபது மைல்' என்று சாலைக் கல்லில் எழுதப் பட்டிருந்தது. லண்டனைப் பற்றி அவன் நிறையக் கேள்விப்பட்டிருந்தான். அங்கு போய் வேலை தேடத் தீர்மானித்தான். வழியில் கிடைத்ததை உண்டான். திறந்தவெளியில் உறங்கினான். கடுங் குளிர், கந்தல் ஆடை, களைப்பு, பசி — எதையுமே அவன் லட்சியம் செய்யவில்லை. ஏழு நாட்கள் நடந்தான். லண்டன் எல்லையை அடைந்தான்.

டாட்ஜர் என்னும் சிறுவனை ஆலிவர் அங்கு சந்தித்தான். அவன் பெரிய மனிதனைப் போல உடை அணிந்திருந்தான். லண்டனில் தனக்கு ஒரு நண்பர் இருப்பதாகவும், அவர் ஆலிவருக்கும் உதவி செய்வார் என்றும் டாட்ஜர் சொன்னான்.

இருவரும் பேசிக் கொண்டே லண்டனை அடைந்தனர். ஏழைகள் வாழும் பகுதி, அசுத்தமான தெருக்கள், துர்நாற்றம் — இவற்றைக் கடந்து ஒரு பழைய வீட்டிற்குள் ஆலிவரை அழைத்துச் சென்றான்.

சுவர் எல்லாம் அழுக்கு, கரி. மூலையில் எரியும் அடுப்பு. ஒரு வயதான மனிதன் அருகில் நின்று சமையலைக் கவனித்துக் கொண்டிருந்தான். வஞ்சக முகம். தாடி மீசை. நீண்ட சிவந்த தலைமுடி. தலைக்கு மேலே ஒரு நீண்ட கொடியில் பல வித வர்ணங்களில் நிறையப் பட்டுக் கைக்குட்டைகள் தொங்கின. ஒரு மேசையைச் சுற்றி ஐந்தாறு சிறுவர்கள் உட்கார்ந்திருந்தனர்.

டாட்ஜர் முன்னே சென்று அந்தத் தாடிக்காரன் காதில் ஏதோ கிசுகிசுத்தான். பிறகு உரத்த குரலில், "இவர் தான் பாகின்!", "இவன் ஆலிவர் ட்விஸ்ட்!" என்று அறிமுகம் செய்வித்தான். பிறகு அங்கிருந்த மற்ற நண்பர்

களையும் அறிமுகம் செய்தான். ஆலிவரை எல்லோரும் இன்முகத்தோடு வரவேற்றனர். இரவு உணவுக்குப் பிறகு ஆலிவர் நன்றாக உறங்கினான்.

ஃ ஃ ஃ

மறுநாட் காலை. அவர்கள் ஒரு புதுமையான விளையாட்டுவிளையாடினர். சட்டையின் ஒரு பையில் கடிகாரத்தையும், இன்னொரு பையில் புத்தகத்தையும் பாகின் வைத்துக் கொண்டான். பிறகு தெருவில் நடப்பது போலவும், கடையில் சாமான் வாங்குவது போலவும் நடித்தான். டாட்ஜரும் சார்லி என்ற சிறுவனும் பாகினை நிழல் போலத் தொடர்ந்தனர். அவனை ஒரு தள்ளுத் தள்ளிவிட்டு இமைப் பொழுதில் அவனுடைய சட்டைப் பைகளில் இருந்த பொருள்களை வெளியே எடுத்தனர். ஆலிவருக்கு ஆச்சரியமாக இருந்தது. பாகினின் நடிப்பைக் கண்டு அவன் கலகலவென்று சிரித்தான்.

அந்த 'விளையாட்டை' பாகின் ஆலிவருக்கும் சொல்லிக் கொடுத்தான். ஆலிவர் அதை வெற்றிகரமாகச் செய்து காட்டினான். பாகின் அவனைப் பாராட்டி ஒரு வெள்ளிக் காசைப் பரிசாக அளித்தான். வீட்டுக்குள்ளேயே அந்த 'விளையாட்டு' சில நாட்கள் நடந்தது.

ஃ ஃ ஃ


டாட்ஜர், சார்லி, ஆலிவர் மூவரும் ஒரு நாள் கடைத் தெருவில் போய்க் கொண்டிருந்தனர். ஒரு புத்தகக் கடையைக் கண்டனர். அங்கு பிரவுன் லோ என்னும் பெரியவர் சில புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்தார். டாட்ஜர் அருகில் சென்று அவருடைய பையில் இருந்த கைக்குட்டையை மெதுவாக வெளியே எடுத்தான்.

ஆலிவருக்குப் பளிச்சென்று உண்மை புரிந்தது. அவர்கள் திருடர்கள்! இத்தனை நாளும் அவர்களுக்குத் திருட்டுத் தொழிலைப் பாகின் கற்பித்திருக்கிறான்! ஆலிவரைப் பயம் கவ்வியது. அந்த இடத்தை விட்டு வேகமாக ஓடினான்.

பெரியவர் கைக் குட்டையைத் தேடினார். காணவில்லை. ஆலிவர் ஓடுவதைக் கண்டார். ''திருடன்! திருடன்! பிடியுங்கள்!'' என்று கத்தினார். டாட்ஜரும், சார்லியும் இதைக் கேட்டனர். அவர்களும், ''திருடன், திருடன்!'' என்று கூச்சல் போட்டனர். பெரிய கூட்டம் திரண்டு ஆலிவரைத் துரத்தியது.

அங்கு வந்த போலீஸ்காரர் ஆலிவரைப் போலீஸ் நிலையத்திற்கு இழுத்துப் போனார். ஆலிவர் கைக்குட்டையை எடுத்திருக்க மாட்டான் என்றே அந்தப் பெரியவர் நினைத்தார். அதனால் அவரும் அவனைத் தொடர்ந்து போனார். அந்த ரகளையைக் கவனித்து வந்த புத்தகக் கடைக்காரன் ஓடிவந்து, ''வேறு இரண்டு சிறுவர்கள் திருடியதை என் கண்ணால் கண்டேன். இவன் நிரபராதி'' என்று சாட்சி சொன்னான். உடனே ஆலிவர் விடுவிக்கப்பட்டான்.





ஆலிவருக்கு உடம்பில் தெம்பே இல்லை. மயக்கமாக வந்தது. பிரவுன் லோ அவன்மீது இரக்கப்பட்டார். ஒரு வண்டியை அமர்த்தி அதில் ஆலிவரைத் தூக்கிவைத்துத் தம் வீட்டிற்கு அழைத்துப் போனார்.

ஃ ஃ ஃ

டாட்ஜரும், சார்லியும் பாகினிடம் விரைந்தனர். ஆலிவர் கைதான செய்தியை அறிவித்தனர். ஆலிவர் தங்களை போலீசிடம் காட்டிக் கொடுத்து விடுவானோ என்று பாகின் அஞ்சினான். போலீஸ் நிலையம் போய் விசாரிக்க அவனுக்குத் துணிச்சல் இல்லை.

நான்சி என்னும்பெண்ணும் இன்னும் நிறையத் திருடர்களும் பாகினுடைய கூட்டத்தில் இருந்தனர். பாகின் அவர்களை அழைத்து ஒவ்வொருவருக்கும் நிறையப் பணம் கொடுத்தான். ''நான் நம்முடைய ரகசிய இடத்துக்குப் போகிறேன். நீங்கள் ஆலிவரைப் பற்றி விசாரியுங்கள். எங்கிருந்தாலும் அவனை இழுத்துக்கொண்டு வாருங்கள்'' எனக் கட்டளை இட்டான். தான் சேகரித்திருந்த பணத்தையும் விலை உயர்ந்த பொருட்களையும் எடுத்துக் கொண்டு பாகின் தன் ரகசிய இடத்திற்குப் புறப்பட்டான்.

ஃ ஃ ஃ

பிரவுன் லோவின் வீட்டை அடையும்போது ஆலிவரின் உடல்நிலை படு மோசமாக இருந்தது. நினைவே இல்லாமல் அவன் ஒரு வாரம் கிடந்தான். பிரவுன் லோவும், அவருடைய பணி ஆட்களும் ஆலிவரை அன்போடு கவனித்தனர். அவன் குணமடைந்தான்.

பிரவுன் லோவுக்கு வீபோர்டு என்று ஒரு நண்பர் இருந்தார். அவர் சுமார் பத்து வருஷங்களுக்கு முன்னே ரோமில் இறந்து விட்டார். ஆலிவரின் முகம் அவருக்கு வீபோர்டை நினைவு படுத்தியது. ஆலிவரின் சோகமான கதையைக் கேட்டு பிரவுன் லோ மனம் உருகினார். அவனுக்குப் புதிய சட்டைகள் வாங்கிக் கொடுத்தார். ஆலிவர் சந்தோஷமாக இருந்தான். பாகினைப் பற்றிப் போலீசுக்குத் தெரிவிக்க விரும்பினார். அவனுடைய விலாசம் தெரியாததால் அவ்விதம் செய்ய முடியவில்லை.

புத்தகக் கடைக்குப் பிரவுன் லோ கொஞ்சம் பணம் கொடுக்க வேண்டியிருந்தது. பணத்தை ஆலிவரிடம் கொடுத்து அனுப்பினார். 'விரைவில் திரும்புகிறேன்' என்று சொல்லிவிட்டு ஆலிவர் புறப்பட்டான்.

திருடர்கூட்டத்தைச் சேர்ந்த நான்சி என்ற பெண் கடைத்தெருவில் போய்க் கொண்டிருந்தாள். துரதிர்ஷ்ட வசமாக ஆலிவர் அவளிடம் அகப்பட்டுக் கொண்டான். பாகின் குறிப்பிட்ட ரகசிய இல்லத்திற்கு அவள் அவனை இழுத்துச் சென்றாள். அங்கிருந்த பாகினும், மற்ற திருடர்களும் ஆலிவரின் புதிய சட்டைகளையும், பணத்தையும் பறித்துக் கொண்டனர். ஆலிவர் தப்பி ஓடாமல் இருப்பதற்காக அவனை ஓர் இருட்டு அறையில் சிறை வைத்தனர்.

ஃ ஃ ஃ

ஆலிவர் அந்த இருட்டுச் சிறையிலேயே அநேக நாட்களைக் கழித்தான்.

ஒரு நாள் பாகின் ஆலிவரை பில் சைக்ஸ் என்பவனிடம் அழைத்துச் சென்றான். ''பில் சைக்ஸ் சொன்னபடி கேள்'' என்று கூறிவிட்டுத் திரும்பினான்.

ஆலிவரின் தலைக்கு நேராக ஒரு துப்பாக்கியை நீட்டினான் பில் சைக்ஸ். ''கவனமாகக் கேள். சத்தம் போடாமல் என்னோடு வா. தப்பிக்க முயன்றால் உன்னைத் தொலைத்து விடுவேன்! புரிகிறதா?'' என்று பயமுறுத்தினான். பயத்தால் உடல் நடுங்க ஆலிவர் ''சரி'' என்று தலையை அசைத்தான்.

சைக்சும் அவனுடைய தோழனும், ஆளுக்கு ஒரு துப்பாக்கியை எடுத்துக்

கொண்டனர். பக்கத்திற்கு ஒருவராக ஆலிவரின் கையைப் பிடித்துக்கொண்டு சாலையில் நடந்து ஒரு பெரிய வீட்டுக்கு முன்னால் வந்தனர்.

நல்ல இருட்டு. சப்தம் செய்யாமல் மூவரும் மதில் சுவரைத் தாண்டி உள்ளே குதித்தனர். வீட்டை நெருங்கிய பிறகுதான் அவர்கள் திருடர்கள் என்பதும், திருட்டுக்குத் துணையாகத் தன்னை அழைத்துள்ளனர் என்பதும் ஆலிவருக்கு விளங்கின. ஆலிவர் ஒத்துழைக்க மறுத்தான். அவர்கள் விடவில்லை. வீட்டுச் சுவரின் உயரத்தில் ஒரு சின்ன ஜன்னல் இருந்தது.

''உன்னைத் தூக்கி அந்த ஜன்னல் வழியாக உள்ளே விடுகிறேன். உள்ளே போய்ச் சத்தம் செய்யாமல் நீ வாசல் கதவுகளைத் திறக்க வேண்டும். நாங்கள் உள்ளே வந்து உன்னை அழைத்துக்கொள்கிறோம்'' என்று சொல்லி சைக்ஸ் ஆலிவரைத் தூக்கி ஜன்னல் மீது வைத்தான். வீட்டில் இருந்த காவல்காரர்கள் இதைக் கண்டு விட்டனர். உடனே அவர்கள் ஆலிவரை நோக்கிச் சுட்டனர். ஆலிவர் மயங்கி சைக்சின் மீது விழுந்தான்.

ஆலிவரைத் தூக்கிக் கொண்டு சைக்சும், அவன் தோழனும் ஓடினர். வீட்டிலிருந்த காவல்காரர்களும் வேலை ஆட்களும் துப்பாக்கிகளை எடுத்துக்கொண்டு திருடர்களைத் துரத்தினர். மயங்கி இருந்த ஆலிவரை ஒரு சாக்கடையின் ஓரத்தில் கிடத்திவிட்டுத் திருடர்கள் இருட்டில் மறைந்தனர்.

காற்று வீசியது. மழை பொழிந்தது. ஆலிவர் நினைவில்லாமல் வெகு நேரம் கிடந்தான். நினைவு திரும்பியதும் இடது கையைத் தொட்டுப்பார்த்தான். ஒரே வலி. குண்டு பாய்ந்து இரத்தம் பெருகிக் கொண்டிருந்தது. உதவி பெறுவதற்காக அருகில் இருந்த அதே வீட்டை நோக்கி மெதுவாக நடந்தான். கதவைத் தட்டினான். பயங்கரத் திருடன் என்று எண்ணி வேலை ஆட்கள் சர்வ ஜாக்கிரதையாகக் கதவைத் திறந்தால், சின்ன ஆலிவர் அங்கு மயங்கிய நிலையில் நின்றுகொண்டிருந்தான்! ஆச்சரியத்தோடு அவர்கள் அவனை உள்ளே அழைத்துச் சென்றனர்.

அது மேலி அம்மையாரின் வீடு. அவரும், அவருக்கு நெருங்கிய உறவான மிஸ் ரோசும் அங்கு வசித்து வந்தனர். அவர்கள் அன்பு உள்ளம் கொண்டவர்கள். திருடர் கூட்டத்தைச் சேர்ந்தவன் என்று தெரிந்த போதிலும், ஆலிவரின் உயிரைக் காப்பாற்ற அவர்கள்



எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொண்டனர்.

ஃ ஃ ஃ

தப்பி ஓடிய திருடர்கள் பாகினைக் கண்டு ஆலிவரைப் பற்றிய விவரங்களைக் கூறினர். ஆலிவரின் உயிருக்கு ஆபத்து வராமல் இருக்க வேண்டுமே என்று பாகின் கவலைப்பட்டான். இதற்குக் காரணம், ஆலிவர் மீது பாகின் கொண்ட அன்போ பாசமோ அல்ல. ஆலிவரை ஒரு திருடனாக மாற்றினால், பாகினுக்கு ஏராளமாகப் பணம் தருவதாக மாங்க்ஸ் என்பவன் ஏற்கெனவே சொல்லி வைத்திருந்தான்.

மாங்க்ஸைப் பற்றி பாகின் நினைக்கும்போதே அவன் வந்துவிட்டான். மாங்க்ஸ் நல்ல உயரம். கறுப்பு நிறம். இடது கன்னத்தில் சிவப்பு நிறத்தில் ஒரு பெரிய தழும்பு. தீமையே உருவான தோற்றம். ஆலிவருக்கு ஆபத்து என்று அறிந்ததும் அவன் செய்வது அறியாது கலங்கினான்.

ஃ ஃ ஃ

மேலி அம்மையார், மிஸ் ரோஸ், மருத்துவர் — மூவரும் ஆலிவரைச் சுற்றி நின்றனர். கையில் பழுத்திருந்த குண்டை நீக்கி விட்டனர். நினைவு வந்ததும் ஆலிவர் தன்னுடைய கதையைச் சொன்னான். அவனுடைய கஷ்டங்களைக் கேட்டு மூவரும் கண்ணீர் விட்டனர். ஆலிவரின் குழந்தைத் தன்மையும், நல்ல உள்ளமும் அவர்களைக் கவர்ந்தன. அவர்கள் ஒரு பொய்யைச் சொல்லிப் போலிசிடமிருந்து அவனைக் காப்பாற்றினர்.

மேலி அம்மையார் குடும்பத்தினர் ஆலிவருக்கு எல்லா வசதிகளையும் செய்தனர். ''அன்பு என்றால் என்ன?'' என்ற கேள்விக்கு வெகு நாட்களுக்குப் பிறகுதான் ஆலிவருக்கு விடை தெரிந்தது. அவனுடைய மனம் மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் இருந்தது. ஆனால், அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. ஆலிவரின் வாழ்க்கையில் பாகின் மீண்டும் குறுக்கிட்டான்.

ஆலிவர் ஒரு நாள் பயங்கரக் கனவு கண்டான். அந்தக் கனவில் அவன் பாகினுடைய வீட்டில் இருப்பதாக உணர்ந்தான். உடனே அலறிப் புடைத்துக்கொண்டு கண் விழித்தான். எதிரே இருந்த ஜன்னலுக்கு வெளியே இரண்டு பயங்கர முகங்கள் தெரிந்தன. ஒருவன் பாகின். மற்றவன் கன்னத்தில் சிவப்புத்தழும்புள்ளவன். ''பாகின்!பாகின்!'' என்று ஆலிவர் அலறினான். மருத்துவரும், வீட்டிலிருந்த மற்றவர்களும் ஓடிவந்தனர். அதற்குள் பாகினும், தோழனும் மறைந்து விட்டனர். அவர்கள் ஆலிவரைத் தொடருவதற்கு ஏதாவது முக்கிய காரணம் இருக்க வேண்டும் என்று மருத்துவர் ஊகித்தார்.

ஃ ஃ ஃ

ஆலிவர் சின்னஞ் சிறு குழந்தையாக இருந்த போது, அவன் இருந்த



தாய்க்குரங்கும் குட்டிக்குரங்கும்



குரங்குக் குட்டி சிறியதாக இருக்கும்போது தாய்க் குரங்கின் அடிவயிற்றைக் கைகளாலும் கால்களாலும் நன்றாகப் பற்றிக் கொள்ளும். தாய்க் குரங்கு மரத்திற்கு மரம் தாவிச் செல்லும்போதுகூட குட்டிக் குரங்கு பிடியை விடாது.

குட்டிக் குரங்கு இறந்து போனால், தாய்க் குரங்கு அதை அங்கேயே போட்டு விட்டுப் போகாது. அதைத் தான் போகிற இடங்களுக்கெல்லாம் எடுத்துக் கொண்டு போகும். சதா அழுது கொண்டே இருக்கும். இப்படியே சில நாட்கள் அழுதபடி அலைந்து திரியும். என்றாவது அது அசதியாக இருக்கும்போது, ஏதேனும் ஒரு பறவை, அல்லது மிருகம் செத்துப்போன குட்டிக் குரங்கை அடித்துக் கொண்டு போய்விடும்!

ஏழைகளின் காப்பகத்திற்கு மாங்க்ஸ் சென்றுஆலிவரின் அம்மாவைப் பற்றிய செய்திகளை அறிந்தான். அவள் இறக்கும்போது ஒரு சின்னப் பேழையைக் கொடுத்து, அதைத் தன் குழந்தையிடம் சேர்ப்பிக்கும்படி சொல்லியிருந்தாள். பேழையில் அவளுடைய பெயர் பொறித்த மோதிரமும், சில தலை முடிச் சுருள்களும் இருந்தன. அவளுக்கு மருத்துவம் பார்த்த மூதாட்டியும் இறந்து விடவே, அந்தப் பேழை காப்பகத்தின் தலைவர் பம்பிள் கைக்கு வந்தது. அதை அவர் ஆலிவரிடம் கொடுக்கவில்லை. தாமே வைத்துக் கொண்டார்.

மிஸ்டர் பம்பிளுக்கு நிறையப் பணம் கொடுத்து மாங்க்ஸ் அந்தப் பேழையை வாங்கினான். அதை ஓடும் ஆற்றில் வீசி எறிந்தான். "ஆலிவர் யாரென்று உலகத்தில் யாருக்கும் தெரியாது. நீங்களும் இதைப் பற்றி யாரிடமும் பேச வேண்டாம்" என்று எச்சரிக்கை செய்தான்.

ஒரு நாள் மாங்க்ஸ் பாகினிடம் சென்று ஆலோசனை செய்தான். "ஆலிவர் என்னுடைய சகோதரன்தான். இருந்தாலும் அவனுக்குக் கஷ்டம் கொடுத்துக்கொண்டே இருப்பேன். சமயம் கிடைத்ததும் அவனைத் தீர்த்துக் கட்டி விடுவேன்" என்று சொல்லி அதற்குப் பாகினுடைய உதவியை வேண்டினான்.

அவர்களுடைய உரையாடலை பாகினுடைய திருட்டுக் கூட்டத்தில் இருந்த நான்சி தற்செயலாகக் கேட்டாள். அவளுக்கு அப்பாவி ஆலிவர் மீது எப்போதுமே அன்பு உண்டு. ஆகையால், எப்படியும் அவனைக் காப்பாற்றுவது என்று தீர்மானித்தாள். மேலி அம்மையாரின் உறவினரான மிஸ் ரோசிடம் சென்று நான்சி தன்னை அறிமுகம்செய்து கொண்டாள். "உங்களைப் போன்ற நல்லவர்கள் உலகத்தில் பெருகினால் என்னைப் போன்ற தீயவர்கள் குறைவார்கள்" என்று சொல்லி, ஆலிவருக்கு வரவிருக்கும் ஆபத்தையும், அதைத் தடுக்க வேண்டிய அவசியத்தையும் விவரித்தாள். ரோஸ் ஆலிவரை எப்படியும் காப்பாற்றுவதாக உறுதி அளித்தாள்.

ஃ ஃ ஃ

முன்பு ஆலிவர் மயக்கமாகக் கிடந்தபோது வீட்டுக்கு வண்டியில் ஏற்றி வந்து ஆதரித்தாரே, அந்த பிரவுன் லோவின் வீட்டுக்கு ஆலிவரை அழைத்துக்கொண்டு மிஸ் ரோஸ் சென்றாள். வந்த காரியத்தைச் சுருக்கமாகக் கூறி பிரவுன் லோவின் உதவியை நாடினாள். மாங்க்ஸையும் நான்சியையும் தனித் தனியே சந்தித்துப் பேசி ஒரு முடிவு காண்பதெனப் பிரவுன் லோ தீர்மானித்தார்.

ஃ ஃ ஃ

பிரவுன் லோ இரு வேலையாட்களை அனுப்பி மாங்க்ஸைத் தம் வீட்டுக்கு இழுத்து வரச் செய்தார்.

மாங்க்ஸைப் பார்த்ததும், "என்னப்பா, எட்வர்டு லீ போர்டு! இப்படி உட்கார். உன்னிடம் சில சமாசாரங்கள் பேச வேண்டும்" என்றார் பிரவுன் லோ.

"உங்களை என் அப்பாவின் நண்பர் என்றல்லவா நினைத்தேன்! ஏன் என்னை இப்படி நடத்துகிறீர்கள்?" என்று கோப

மாகக் கேட்டான் லீ போர்டு என்ற உண்மைப் பெயர் உடைய மாங்க்ஸ்.

''அதனால்தான் அப்பா உன்னிடம் இவ்வளவு அன்பாக இருக்கிறேன். இல்லாவிட்டால், முதலிலேயே உன்னைப் போலீசில் ஒப்படைத்திருப்பேன்.''

''நான் தவறு ஒன்றும் செய்யவில்லையே.''

''உனக்கு ஒரு தம்பி இருக்கிறானல்லவா? அவனுக்கு நீ தவறிழைக்கவில்லையா?''

''எனக்குத் தம்பி என்று யாரும் கிடையாது.''

''நீ மறந்து விட்டால் நான் உனக்கு ஞாபகமூட்டுகிறேன். ஆலிவர் ட்விஸ்ட் என்ற பெயரில் உனக்கு ஒன்று விட்ட தம்பி உண்டு. சித்தியை அழைத்துக் கொண்டு உன் அப்பா ரோமுக்குப்போவதற்கு முன்னால் என்னிடம் வந்தார். தன்னுடைய சொத்து விஷயங்களைப் பற்றிச் சொன்னார். உன் அம்மாவுக்கும் உனக்கும் ஆண்டுக்குத் தலா ஆயிரம் பவுன் சேர வேண்டும் என்றும், பாக்கி உள்ள சொத்து எல்லாம் உன் சித்திக்கும்,சித்தியின் குழந்தைக்கும்தான் என்றும் உயில் எழுதியிருக்கிறார். ஆனால் அந்த உயிலில் ஒரு முக்கிய அம்சம் உண்டு. உன் கெட்ட நடவடிக்கைகள் உன் அப்பாவுக்குப் பிடிக்கவில்லை. ஆகவே, உன் தம்பியாவது நல்லவனாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். அவன் நல்லவனாக இராவிட்டால் தன்னுடைய சொத்தில் அவனுக்குப் பங்கு இல்லை என்றும் அவர் எழுதியிருக்கிறார். அதனால்தான் ஆலிவரைத் திருடனாக மாற்ற நீ முயற்சி செய்கிறாய். பாகினின் உதவியையும் கேட்டிருக்கிறாய். இவற்றை யெல்லாம் நீ மறுக்க முடியுமா?'' என்று கேட்டார்.

''இதெல்லாம் சுத்தக் கட்டுக் கதை''


''என்னிடம் தகுந்த ஆதாரங்கள் இருக்கின்றன. ஆலிவரின் சொத்துக்கள் அவனுக்கே சேர வேண்டும் என்று நான் ஒரு வாக்குமூலம் எழுதியிருக்கிறேன். அதில் நீ கையெழுத்துப் போட வேண்டும். இல்லாவிட்டால் போலீசைக் கூப்பிடுவேன்'' என்றார் பிரவுன் லோ.

மாங்க்ஸ் பணிந்தான். வாக்குமூலத்தில் அவர் சொன்னபடியே கையெழுத்திட்டான்.

ஃ ஃ ஃ

பிரவுன் லோ ஆலிவரை வளர்ப்பு மகனாக வரித்தார். மேலி அம்மையாரும், மிஸ் ரோசும் அவனுடைய நலனில் அக்கறை காட்டினர். ஆலிவரின் துன்பங்கள் தொலைந்து இன்ப வாழ்க்கை தொடங்கியது. மாங்க்ஸ் அமெரிக்காவுக்குக் கப்பல் ஏறினான். பாகினையும் அவன் கூட்டத்தினரையும் போலீஸ் கவனித்துக் கொண்டது!

Charles Dickens எழுதிய Oliver Twist என்ற ஆங்கிலக் கதையின் சுருக்கமே இது.



பழமொழியும் புதுமொழியும்

இட்டா தாயின் வெட்டென மற.
இட்டுமாயின் சட்டென நினை.

எட்டாப் பழத்துக்குக் கொட்டாவி.
விடாதே.
எட்டும் பழத்தைக்கோட்டை விடாதே.

ஐந்தில்வளையாதது ஐம்பதில் வளையாது.
ஐந்தில் வளைந்தது ஐம்பதில் நிமிராது.

திறந்து கிடக்கிற நகைப் பெட்டி,
ஞானியையும் திருடச் செய்யும்.
திரைப் படங்களின் சுவரொட்டி,
கழுதையையும் தின்னச்செய்யும்.

கப்பல் கவிழ்ந்தாலும்
கன்னத்தில் கைவைக்காதே!
புதையல் கிடைத்தாலும்
பூரித்துக் குதிக்காதே!

யானை வரும் பின்னே,
மணியோசை வரும் முன்னே.
தைப் பொங்கல் வரும் பின்னே,
செங்கரும்பு வரும் முன்னே.

துஷ்டரைக் கண்டால் தூர விலகு.
அறிஞரைக்கண்டால்ஆசையாய்ப்பழகு.

—வி. ரெங்கம்

அகஸ்டீன் மாறிவிட்டான்!

ஆர். ராதாகிருஷ்ணன்

"அகஸ்டீன் என்னவோ இப்போது ரொம்ப மாறிவிட்டான். முன்பெல்லாம் ரொம்ப அடக்கமா, ஒடுக்கமா இருன்னு சொல்லக் கூடிய இடத்தில் மறு பேச்சில்லாமல் அப்படியே இருப்பான். ஆனால், காலையில் எட்டு மணின்னு இப்போது ஸ்கூலுக்கு ஓடிடுறான். மாலை ஆறு மணிக்கு மேல் தான் வீட்டுக்குத் திரும்பி வருகிறான்." -அகஸ்டீனின் அம்மா, மகனைப் பற்றி இப்படி மனத்துக்குள் சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

அகஸ்டீன் ஆறும் வகுப்புப் படிக்கும் மாணவன். வீட்டிலிருந்து ஒன்றரை மைல் தூரத்தில் உள்ள பள்ளிக்கூடத்தில் படித்து வருகிறான்.

முன்பெல்லாம் அகஸ்டீன் மிகவும் அமைதியாய் இருப்பான். அகஸ்டீனின் அப்பா ரொம்பக் கண்டிப்பானவர். அகஸ்டீனைப் பார்வையாலேயே பணிய வைத்து விடுவார். சரியாகக் காலையில் ஒன்பது மணிக்குத்தான் பள்ளிக்கூடம் போக அனுமதிப்பார். சாயங்காலம் ஐந்து மணிக்கு முன் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வீட்டுக்கு வந்துவிட வேண்டும் என்று அவனைத் தினந்தோறும் எச்சரிப்பார். அகஸ்டீனுக்குச் சுதந்திரம் என்பதே கிடையாது. ஸ்கூல் முடிந்து வந்து நண்பர்களோடு விளையாடுவதற்குக் கூட அவனை அவனுடைய அப்பா அனுமதிப்பது இல்லை. எல்லோரும் விளையாடிக் கொண்டு இருக்கும்போது அவன் மட்டும் வீட்டிற்குள் உட்கார்ந்து புத்தகத்தை வைத்துக் கொண்டு படிக்கிற மாதிரி பாவனை பண்ணிக் கொண்டிருப்பான்.

பள்ளிக்கூடத்தில் எல்லா மாணவர்களும் தினந்தோறும் காசு கொண்டு வந்து எதையாவது தின் பண்டங்களை வாங்கித் தின்பார்கள். அகஸ்டீன் மட்டும் கையிலே காசு இல்லாததால் பள்ளிக்கூடத்தின் அருகே உள்ள மரத்தின் கீழ் அமர்ந்திருப்பான்.

எல்லாமாணவர்களும் ஆனந்தமாய்த் துள்ளிக் குதித்து விளையாடிப் பொழுது போக்கும்போது அகஸ்டீன் மட்டும் சிறகொடிந்த பறவை போல், இருந்த இடத்தை விட்டு அசையாமல் இருப்பான்.

ஆனால் கடந்த இரண்டு மாசமாய் அகஸ்டீன் முற்றிலும் மாறிவிட்டானே!

பள்ளிக்கூடம் விட்ட பிறகு மாலை ஆறு மணிக்கு மேல்தான் அவன் வீட்டுக்கு வருவான். இப்போது தினந்தோறும் கால் ரூபாய் கொடுத்தால் தான் அவன் பள்ளிக்கூடம் போவான்.

அகஸ்டீனின் அப்பா உடம்பு சரியில்லாமல் நாற்பது நாள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். எந்தவித முன்னேற்றமும் இல்லாமல், எல்லா டாக்டர்களும் கை விட்ட பிறகு, இப்போது படுத்த படுக்கையாய் வீட்டில்தான் இருக்கின்றார்.

'நம் கணவர் நல்ல நிலையில் இருந்தால் அகஸ்டீன் இப்படி மாறியிருப்பானா!' என்று நினைத்து நினைத்து வருந்தினாள் அகஸ்டீனின் அம்மா.

அகஸ்டீனின் மன மாற்றத்தைப் பற்றி அவன் அம்மா தன் கணவரிடம் ஒரு வார்த்தைகூடச் சொல்வது இல்லை. ஏற்கெனவே நொந்து போயிருக்கும் அவருக்கு இதை யெல்லாம் கேட்டால் இன்னும் உடம்பு கெட்டு விடுமே என்ற பயம்தான்!

இந்த மாத மார்க் லிஸ்ட் வந்து விட்டது. பொதுவாக, ஓரளவுக்கு எல்லாப் பாடங்களிலும் நல்ல மார்க் எடுப்பான் அகஸ்டீன். ஆனால், இந்தத் தடவை குறைவான மார்க்குகளே வாங்கி யிருந்தான்.

இனிமேல் நிச்சயம் பள்ளிக்கூடம் போய் அகஸ்டீனின் நிலை பற்றி விசாரிக்க வேண்டும் என்று அகஸ்டீனின் அம்மா தீர்மானித்தாள்.

மூன்று மணிக்குப் புறப்பட்டு, மூன்றரைக்குள் பள்ளிக்கூடம் அடைந்தாள் அகஸ்டீனின் அம்மா. அகஸ்டீனின் வகுப்புப் பூட்டப் பட்டிருந்தது. வகுப்புக்கு முன் உள்ள ஒரு மரத்தின் கீழ் தோழிகளுடன் விளையாடிக்கொண்டிருந்த அகஸ்டீனின் வகுப்புத் தோழி மீனாட்சி, "முன்பே அகஸ்டீன் வீட்டிற்குப்போய் விட்டானே! எங்களுக்குக் கடைசி வகுப்பு இல்லை" என்று அகஸ்டீனின் அம்மாவிடம் சொன்னாள்.

அகஸ்டீனின் அம்மா அவன் வகுப்பு ஆசிரியர் இருக்கும் அறையை அடைந்தாள்.

"வாங்கம்மா...உங்களை நான் பார்க்கணும்னு நினைச்சுக்கிட்டே இருந்தேன். நீங்களே வந்துட்டீங்க. எனக்கு என்னவோ அகஸ்டீனின் நடத்தைகள் இப்போது கொஞ்சம் கூடப் பிடிப்பது இல்லை. கிளாசில் சுறுசுறுப்புடன்இல்லை.



படிப்பதும் இல்லை. இந்தப் பரீட்சையிலும் குறைவான மார்க்குகள். அவனைக் கெட்டுப் போகாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.'' என்று மூச்சு விடாமல் அகஸ்டினைப் பற்றிய குற்றச்சாட்டுகளை அடுக்கிக் கொண்டிருந்தார் வகுப்பு ஆசிரியர்.

ஒரு வழியாக டீச்சரிடம் பேசி விட்டு வெளியே வந்தாள் அகஸ்டினின் அம்மா. அகஸ்டினைப் பற்றி ஆசிரியர் தந்த தகவல்கள் அவளுக்கு அதிர்ச்சியைத் தந்தன. ''இனிமேலாவது கட்டாயம் அகஸ்டினை நாம் நன்கு அடக்கி வைக்க வேண்டும்.'' என்று அகஸ்டினின் அம்மா மனத்தினுள் நினைத்துக் கொண்டாள்.

அகஸ்டின் நிச்சயம் வீட்டுக்குப் போயிருக்க மாட்டான். அப்படிப் போயிருந்தால் அகஸ்டினின் அம்மா வந்த வழியாகத்தான் போக வேண்டும். வேறு வழி கிடையாது.

எல்லா மாணவர்களிடமும் விசாரித்துப் பார்த்தாள். கடைசியில் பள்ளிக்கூடத்துக்கு அருகில் உள்ள மரங்கள் அடர்ந்த காட்டுப் பகுதிக்குப் போனதாக ஒரு மாணவன் கூறினான்.

அகஸ்டினின் அம்மா வேகமாய்ச் சென்றாள். வழியில் சில மாணவர்கள் மரங்களின் மறைவில் நின்று சிகரெட் ஊதித் தள்ளினார்கள். அகஸ்டின் கெட்ட நண்பர்களுடன் சேர்ந்து கெட்ட பிள்ளையாக மாறி விட்டானா?

அதோ அகஸ்டின்....!

ஒரு பெரிய மரத்தின் கீழ் உள்ள இசக்கியம்மன் கோவிலின் முன்பு அகஸ்டின் கை கூப்பி வணங்கிக்கொண்டிருந்தான்.

''அம்மா... தாயே. என் அப்பாவை நோயிலிருந்து காப்பாற்று... எங்கப்பா இல்லாமல் என்னால் ஒரு நாள் கூட வாழ முடியாது.'' என்று வேண்டிய படி தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தான். கடைசியில் கையில் இருந்த ஒரு கால் ரூபாயைக் காணிக்கைப் பெட்டியில் போட்டான்.

அகஸ்டினின் வேண்டுதலையும் காணிக்கையையும் கண்ட அவன் அம்மாவின் மனம் நெகிழ்ந்தது. ஓடிச்சென்று அவனை அணைத்துக் கொண்டாள்.

''அம்மா, என்னை மன்னிச்சுடுங்க. அப்பா'வுக்கு நோய் தீரவில்லையே என்கிறதுக்காக நான் உங்களிடம் சொல்லாமலேயே இந்தக் கோயிலுக்கு வேண்டுதல் செய்ய வந்தேன்.

''என் வகுப்புத் தோழி மீனாட்சி அவள் பாட்டி நோய்வாய்ப் பட்டிருந்த போது, இந்தக் கோவிலுக்கு வந்து வேண்டுதல் செய்ததால், அவள் பாட்டி பிழைச்சிட்டாங்களாம். அதனால்தான் நான் இங்கு வந்தேன். நீங்கள்தான் என்னைக் கர்த்தர் கோவில் தவிர வேறு எங்கும் போகக் கூடாது என்று சொல்லுவீங்களே, ஆதலால்தான் உங்களிடம் சொல்லாமல் இந்தக் கோவிலுக்கு வந்தேன். உங்களிடமிருந்து தினந்தோறும் பெற்ற பணத்தையும் இந்தக் கோவிலுக்குத்தான் காணிக்கை செலுத்தி வந்தேன் ''என்றான் அகஸ்டின்.

அகஸ்டினின் அம்மா அவனை அன்போடு அணைத்து வீட்டுக்கு அழைத்துச் சென்றாள்.

அப்பாவின் உடல்நிலை படிப்படியாக முன்னேறிச் சில நாட்களில் பூரண குணம் பெற்றுவிட்டார். உடல் பழைய நிலைக்கு வந்து விட்டது. எல்லாம் ஒரு சிறுவன் உள்ளம் உருகி வேண்டிக் கொண்டதன் பலன்தானே!

முகமூடிப்பெண்





ஜப்பான் தேசத்தில் ஒரு சிறு கிராமம். அங்கே வயலில் வேலை செய்து கொண்டிருந்தார்கள் சில ஆண்களும், சில பெண்களும். அப்போது, மண் சட்டியைத் தலையில் கவிழ்த்தபடி ஓர் உருவம் வந்தது. எல்லாரும் உற்றுப் பார்த்தார்கள். அது ஒரு பெண்ணின் உருவம்!


தலையிலிருந்து வாய் வரை மண் சட்டி மறைத்திருந்ததால் அந்தப் பெண்ணின் முகம் தெரியவில்லை. ''நான் ஒரு ஏழை. இங்கு கூலி வேலை செய்யட்டுமா?'' என்று பண்ணையாரை அவள் கேட்டாள். அவரும், 'சரி' என்றார்.






''ஏன் இப்படி முகத்தை மூடிக் கொண்டிருக்கிறாய்?'' என்று பண்ணையார் கேட்டார். ''காரணத்தோடுதான். நான் ஒரு விரதம் எடுத்துக் கொண்டிருக்கிறேன்;'' என்றாள். எவ்வளவோ முயன்றும் அவளது முகத்தை எவராலுமே பார்க்க முடியவில்லை.


மற்றவர்களைக் காட்டிலும் அவள் நன்றாக வேலை செய்தாள். மிகவும் சுறுசுறுப்பாக இருந்தாள். தான் உண்டு; தன் வேலை உண்டு என்று இருந்தாள். பண்ணையாருக்கு அவளை மிகவும் பிடித்திருந்தது. அவளைத் தன் வீட்டில் வேலைக்காரியாகச் சேர்த்துக் கொண்டார்.






அவள் மிகவும் மரியாதையாகப் பழகினாள். பண்ணையார் மனைவி காய்ச்சலாகப் படுத்தபோது சொந்த மகளைப் போலப் பணிவிடை செய்தாள். ஒரு நாள் பண்ணையார் மனைவி, ''ஏன் இப்படி முகத்தை மறைத்துக் கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டாள்.

''அது ஒரு ரகசியம். இருந்தாலும் சொல்கிறேன். என் அம்மா இறக்கும்போது இந்த மண் சட்டியைக் கொடுத்து, ''இதனால் உன் முகத்தை எப்போதும் மறைத்துக்கொள். நீ அழகாக இருக்கிறாய். உன் அழகைப் பார்க்காமல் உன் குணத்தைப் பார்த்து உன்னை மணக்க வருபவரையே மணந்துகொள்' என்று சொன்னாள்'' என்றாள்.





''ஆ! அப்படியா! சரி, ஆனால், எனக்கு மட்டுமாவது உன் முகத்தைக் காட்ட மாட்டாயா?''


''இந்தச் சட்டியை என் தலையில் மாட்டியபோது எனக்குப் பதினாறு வயது. இப்போது நான் நன்கு வளர்ந்துவிட்டதால், கழற்ற முடியாது''

பட்டணத்தில் மேல் படிப்பு படித்து வந்த பண்ணையார் மகன், விடுமுறையில் ஊருக்கு வந்தான். முகமூடிப் பெண்ணை முதல் முதலாகப் பார்த்தபோது அவனுக்கு வேடிக்கையாக இருந்தது. ஆனால், அவள் தன் பெற்றோருக்கு மிகவும் உதவியாக இருப்பது கண்டு மகிழ்ந்தான்.




ஒரு நாள் "அம்மா, நமது வேலைக்காரப் பெண்ணை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. நான் அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளட்டுமா?" என்று அம்மாவிடம் கேட்டான்.

"என்ன! ஒரு ஏழை வேலைக்காரி. அவள் முகத்தில் என்ன கோளாறோ? ஒரு கண் பொட்டையாகக் கூட இருக்கலாம். கூடவே கூடாது" என்றான்.




நாட்கள் நகர்ந்தன; மகனோ அந்தப் பெண்ணைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன் என்று பிடிவாதமாகக் கூறினான். பெற்றோர் ஆத்திரப்பட்டனர்; கோபமாகப் பேசினர்.


"என்னால்தானே இந்தக் குழப்பம்? நான் இந்த ஊரை விட்டே ஓடிவிட வேண்டும்" என்று அப்பெண் முடிவு செய்தாள்.



ஒரு நாள், நள்ளிரவில் அவள் மெதுவாக நடந்துபோய்ப் பண்ணையார் வீட்டு வாசல் கதவைத் திறந்து தெருவிலே காலை வைத்தாள். அப்போது அவளைப் பின் தொடர்ந்து வந்த பண்ணையார் மகன் அவளைத் தடுத்து நிறுத்தி, வீட்டுக்குள் அழைத்துச் சென்றான்.



மறு நாள் காலையில் பண்ணையார் மகன் தன் பெற்றோரிடம், "அவள் முகம் எப்படி இருந்தாலும் சரி, நான் அவளையே மணப்பேன். அவளைக் காட்டிலும் நல்ல மருமகள் உங்களுக்குக் கிடைக்கவே மாட்டாள். தடை செய்யாதீர்கள்!" என்றான்.



மகனின் மனத்தை மாற்ற முடியாது என்பதைப் பெற்ருேர் உணர்ந்தனர். ''சரி, உன் விருப்பம் போல் நடக்கட்டும். முகம் தெரியாத ஏழை வேலைக்காரி எங்களின் மருமகளாக வருவது எங்களின் தலைவிதியே'' என்ருர்கள்.




பண்ணையார் மகனுக்கும் அந்தப் பெண்ணுக்கும் திருமணம் நடந்தது.

''பையனுக்கோ பெண் முகத்தைப் பார்க்க முடியாது. பெண்ணுக்கோ பையன் முகம் தெரியாது. ஆனுலும். கலியாணம் நடக்கிறது!'' என்று வந்திருந்தவர்கள் கேலியும் கிண்டலும் செய்தார்கள்.



திருமணம் முடிந்ததும், மணமக்கள் புத்தவிக்கிரகத்தின் முன் சென்று மண்டியிட்டு வணங்கினர். அப்போது மணமகளின் தலையிலிருந்த மண் சட்டி புத்தரின் காலில் 'டங்' என்று மோதிப் பலசுக்குகளானது. அதிலிருந்துவைரமும் வைடூரியமும் நாலா பக்கமும் சிதறின!



''ஆ! என் மருமகள் ஏழை யில்லை! அவள் முகத்தில் எவ்விதக் கோளாறும் இல்லை!'' என்ருள் மணமகனின் தாய்.

''ஆ! என் மனைவி நல்ல குணவதி மட்டுமல்ல; மிக மிக அழகாகவும் இருக்கிருள்!'' என்ருன் மணமகன்.

மற்றவர்களும் அக்காட்சியைக் கண்டு வியந்தனர்.

படித்த பிடித்த புத்தகங்கள்



ஒருநாள் திடீரெனப் பணக்காரச் சிறுவனாகிய குமார், தன் நண்பனாகிய பரம ஏழை கண்ணப்பன் வீட்டுக் குடிசைக்கு வருகிறான். அந்தக் குடிசையையும், சுற்றுப் புறத்தையும் அங்குள்ள ஏழை மக்களின் கஷ்டங்களையும் கண்டு மனம் கலங்குகிறான்.

மறுநாள் குமார் பள்ளிக்கு வந்த போது, எல்லோரும் அவனைக் கண்டு ஆச்சரியப்படுகிறார்கள். வழக்கமாகப் பளபளப்பான உடையில் வரும் குமார், சாதாரணப் பருத்தி உடையில் வந்திருக்கிறான்! கையிலே கடிகாரம், விரலிலே மோதிரம், பையிலே விலை உயர்ந்த பேனா, உடம்பிலே சென்ட் வாசனை — எதுவுமே இல்லை!

அந்த மாற்றத்துக்கு என்ன காரணம்?

குமார் கண்ணப்பனிடம் சொல்கிறான்: ''அன்னிக்கு உன் வீட்டுக்கு வந்த பிறகு என் மனசே சரியில்லை. நான் ஏதோ தப்புப் பண்ணிவிட்டவனைப் போல் தோணுது. நீங்கள் எல்லோரும் சாப்பாடு இல்லாமல், உடுத்தத் துணி இல்லாமல் கஷ்டப் படறீங்க. ஆனால், நான் எவ்வளவு சுகமாக இருக்கிறேன்! அதை நினைச்சுப் பார்க்கிறப்போ மனசுக்கு வேதனையா இருக்கு!''

கண்ணப்பன்தான் குமாரின் மனத்தை மாற்றி விட்டான் என்று குமாரின் அப்பா நாகலிங்கம் சீறுகிறார். கண்ணப்பனின் அப்பா முத்துசாமி, நாகலிங்கத்திடம் டிரைவராக வேலை பார்த்து வருவதால், அவரைப் பலவாறு மிரட்டுகிறார்.

ஒருநாள் குமாரின் அப்பா, டிரைவர் முத்துசாமியிடம், ''நான் காரை ஓட்டிப் பார்க்கிறேன். நீ நகர்ந்துக்கோ'ன்னு சொல்லிவிட்டு ஓட்டுகிறார். சரியாகக் கார் ஓட்டத் தெரியாததால், கார் தெருவிலே போன ஒருவர் மீது மோதி விடுகிறது. உடனே டிரைவரைத் தாம், இருந்த இடத்தில் உட்கார வைத்து விட்டு, குற்றத்தை ஒப்புக் கொள்ளும் படி டிரைவரிடம் கேட்டுக் கொள்கிறார். டிரைவரின் குடும்பத்துக்கு வேண்டிய உதவிகளையும் செய்வதாகக் கூறுகிறார். குற்றத்தை ஒப்புக் கொண்ட டிரைவர் ஜெயிலுக்குப் போக வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது. ஆனால், சொன்னபடி நாகலிங்கம் எந்த உதவியும் செய்ய வில்லை. ஏமாற்றி விடுகிறார்!

இந்த உண்மையை அறிந்த கண்ணப்பனும் குமாரும் வேதனைப்படுகிறார்கள். தாயையும் உடன் பிறந்தவர்களையும் காப்பாற்ற, கண்ணப்பன் படிப்பை நிறுத்திவிட்டு, வேலைக்கு அலைகிறான். பல துன்பங்களுக்கு இடையில் படிப்படியாக முன்னேறுகிறான்.

கண்ணப்பனின் விடா முயற்சியையும், குமாரின் தூய நட்பையும்

நன்றாக எடுத்துக் காட்டுகிறார் இந்தப் புத்தக ஆசிரியர்.

கிழிந்து போன துணியைக் கைத் தையல் போட்டுவிட்டுப் பார்த்தால் எது போலத் தோன்றுமாம்? மர வட்டை போலத் தோன்றுமாமே! அழகான உவமை.

இந்தப் புத்தக ஆசிரியர் **ஆழி. வே. ராமசாமி** அவர்களின் 'ஏழைப் பெண்', 'நாடோடிக் கதைகள்', 'விஞ்ஞான வேடிக்கைகள்' போன்ற புத்தகங்களை நான் ஏற்கெனவே படித்திருக்கிறேன். எதையும் புரியும்படி அழகாக எழுதுகிறார். இல்லாது போனால், இவர் குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய குழந்தை இலக்கியப் போட்டியில் மூன்று தடவைகள் ஏ. வி. எம். அறக்கட்டளையின் தங்கப் பதக்கங்களைப் பெற்றிருக்க முடியுமா?

இப்புத்தகத்தை வெளியிட்டோர்: செல்வி பதிப்பகம், காரைக்குடி விலை ரூ. 5.

அ. பாலாஜி, அழகியநல்லூர்.



''என்ன இது! கொஞ்சம்கூடக் காற்றே இல்லையே! காற்றின் அறிகுறி கூடத் தென்படவில்லையே! மரம்செடியின் இலைகள்கூட அசையவில்லையே!' என்கிறாள் சுசிலா.

''காற்றின் அறிகுறி தென்படவில்லையே தவிர, காற்றே இல்லை என்று கூற முடியாது. காற்று இல்லாத வெற்றிடத்தில் எந்த உயிரினமும் உயிரோடு இருக்க முடியாது. காற்றே இல்லை என்று நாம் நினைக்கும் இடத்தில் மின்விசிறியைக் கொண்டு வந்து வைத்துச் சுழலவிட்டுப் பாருங்கள்! காற்று அப்போது வீசுவது தெரியும். காற்று எப்படி வந்தது? மின்விசிறிக்குள்ளிருந்து காற்று வந்தது என்று கூற முடியுமா? அசைவில்லாமல் இருந்த காற்றை மின் விசிறி அசைத்து இயங்கச் செய்திருக்கிறது. அவ்வளவுதான்!'' என்று பதில் கூறுகிறார் மாமா.

ஒலியைப் பற்றி ராமு கேட்கும் ஒரு கேள்விக்கு, ''இரயில் வண்டி தொலைவில் வரும்போது தண்டவாளத்தின் மீது காதை வைத்துக் கேட்டால், இரயில் வரும் ஓசை தண்டவாளத்தின் மூலம் தெளிவாகக் கேட்கும். அதேபோல், ஏரி, குளம் போன்ற நீர் நிலைகளில் நீரின் அடியிலே ஒருவனை இரண்டு கற்களைக் கொண்டு தட்டச் செய்து நீரின் மேற்பரப்பில் காதுகளை வைத்துக் கொண்டு கேட்டால் அந்த ஒலி தெளிவாகக் கேட்கும்'' என்கிறார் மாமா.

''நமது நாட்டில்தான் பெருமளவுக்குக் கடல் நீரிலிருந்து உப்பு தயார் செய்கிறார்கள். பெரும்பகுதியான பிற நாடுகளில் பாறையிலிருந்து எடுக்கப்படும் உப்பிலிருந்துதான் சாப்பாட்டு உப்பைச் சேகரிக்கிறார்கள். பாறை உப்பு என்பது பூமிக்கு மேலே வெளிப்படையாகக் காணப்படுவது இல்லை. நிலப்பரப்பின் உள்ளே ஆழத்தில் பாளம் பாளமாக அது காணப்படுகிறது''

''உப்பு உணவுக்குத் தேவையான பண்டம்தான். ஆனாலும், உப்பை அளவுக்கு அதிகமாக உணவில் சேர்த்துக் கொண்டால் உடல்நலம் கெட்டு விடும்.''

—இப்படிப் பல அறிவியல் உண்மைகளைக் கதைபோலக் கூறுகிறார் இந்தப் புத்தகத்தை எழுதியிருக்கும் **ர. சண்முகம்** அவர்கள்.

நீராவி, சூரிய குடும்பம், ஒலி, காற்று — இப்படிப் பத்து அத்தியாயங்களில் பல அருமையான செய்திகளை இப்புத்தகத்தில் படித்தேன். இப்படிப்பட்ட ஆசிரியருக்கு நம்மைப் போன்றவர்கள் மிகவும் நன்றி செலுத்த வேண்டும்.

அட்டை மிகவும் கவர்ச்சியாக இருக்கிறது.' உள்ளேயும் படங்கள் இருந்தால், இன்னும் நன்றாக இருக்கும். கதைப் புத்தகங்களுக்குப் படங்கள் இல்லாது போனால்கூடப் பரவாயில்லை. அறிவியல் புத்தகங்களுக்கு அவசியம் தேவையென்றே நினைக்கிறேன்.

இப்புத்தகத்தை வெளியிட்டவர்கள்: அருணோதயம், சென்னை—14, விலை ரூ. 7.

—**அரு. மீனாள்,** கீழச்சிவல்பட்டி.


கருணைக் கடலான கந்தவேள், வீரபாகுவைத் தூது அனுப்பி சூரபன்மனுக்கு அறவுரை கூறியும் பயன் இல்லை. தன்னைக் கொல்ல வந்த வச்சிரவாகு என்னும் சூரபன்மன் மகனையும் படையையும் கொன்று, நகரைச் சிதைத்து, வீரபாகு திருச்செந்தூர் மீண்டார். முருகன் படை புறப்பட்டது. கடலை எப்படிக் கடப்பது என்று கவலையுற்றது படை.
வெற்றிவேல் வீரவேல்
கதை: சுகிசிவம்
படம்: வினு
8
முருகனும் தேவர்களும் விண்வழி கடலைக் கடந்தனர். பெரும் பூதங்கள் கடலில் இறங்க, கடல் வற்றிச்சுருங்கியது. படையின் மற்ற பகுதியினர் சுலபமாகக் கடந்தனர்.
அதே சமயம்... சூரபன்மன் அரண்மனையில்...
அவமானம்! நகர் அழிந்தது! சிறுவன் படை கடலைக் கடந்து வருகிறது. படை எடுத்து நானே புறப்பட எண்ணுகிறேன்.
அமைச்சர்கள் மகிஷன் (எருமை முகன்) துர்க்குணன், தருமகோபன் யோசனை சொல்கின்றனர்.
மன்னா! தாங்கள் புறப்படுவதே நல்லது.
நீங்கள் செல்வதா? கொசுவைக் கொல்லச் சிங்கம் செல்வதா?
புன்செய் நிலத்தை உழ இரத்தினக் கலப்பையா? நகத்தால் கிள்ளியெறிவதை வாளால் வெட்டுவதா? நீங்கள் போகக் கூடாது என்பதற்கு ஒரு காரணம் உண்டு.


பேரரசே! தங்களைக் கண்டதும் அந்தப் பயல் பயந்து ஓடுவான். குழந்தை பயந்து விட்டானே என்று மன்னிப்பீர்கள். அவன் தப்பி விடுவான். இரக்கமுள்ள நீங்கள் செல்லக் கூடாது. எங்களை அனுப்புங்கள்.
முட்டாள் உரைகேட்டு மூடர்கள் சபை மகிழ்ந்தது.
அண்ணா! பசி என்று தவித்தவனுக்கும் பாஷாணத்தையும் தண்ணீர் என்று கேட்ட பவனுக்குத் திராவகத்தையும் அமைச்சர்கள் தருகின்றனர். குமாரக் கடவுளைக் குறைவாக எடை போடாதே!
தம்பி! உளறாதே!
அண்ணா! தேவர்களை விட்டு விடுவோம். அழிவிலிருந்து தப்புவோம்.
என்னை யாராலும் அழிக்க முடியாது தெரியுமல்லவா!
வரம் கொடுத்த சிவன், 'என் சக்தி உங்களை அழிக்கும்' என்றாரே நினைவில் லையா?
கொடுத்தவரே அழிப்பாரா?
ஏன் கூடாது? கொடுத்தவரே அழித்தால் ஏன் அழித்தாய் என்று யார் கேட்க முடியும்? அண்ணா, சிவனே முருகன். புரிந்துகொள்.
சீச்சீ. காற்றில் தள்ளப்பட்டு நெருப்பால் சுடப்பட்டு, சரவணத்தில் அலைந்த நேற்றைய குழந்தையா சிவன்.. ஒருவேளை அது உண்மையாகவே இருந்தாலும், இனி சிவனே வந்தாலும் நான் அவனை மதிக்கமாட்டேன்.
சிங்கமுகன் அறிவுரை சூரனுக்குக் கசந்தது. மரணத்தைத் தழுவுகிறவனுக்கு மருந்து பிடிக்குமா? வரம் கொடுத்த சிவனையே இகழ்ந்தான். ஆணவத்தால் நன்றி கொன்றான்.
அறிவுரை சொல்லச் சொல்ல மேலும் மேலும் சூரபன்மன் பாவத்தைத் தழுவுகிறான் என்பதை உணர்ந்த சிங்கமுகன் பேச்சை மாற்றினான்.
அண்ணா! அறிவற்ற என் வார்த்தைகளை மன்னிக்க வேண்டும். உத்தரவு கொடுங்கள். எதிரியை நான் சென்று கொன்று வருகிறேன்.
தம்பி!...!


முருகன் படையுடன் வந்து கதிர்காமத்தில் தங்கினார். முதல் நாள் போருக்கு சூரன் தன் மகன் பானுகோபனை அனுப்பினான். வீரபாகு அவனை எதிர் கொண்டார்.
ஆ!
பானுகோபன் ஆயுதங்கள், அறவழி நில்லாதவன் சேமித்த செல்வம் போல் வீணே போயின.
மோக அஸ்திரம் ஏவுகிறேன். என்ன செய்வாய்?
கவலை வேண்டாம் இதோ அமோக அஸ்திரம் வருகிறது.
வீரபாகுத்தேவர் பாசுபத அஸ்திரத்தைக் கையில் எடுத்தார். பயந்த பானுகோபன் விண்ணில் ஒளிந்து தோல்விக்கு அவமானப் பட்டு அரண்மனைத் தோட்டத்தில் வந்து படுத்தான். சூரபன்மன் அவனைக் காண வந்தான்.
மகனே, என்னாயிற்று?
எதிரிகள் வலிமை யானவர்கள்.. தந்தையே! வரலாறு காணாத தோல்வி.
தோல்வி சகஜம். இன்று தோற்றால் நாளை வெற்றி. நாளை நானே போய் வருகிறேன்.
ஆறு தாமரை ஒருங்கே மலர்ந்தது போன்ற திருமுகங்களையும், பன்னிரு தாமரையாம் கண்களையும், செவிகளில் குண்டலத்தையும், அழகான மார்பையும், படைகள் நிறைந்த பன்னிருகரங்களையும், தண்டை, சிலம்பு கொஞ்சும் திருவடிகளையும் சூரபன்மன் கண்டான். பகைவன் மனப் பாறையும் பாகாய் உருகியது.
இழந்தாய்! உன்னைக் கண்டதும் உருகிப் போனேன். இன்னும் அழிக்க உள்ளம் ஆணையிடுகிறது.
சூரபன்மா! ம்.. போர் தொடங்கு.



இழந்தாய்! தேவர்கள் பொல்லாதவர்கள். உன்னை விளையாட அழைத்துப் போவதாகச் சொல்லிப் போர்க்களத்தில் கொண்டு வந்து விட்டு விட்டார்கள். பரிதாபமாக இருக்கிறது. நான் உன்னை மன்னிக்கிறேன். போ.. போய் விளையாடு, இழந்தாய்.
சூரபன்மா! நான் குழந்தை தான். ஆனால் பகைவர்கட்கு அல்ல. பக்தர்களுக்கு.. வா போருக்கு.
சிறுவனே! கொடுத்த வாய்ப்பை இழந்தாய். நீ இனி சாக வேண்டியதுதான்.
ஹா.. ஹா.. ஒருபோதும் நடவாது.
கடும்போர் நிகழ்ந்தது. சூரன் படைப்பலம் கரைந்தது. வலிமை இழந்தது. திடுக்கிட்டுத்திரும்பினான் சூரபன்மன்.
ஆ! தனியாக அல்லவா நிற்கிறேன்.
சூரபன்மா! போர்க்களத்தில் முதுகு காண்பித்தவனைக் கொல்லக் கூடாது. உன் உயிரை உனக்குப் பிச்சையாகத் தருகிறேன். போ.. போய்ப் படைகளைப் பலப்படுத்திக்கொண்டு ... வா.
தொடரும்

விஞ்ஞான விளையாட்டு

ஆர்.பி.சாரதி



செயற்கை ஊற்று

ஆஸ்திரேலியாவின் ஆர்ட்டீஷியன் ஊற்றுக்களைப் பற்றிப்படித்திருப்பீர்கள், அழகிய இயற்கை நீர் ஊற்றுக்களை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? பார்க்கா விட்டாலும் பரவாயில்லை; நாமே ஒரு செயற்கை ஊற்றை — அதுவும் வண்ண நீர் ஊற்றை நம் வீட்டிலேயே அமைத்து மகிழ்வோமா?

உங்கள் வீட்டில் மாடி இருக்கிறதா?

மாடியில் மேஜை மீது பெரிய தொட்டியில் நீரை நிரப்பி வைத்துக்கொள்ளுங்கள். சன்னல் பக்கத்தில் மேஜை இருக்கட்டும். மாடி இல்லா வீட்டில் மேஜை மீது நாற்காலி... நாற்காலி மீது ஸ்டூல்... ஸ்டூலில் தண்ணீர்த் தொட்டி!

தண்ணீரை பொட்டாஷ்யம் பர்மாங்கனேட் இட்டு வண்ணமாக்கிக் கொள்ளுங்கள்! குடிநீராக இல்லாவிட்டால் பேனா மை சிகப்பு ஊதா பச்சை நிறங்களே போதும். ஊற்றுவதற்கு நீர் தயார். ஊற்றை அமைப்போமா?

நீண்ட மெல்லிய ரப்பர்க் குழாய் ஒன்று தேவை. அது தண்ணீர்த் தொட்டியிலிருந்து தரைக்கு வரும் அளவுக்குத் தாராளமாக நீளமானதாக இருக்க வேண்டும். தொட்டியிலிருந்து கீழே வரும் குழாய் சுவர் ஓரமாகச் செடிகளுக்கிடையே மறைவாக இருந்தால், மற்றவர்களுக்குத் தெரியாது. வேறு முறைகளால் மறைத்தாலும் சரி! மேலே உள்ள தொட்டியோ, கீழே இறங்கி வரும் ரப்பர்க் குழாயோ பார்ப்பவர் கண்ணுக்குப் படாதவரை மாய ஊற்று! மர்ம ஊற்று!

கீழே தரையைத் தொடும் ரப்பர்க் குழாயைப் பூமியில் புதைத்தவாறு கொண்டு வந்து, ஊற்று அமையும் இடத்தில் முனையைத் தரைக்குமேல் கொண்டு வரவேண்டும். பிறகு அந்த முனையில் சைக்கிளுக்கு எண்ணெய் விட வைத்துள்ள ஆயில் கேனின் மேல் கூம்பை இறுக்கமாக ரப்பர்க் குழாயில்பொருத்தி விடுங்கள். ஆயில் கேன் கூம்பை இணைப்பதற்குமுன் வாயினால் உறிஞ்சி, தொட்டி நீர் ரப்பர், குழாய் முனை வரை வருவதை உறுதி செய்துகொண்டு விடுங்கள். ஆயில் கேன் கூம்போ, ரப்பர்க் குழாயோ சாய்ந்து விடாமல், கழன்று விடாமல், முனை மட்டும் மேலிருக்கும்படி வைத்து மண்ணைக் குவித்து வையுங்கள்! (அந்த மணற் பரப்பைச் சுற்றிக்கூட புல் அல்லது சிறு செடிகள் போல அமைக்கலாம்.) தொட்டியில் நீர் உள்ளவரை நீர் ஊற்று பீறிக்கொண்டு வரும்! நீர் காலியாகாமல் ஊற்றிக் கொண்டே இருக்க வேண்டும்! நீர்த் தொட்டி உள்ள உயரத்துக்கு ஏற்ப ஊற்று வேகம் அமையும்! அந்த ஊற்றில் 'பிங்பாங்' பந்து அல்லது சிறு பிளாஸ்டிக் பந்தைக் கீழே விழாமல் போடுங்கள்! பிறகு ஊற்று நீரில் அது குதித்துக் குதித்து மேலும் கீழுமாக ஏறி இறங்கி ஊற்றுக்கு அழகு சேர்க்கும்!


உங்கள் பள்ளிஅறிவியல் கண்காட்சிக் கூட வாயிலுக்கு அழகு சேர்க்கும் காட்சி இது!

புவி ஈர்ப்புத் திறன்

நீங்கள் சர்க்கஸில் பார்த்திருப்பீர்கள். சர்க்கஸ் கோமாளி மூக்கு முனையில் உருளையான, உயரமான தடி ஒன்றை வைத்துக்கொண்டு அது கீழே விழாமல் ஓடுவான்! அது வேடிக்கையாக மட்டுமல்ல; வியப்பாகவும் இருக்கும்.

ஏன், நீங்களும் அது போல் ஒரு முயற்சியை — ஆபத்தில்லாத முயற்சியைச் செய்து பார்க்கக் கூடாது?

ஆள்காட்டி விரலில் கூரான நீண்ட பென்சில் ஒன்றை, கூர்முனை விரலிலும்



அடிப்புறம் மேலுமாகக் கீழே விழாத படி பேலன்ஸ் செய்து பழகுங்கள். பிறகு அந்தப் பென்சிலின் நடுப் பகுதிக்கு மேல் இலேசாகப் பிளந்து பிரித்த பேனாக் கத்தியைச் செருகுங்கள்.... விழுந்துவிடாமல் செருகுங்கள். இப்போது மீண்டும் ஆள்காட்டி விரலில் கத்தி செருகிய கூரான பென்சிலை பேலன்ஸ் செய்து காட்டி அது கீழே விழாமல் நடக்கவும் முயலலாம்!

இதே போல் வேறொரு முயற்சியை, நீங்கள் கையிலேந்திக் கால் கடுக்க நிற்காமல் செய்து பார்க்கலாம்!

மேஜை அல்லது பெட்டி மேல் மீட்டர் ஸ்கேலை வெளியே நீட்டிக்கொண்டிருக்கும்படி வைத்து, நீட்டிக்கொண்டுள்ள பகுதியில் உறுதியான ஒரு கயிற்று வளையத்தைத் தொங்க விடுங்கள்! இப்போது லாகவமாக ஸ்கேல் கீழே விழாமல் கயிற்று வளையத்தில் சுத்தியல் ஒன்றையும் மாட்டுங்கள்; பார்க்கலாம்! ஜாக்கிரதை! சுத்தியல் காலில் விழுந்துவிடப் போகிறது!

கத்தி, சுத்தியல் இல்லாமல் விளையாட முடியாதா? ஏன் முடியாது? கார்க் ஒன்றில் கோணி ஊசியைச் செருகுங்கள்!

குடைக் கம்பி ஒன்றை வில்லாக வளைத்து, இரு முனைகளிலும் வெங்காயத்தைச் செருகிவிடுங்கள்!

வெங்காயம் செருகப்பட்ட குடைக் கம்பியின் மையத்தை மெல்ல பேலன்ஸ் செய்து கார்க்கில் செருகிய கோணி ஊசியின் மறு முனையில் பொருந்தும் படி வையுங்கள்! கீழே விழாமல் கம்பி ஆடும்போது அழகாயிருக்கும். வெங்காய மேல் தோலை நீக்கிவிட்டு, ஒட்டும் வண்ணத்தால் மூக்கு, முழி, மீசையும் போட்டு விட்டால் வேடிக்கைதான் — கீழே விழும்வரை! விழுந்தால்தான் என்ன? மறுபடியும் அட்ஜஸ்ட் செய்து வைக்க முடியாதா என்ன?

புகையில் தீ!

'புகை நடுவினில் தீ இருப்பதைப்
பூமியில் கண்டோமே!
பகை நடுவினில் அன்புருவான நம்
பரமன் வாழ்கின்றான்'

என்பது பாரதி வாக்கு.


தண்ணீர் மேலிருந்து கீழே இறங்கி வருவது—

நெருப்போ கீழிருந்து மேலே எழுவது—

திருவிழாக்களில் தீவட்டி பிடிப்பதைப் பார்த்திருப்பீர்கள். தீவட்டியைக் கீழே நோக்கிப் பிடித்தாலும் சுடர் மட்டும் மேல் நோக்கியே எழும்!

நாம் செய்யப் போகும் முயற்சியில் நெருப்பு கீழே இறங்கப் போவது மட்டுமல்ல; புகையில் தீ எழப் போகிறது!

முதலில் ஒரு மெழுகு வர்த்தியை மேஜை மீது ஏற்றி விழாதபடி வையுங்கள். தயாராக வத்திப்பெட்டி ஒன்றை வைத்துக்கொண்டு, எரியும் மெழுகு வர்த்தியை ஊதி அணையுங்கள்! உடனே 'சட்'டென்று தீக்குச்சி ஒன்றைக் கொளுத்திக் கொண்டு அணைந்த மெழுகுவர்த்தியிலிருந்து மேலெழுந்து வரும் புகையருகே கொண்டு போங்கள். என்ன நேரிடுகிறது?



வத்திக்குச்சியின் நெருப்புச் சுடர் புகையுடன் கலந்து கீழே இறங்கி, மீண்டும் மெழுகுவர்த்தியைப் பற்ற வைத்துச் சுடர்கிறது அல்லவா?

நேராக மெழுகு வர்த்தித் திரியில் பற்ற வைக்காமல் புகையில் சுடரேற்றிக் கலந்து கீழே இறங்கச் செய்து பற்றவைப்பது வேடிக்கையாக இருக்கும்.

கேள்வி நேரம்



கேள்வி கேட்பவர்:—

ரா. பொன்ராசன்

புகைப்படம்: வாசன் ஸ்டூடியோ
காரைக்குடி

பங்கு பெறுவோர்:—

குன்றக்குடி நேருஜி சிறுவர் பூங்காவைச் சேர்ந்த

ரா. கார்த்தியாயினி
மா. ராஜாத்தி
மோ. ராஜேஷ்
க. பழனிவேல்

பொன்ராசன்: 'பிள்ளைத் தமிழ்' என்றால் என்ன, தெரியுமா?

ராஜேஷ்: ஓ, தெரியுமே! எங்களைப் போன்ற பிள்ளைகளுக்காக எழுதப்படும் தமிழ்தானே?

பொன்: இல்லை, இல்லை. வேறு யாருக்காவது தெரியுமா?

பழனிவேலு: 'பிள்ளைத் தமிழ்' என்றால் கடவுளைப் பிள்ளையாக வைத்துப் பாடியது என்று கேள்விப்பட்டிருக்கிறேன். 'மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்' என்பதுகூட அப்படிப் பட்டதுதானே?

பொன்: ஆமாம். கடவுளைப் பற்றிமட்டுமல்ல; தங்களுக்கு விருப்பமான அரசர்கள், தலைவர்களைப் பற்றிக் கூடக் கவிஞர்கள்பாடியிருக்கிறார்கள். 'கம்பன் பிள்ளைத் தமிழ்' 'காந்தி பிள்ளைத் தமிழ்' என்றெல்லாம் பல பிள்ளைத் தமிழ் நூல்கள் உண்டு... சரி, தமிழில் முதலாக வெளி வந்த நாவல் எது? அதை எழுதியவர் பெயர் என்ன?

ராஜேஷ்: பிரதாப முதலியார் எழுதிய வேதநாயகம் பிள்ளை சரித்திரம்.

கார்த்தியாயினி: ஐயையோ! ராஜேஷ் மாற்றிச் சொல்லிவிட்டானே! வேதநாயகம் பிள்ளை எழுதிய 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்பதுதானே சரியான விடை?

பொன்: ஆமாம். கார்த்தியாயினி சரியாகச் சொல்லிவிட்டாள் ... காந்தி திரைப்படம் பார்த்திருப்பீர்கள். அதில் அமிர்தசரசிலுள்ள ஜாலியன் வாலாபாக்கில் இந்தியர்களை வெள்ளைக்காரர்கள் ஈவுஇரக்கமில்லாமல் சுட்டுக் கொன்றார்களே, அதில் சுமார் எத்தனை பேர் இறந்திருப்பார்கள்? எத்தனை பேர் காயம் அடைந்திருப்பார்கள்?

பழனி: 400 பேர் இறந்திருப்பார்களா?

ராஜாத்தி: சமீபத்தில் நான் ஒரு புத்தகத்தில் படித்தேன். 379 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், 1200 பேர் காயமடைந்ததாகவும் அதில் எழுதியிருந்தது.

பொன்: சபாஷ்! ராஜாத்தி, படித்ததை நன்றாக நினைவில் வைத்திருக்கிறாயே!... சென்னையில் கிரிக்கெட் டெஸ்ட் பந்தயங்கள் நடக்கும் ஸ்டேடியத்தின் பெயர் தெரியுமா?

ராஜேஷ்: எனக்குத் தெரியும். சிதம்பரம் ஸ்டேடியம்.

பொன்: கரெக்ட். சென்னைப் பல்கலைக் கழகத்திற்குப் பக்கத்திலுள்ள சிதம்பரம் ஸ்டேடியத்தில்தான் கிரிக்கெட் டெஸ்ட் பந்தயங்கள் நடைபெறுகின்றன. உலகிலேயே அதிக

மான பன்றிகள் உள்ள தேசம் எது?

ராஜேஷ்: சீனாதான்.

பொன்: ராஜேஷ் மிகவும் சரியாகச் சொல்லிவிட்டான். சீனா தேசத்தில் உள்ள பன்றிகளின் எண்ணிக்கை 8 கோடி என்கிறார்கள்.!... தமிழ் நாட்டிலே முதல் முதலாகக் கதர் பிரசாரம் செய்தவர் யார்?

கார்த்தியாயினி: - ராஜாஜி.

பொன்: இல்லை.

பழனி: ஈ. வெ. ராமசாமிப் பெரியார்.


பொன்: அடே, சரியாகச் சொல்லி விட்டாயே...! இந்தியாவிலே பனை மரங்கள் அதிகமாக உள்ள மாநிலங்களைக் கூற முடியுமா?

ராஜாத்தி: நமது தமிழ்நாட்டில்தான் நிறையப் பனைமரங்களைப் பார்க்கிறோமே?

பொன்: தமிழ்நாட்டில் மட்டும்தானா? இன்னும் இரண்டு மாநிலங்களிலும் நிறையப் பனைமரங்கள் இருக்கின்றனவே!

கார்த்தியாயினி: ஆந்திர மாநிலம்... அப்புறம்... அப்புறம்...

பொன்: மேற்கு வங்காளத்திலும் அதிகமான பனைமரங்களைக் காணலாம்... சரி...





இதோ இந்தப் படத்தில் இருப்பவர் யார் என்று தெரிகிறதா?

பழனி: பெர்னார்ட்ஷா.

பொன்: இல்லை. நம் இந்தியாவின் தலைசிறந்த தேச பக்தர்களில் ஒருவர். 'சுயராஜ்ஜியம்' என்ற சொல்லை முதல் முதலாகப் பயன்படுத்தியவர்... இன்னுமா தெரியவில்லை?

கார்த்தியாயினி: தாதாபாய் நௌரோஜி.

பொன்: சரியான விடை. பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்கு முதல் முதலாகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற இந்தியர் அவர்தான். 1906—ஆம் ஆண்டு கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டுக்குத் தலைமைத் தாங்கிப் பேசும் போது, ''நாங்கள் ஆங்கிலேயரிடத்தில் பிச்சை கேட்கவில்லை; உரிமையைத் தான் கேட்கிறோம்'' என்று முழங்கினார்... வட ஆர்க்காடு மாவட்டத்தின் தலைநகரம் எது?

ராஜேஷ்: வேலூர்.

பொன்: சரியாகச் சொன்னாய். பழைய டில்லியில் யமுனை ஆற்றங்கரையில் நம் தேசத் தந்தை மகாத்மா காந்தியின் சமாதி இருக்கிறது. அதன் அருகிலே வேறு இரு தலைவர்களின் சமாதிகளும் இருக்கின்றன. அந்தத் தலைவர்கள் யார், யார்?

பழனி: நேரு மாமா, இன்னொருவர்...

ராஜாத்தி: லால் பகதூர் சாஸ்திரி.

பொன்: இருவரும் சேர்ந்து சரியான விடையளித்து விட்டீர்கள். 'குடல் காய்ச்சல்' என்றால் என்ன?

பழனி: என்ன! குடல் காய்ச்சலா?

பொன்: ஆம். தமிழ்நாட்டில் சில பகுதிகளில் அப்படித்தான் சொல்கிறார்கள். குடலை அதிகமாகப் பாதிக்கும் காய்ச்சலாதலால்....

ராஜாத்தி: தெரியும், தெரியும். டைபாய்டு காய்ச்சல்தான்.

பொன்: ரொம்ப சரி, உலகிலேயே மிகப்பெரிய ரயில்வே ஸ்டேஷன் எங்கே இருக்கிறது?

பழனி: ஜப்பானில்.

பொன்: இல்லை.

ராஜேஷ்: அமெரிக்காவில்

பொன்: அதுசரி, அமெரிக்காவில் எந்த நகரத்தில்...?

ராஜேஷ்: நியூயார்க் நகரத்தில்.

பொன்: சரியாகச் சொன்னாய். நியூயார்க்கில் 'கிராண்ட் சென்ட்ரல் டெர்மினல்' என்ற ரயில்வே ஸ்டேஷனில் 47 பிளாட்பாரங்கள், 67 ரயில் தடங்கள் இருக்கின்றன. பரப்பளவு 48 ஏக்கர்! ... 'திருக்கொடுங்குன்றம்' என்ற ஊர்ப் பெயரை உங்களில் யாராவது கேள்விப்பட்டதுண்டா?

பழனி: நான் கேள்விப்பட்டிருக்கிறேன். பிரான்மலைக்கு அப்படி ஒரு பெயர் உண்டாம்.

பொன்: அடே, சரியாகச் சொல்லி விட்டாயே! அங்குள்ள முருகனை அருணகிரிநாதர் பாடியிருக்கிறார். மிளகாயை நம் நாட்டில் பரப்பியவர்கள் யார்?

ராஜேஷ்: ஆங்கிலேயர்.

ராஜாத்தி: இல்லை. போர்த்துகீசியர்கள்தான்.

பொன்: சரியான பதில். மிளகாய் வருவதற்கு முன்பு, நம் நாட்டில் மிளகைத்தான் பயன்படுத்தி வந்தார்கள்... சமீபத்தில் டில்லியில் நடந்த ஒன்பதாவது ஏஷியாட்டில்

இந்தியா பெற்ற மொத்தப் பதக்கங்கள் எத்தனை?.

பழனி: தங்கப் பதக்கம், வெள்ளிப் பதக்கம் இரண்டையும் சேர்த்துச் சொல்ல வேணுமா?

பொன்: வெண்கலப் பதக்கத்தை விட்டு விடலாமா? தங்கம், வெள்ளி, வெண்கலம் மூன்றையும் சேர்த்துச் சொல்லுங்கள்.

பழனி: தங்கப் பதக்கங்கள் 13, வெள்ளி 19, வெண்கலம் 25. ஆக மொத்தம் 57.

பொன்: அடே! இவ்வளவு சரியாகச் சொல்கிறாயே! சரி, ஆடிப்பெருக்கு என்கிறார்களே, அதுபற்றித் தெரியுமா?

ராஜாத்தி: ஆடிமாதம் முதல் முதலாக ஆறுகளில் நீர் பெருகி வருமே, அதைத்தான் ஆடிப் பெருக்கு என்கிறார்கள்.

பொன்: ஆமாம். ஆடி 18—ம் தேதி அதை விழாவாகக் கொண்டாடுவதால், பதினெட்டாம் பெருக்கு என்றும் சொல்வார்கள்... மகாபாரதத்தை முதன் முதலில் யார் எந்த மொழியில் எழுதினார்?

கார்த்தியாயினி: வியாசர் சமஸ்கிருதத்தில் எழுதினார்.

பொன்: சரியான விடை. அதைத் தழுவித் தமிழில் யார் யார் எழுதினார்கள்?

கார்த்தியாயினி: வில்லிபுத்தூராழ்வார்

ராஜேஷ்: பெருந்தேவனாரும் எழுதியிருக்கிறார்.

பொன்: இன்னொருவரும் எழுதியிருக்கிறார். அவர் பெயர் நல்லாப் பிள்ளை. ... சில அழைப்புகளின் அடியில் R. S. V. P. என்று போட்டிருப்பார்கள், பார்த்திருக்கிறீர்களா? அதற்கு என்ன பொருள்?

எல்லாரும்: மௌனம்.

பொன்: தெரியவில்லையா? நானே சொல்கிறேன். 'முடிந்தால் தயவு செய்து பதிலளிக்கவும்' என்றுதான் அர்த்தம். ஆனால், இது Repondez S'il Vous Plait என்ற பிரெஞ்சு வாக்கியத்தின் சுருக்கம்தான்!...சமீபத்தில் நான் ஒரு கதை படித்தேன். ''அமாவாசை இரவிலே ஒரு சிறுவன் விளக்கில்லாமல் சைக்கிளில் செல்கிறான். எதிரே ஒருவர் ஒற்றை மாட்டு வண்டியை மிக மெதுவாக ஓட்டி வருகிறார். வேறு ஆட்களோ, கார், வண்டிகளோ அந்தச் சாலையில் இல்லை. இருட்டிலே எதிரே வண்டி வருவது தெரியாமல் அவன் சைக்கிளை ஓட்டிச் செல்கிறான். நல்லவேளையாக, வண்டிக்குச் சிறிது தூரத்தில் செல்லும்போதே, மாட்டின் கண்களில் பளபள என்ற ஒளி தெரிகிறது. அதைக் கண்டு, அவன் சைக்கிளை ஓர் ஓரமாக ஓட்டித் தப்பித்துக் கொள்கிறான்''— இப்படி அவர் எழுதியிருப்பதில் ஒரு தவறு இருக்கிறது. கண்டு பிடிக்க முடியுமா?

பழனி: இருட்டிலே மாட்டின் கண்களிலே எப்படி ஒளி தெரியும்? அதன் முகத்திலே ஒளி பட்டால்தானே, கண் பளபளப்பாகத் தெரியும்? அங்குதான் வெளிச்சம் படுவதற்கு வழியே இல்லையே!

பொன்: அடேடே! மிகவும் நன்றாகச் சொன்னாய். இரவிலே மாட்டின் கண்களில் தானாக ஒளி தெரியாது. ஏதேனும் வெளிச்சம் பட்டால், பளபளப்பான அதன் கண்களில் ஒளி பிரதிபலிக்கும்.

காக்காய்க் கடி!



யாராவது சோறு போடுவதைக் கண்டால், காக்காய் உடனே தன் இனத்தைக் கூவி அழைத்து அவற்றோடு சேர்ந்து உண்ணும்.

காக்காய் கிடைப்பதைப் பகிர்ந்து உண்கிறது. அதனால்தான் சிறுவர்கள் கிடைக்கும் தின்பண்டங்களைத் துணியில் மறைத்துக் கடித்து அதை மற்றவர்களுக்குக் கொடுப்பதற்கு ''காக்காய்க் கடி'' என்கிறோம்!

குன்றக்குடி அடிகளார் கூறக் கேட்டது: வி. உஷா



அனிதா - வனிதா



ஜெயசீலன்

அப்பள்ளிக்கு அவள் புதிய மாணவி.

அழகாக இருந்தாள்.

அமைதியாக இருந்தாள்.

அவள் பெயர் என்ன தெரியுமா?

அனிதா.

பள்ளிக்குக் காரில்தான் வருவாள்.

காரிலிருந்து இறங்கும் அவள் புன்னகை தவழ வகுப்பறையை நோக்கி நடப்பாள். தோளில் புத்தகப் பை ஊசலாடும்.

மரத்தடியில் விளையாடிக் கொண்டிருக்கும் மற்ற மாணவிகள் விளையாட்டை நிறுத்திவிட்டு, கண்களை அகல விரித்தபடி அவளையே பார்ப்பார்கள்.

அனிதாவின் மேல் மற்ற மாணவிகள் அக்கறை கொள்ள அவளுடைய அழகு, அமைதி மட்டுமா காரணம்?

இல்லை... இல்லை. இன்னொன்றும் உண்டு!

போன வருடம் அவள் அமெரிக்காவில் படித்தவள்!

அவளுடைய அப்பா அமெரிக்காவில் இந்தியத் தூதரகத்தில் வேலை செய்திருக்கிறார். இப்போது மீண்டும் இந்தியாவுக்கு மாற்றலாகி வந்திருக்கிறார்.

''ஏண்டி கமலி, நம்ம கிளாஸ் அனிதா ஏன் யாரிடமும் பேசாமல், 'உம்' மென்று இருக்கிறாள்?'' — மதிய இடைவேளையின் போது பள்ளி மரத்தடியில் அமர்ந்திருந்த ஐந்தாறு ஏழாம் வகுப்பு மாணவிகளிடையே பிரதானமாக இருந்த வனிதா கேட்டாள்.

வனிதா பணக்கார வீட்டுப் பெண்! 'ஜம்' மென்று படகுக் காரில் வந்து பள்ளியில் இறங்குவாள்.

பள்ளி மாணவிகள் அனைவரும் தன் மேல் கவனம் கொள்ளுமாறு காரியங்கள் செய்யக் கூடிய திறமை பெற்றவள்!

கடந்த ஆண்டு பள்ளியில் நடந்த பேச்சுப் போட்டி, பாட்டுப் போட்டி ஆகியவற்றில் வெற்றிபெற்றுப் பரிசுகள் பல பெற்றவள்! ஏன், ஆண்டு விழாவின்போது மேடையில் ஏறி, நடனம் ஆடியிருக்கிறாள் பாருங்கள்...! அடடா! இன்னமும் அனைவருடைய நினைவிலும் ஆடிக் கொண்டிருக்கிறாள்!

ஆனால், இப்போது அனிதாவின் வருகை அவளை வெகுவாகப் பாதித்தது.

ஏறத்தாழப் பள்ளி மாணவிகள் அனைவரும் அனிதாவைப்பற்றியே பேசிக் கொண்டிருப்பது அவள் காதில் விழுந்து கொண்டுதான் இருந்தது.

அழகாக இருக்கிறாளாம்....!

அடக்கமாக இருக்கிறாளாம்....!

அமெரிக்காவில் வாழ்ந்திருந்தாலும், 'சிம்பிளாக' இருக்கிறாளாம்!

அப்பப்பா! அனிதா... அனிதா.... அனிதா....!

அவள் உள்ளக் குமுறலிலிருந்து வெடித்துச் சிதறியதுதான் கமலியிடம் அவள் கேட்ட கேள்வி.

கமலியை முந்திக் கொண்ட சுமதி, ''அனிதா பள்ளியில் சேர்ந்து ஒரு வாரம்தானே ஆகிறது... இனிமேல் தான் எல்லோரிடமும் பழகுவாள்.'' என்றாள்.

வனிதா முகம் சுளித்தாள்.

சுமதியின் பதில் அவளுக்குப் பிடிக்கவில்லை.

''அதெல்லாம் இல்லே, தான் அமெரிக்காவில் படிச்சோம்கிற திமிர். நேத்துக்கூட அவளை விளையாடக் கூப்பிட்டேன். வரமுடியாதுன்னு சொல்லிட்டா...'' வனிதாவின் நெருங்கிய தோழியான கமலி இவ்வாறு கூறியது வனிதாவுக்கு மிகவும் பிடித்திருந்தது.

சுமதி விடவில்லை. ''அனாவசியமா பழிசொல்லாதே! அனிதாவின் இயல்பே அப்படி இருக்கலாமில்லையா? சும்மா சொல்லக் கூடாது. அவள் எப்படி நயமாகப் பழகுகிறாள் தெரியுமா? அமெரிக்காவில் படிச்சவளாச்சே...''

'சுருக்'கென்றது வனிதாவுக்கு.

பள்ளி முடிந்து காரில் வீடு போன போது அப்பாவின் கார் 'போர்ட்டிகோ'

லில் நின்றிருப்பதை வனிதா கவனித்தாள்.

காரிலிருந்து இறங்கியவள் 'படார்' என்று கதவைச் சாத்திவிட்டுப் புயலாக வீட்டினுள் நுழைந்தாள்.

புத்தகப் பையை மேசை மேல் தூக்கிப் போட்டுவிட்டு மாடிக்கு ஓடினாள்.

வியாபார விஷயமாக எப்போதும் வெளியில் அலைந்து கொண்டிருக்கும் அவள் அப்பா, அதிசயமாக அன்று மாடியில் அவருடைய அறையில் இருந்தார்.

''அப்பா... அப்பா'' பரபரப்புடன் அப்பாவின் அறைக்குள் நுழைந்தாள், வனிதா.

ஏதோ எழுதிக் கொண்டிருந்த அப்பா வனிதாவை அன்போடு ஏறிட்டுப் பார்த்து,

''வனிதாக் கண்ணு, என்ன விஷயம்?'' என்று கேட்டவாறு அவளுடைய மென்மையான கரத்தைப் பற்றி அவரருகே இழுத்துக்கொண்டார்.

''அப்பா, நான் உடனே அமெரிக்கா போகணும்!''

வியப்போடு தம் மகளைப் பார்த்தார் அப்பா.

ஏதோ நடந்திருக்கிறது என்பதைப் புரிந்து கொண்ட அவர், மனத்திற்குள் சிரித்துக் கொண்டு,

''அமெரிக்காவுக்குத்தானே... ஓ.... தாராளமாக... என்ன பிரமாதம்!'' என்றார்.

அப்பாவின் பதில் வனிதாவின் பதற்றத்தைக் குறைத்தது.

அவளுடைய நெற்றியில் துளிர்த்திருந்த வியர்வையைக் கைக்குட்டையால் துடைத்துவிட்ட அப்பா, ''வனிதாக் கண்ணு என்ன திடீரென்று அமெரிக்கா?'' என்றார் நிதானமாக.

''வந்துப்பா... அனிதா அனிதான்னு ஒரு பொண்ணுப்பா... புதுசா எங்க ஸ்கூலிலே சேர்ந்திருக்கா... போன வருஷம் அவள் அமெரிக்காவிலே படிச்சவளாம். அமெரிக்காவிலே படிச்சது பெரிய தகுதின்னு நினைச்சு எல்லோரும் அவளைப் பத்தியே பேசுறாங்கப்பா'' வனிதாவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

''ஓ! அதனாலே நீயும் அமெரிக்கா போகணும். அப்படித்தானே!'' என்ற அப்பா சற்று யோசித்து விட்டு, ''இதோ பாரம்மா, இன்னும் இரண்டு மாதத்திலே, வியாபார விஷயமா நான் அமெரிக்கா போறேன். அது விஷயமாகத்தான் இப்போது கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறேன். அப்போ நீயும் என்னோட வர்றே... ஓ...கே.!''

வனிதாவின் முகத்தில் ஒரே மகிழ்ச்சி.

''நல்ல அப்பா'' என்றாள்.

''ஆனால் ஒரு விஷயம்.''

''என்னப்பா?''

''பள்ளியில் எல்லாவற்றிலும் நீ முதல் மாணவியாகத் திகழ வேண்டும்.. அப்போதுதான்...''

''நிச்சயம் அப்பா.''

காலை அணிவகுப்பு நடந்து கொண்டிருந்தது. சீருடையில் அணியணியாக மாணவிகள் நின்றிருந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

அணிவகுப்பு முடிவில் தலைமை ஆசிரியை அறிவித்தார்:

குழந்தைகளே! அறிவியல் மனப்பான்மையை உங்களிடையே வளர்க்க 'அறிவியல் கண்காட்சி' ஒன்று அடுத்த மாதம் நமது பள்ளியில் நடைபெறப் போகிறது. ஆர்வத்துடன் நிறையப் பேர் கலந்து கொள்ள வேண்டும். சிறந்த அறிவியல் பொருள் செய்யும் மாணவிக்குப் பரிசு உண்டு.''

அன்று மாணவிகளிடையே ஒரே சுறுசுறுப்பு! 'கண்காட்சியில் வைக்க என்ன செய்யலாம்? எப்படிச் செய்யலாம்?' என்று ஒவ்வொருவரும் பேசிக் கொள்ள ஆரம்பித்தனர்.

வனிதா தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

அறிவியல் கண்காட்சியில் கலந்து கொண்டு முதல் பரிசு பெற்றுவிட்டால் அனிதாவின் புகழைக் குறைத்துவிடலாம். அதே நேரத்தில் அமெரிக்காவுக்கு அப்பா கூட்டிக் கொண்டு போகத் தயங்க மாட்டார்... ஒரே கல்லில் இரண்டு மாங்காய்!

கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் தன் அண்ணன் பாபுவிடம் ஓடி யோசனை கேட்டாள் வனிதா.

''அதெல்லாம் முடியாது. கண்காட்சியில் வைக்கப் போகும் பொருளை நீயாகவே யோசிச்சுச் செய்'' என்றான் பாபு.

''எங்க டீச்சரே சொன்னாங்க. யாரிடம் வேண்டுமானாலும் யோசனை கேட்கலாமாம். ப்ளீஸ் சொல்லு....'' வனிதா கெஞ்சினாள்.

சிறிது நேரம் யோசித்த பின்,

''இதோ பார், வனிதா, 'ஒர்க்கிங் மாடல்' ஏதாவது செய்தால்தான் எல்லோரையும் கவர முடியும்... அப்போதுதான் உனக்குப் பரிசு கிடைக்கும்'' என்றான் பாபு.

''ஒர்க்கிங் மாடல்னா...?''

''அறிவியல் சம்பந்தமாக ஏதாவது 'மாதிரி' செய்யரேம்னு வச்சுக்க... அது நல்லா இயங்கணும்.... அதான்.''

சிந்தனையில் இறங்கினாள் வனிதா.

என்ன 'மாடல்' செய்யலாம்?

யோசித்தாள்..., யோசித்தாள்...

பல புத்தகங்களைப் புரட்டினாள்.

மூன்றாவது நாள் ஒரு முடிவுக்கு வந்தாள்.

சூரியன், அதைச் சுற்றும் கோள்கள்! இதை மாடல் செய்து இயங்க வைத்தால்.....?

அவளுக்குத் திருப்தியாக இருந்தது.

அண்ணனிடம் ஓடிக் கூறினாள்.

சற்று யோசித்த பாபு, ''வனிதா, சூரியனைக் கோள்கள் சுற்றுவதைக் காட்டுவதை விட பூமியைச் செயற்கைக் கோள் சுற்றுவது போல் காட்டினால்...? தற்கால நிகழ்ச்சிகளுக்கு ஏற்றாற்போல் இருக்காது?''

''ஓ அற்புதமான யோசனை!'' துள்ளிக் குதித்த வனிதா, ''பாபு அண்ணே, நீ உதவி செய்யறியா?'' என்று கேட்டாள்.

''ஓ...எஸ்...'' என்றான் பாபு. அப்போதே முதல் பரிசைப் பெற்றது போன்ற மகிழ்ச்சியை வனிதா அடைந்தாள்.

மறுநாளிலிருந்து முழு மூச்சுடன் வனிதா செயலில் இறங்கினாள்.

அண்ணன் கூறிய பொருள்களை அப்பாவிடம் கூறி வாங்கினாள்.

பூமி, செயற்கைக் கோள் படம் வரைந்த பின் அதை வைத்துக் கொண்டு மாதிரி உருவாக்க ஆரம்பித்தாள். பாபு நிறைய உதவி செய்தான்.

அடுத்த நான்கு நாட்களில் மாதிரி உருவாகிவிட்டது.

சின்ன மோட்டார் ஒன்று கிடைத்து விட்டால் வேலை முடிந்தது போல்தான்.

வனிதாவுக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி.

மன நிறைவோடு அவள் பள்ளிக்குச் சென்றாள்.

பள்ளி இடைவேளையின் போது வனிதாவும் கமலியும் பேசிக் கொண்டே நடந்தார்கள்.

''வனி, நீ செய்து முடிக்கிற மாடலைப் பத்தி நம்ம டீச்சரிடம் சொன்னியா?''

''இன்னும் இல்லே. முடிஞ்சதும் கொண்டு வந்து காட்டலாம்னு இருக்கேன்.''

''எப்போ முடியும்?''

''முடிஞ்ச மாதிரிதான். இன்னைக்கு மோட்டார் வாங்கி வந்து ஃபிக்ஸ் பண்ணிட்டா மாடல் இயங்க ஆரம்பித்துவிடும். அப்புறம் பெயிண்ட் பண்ணிக் கொண்டு வர வேண்டியதுதான்.''

''ரொம்பக் கஷ்டப்பட்டிருக்கே.''

''ஆமா கமலி... பத்து நாளா சரியான வேலை... எப்படியும் வெற்றி பெறணும்.... ஆமா, நீ ஏதும் செய்யலையா?''

''இரண்டு ''சார்ட்'' போடறேன். அவ்வளவுதான்.''

''சரி, நம்ம கிளாஸ் அனிதா ஏதும் செய்யறாளா?'' வனிதா கேட்டாள்.

''அவளைப் பத்தி ஒண்ணும் தெரியலே. ஆனால், நேத்து விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடத்துக்குச் சென்று சயன்ஸ் டீச்சரிடம் ஏதோ கேட்டுக் கொண்டிருந்தாளாம்.'' — இருவரும் பேசிக் கொண்டே ஒரு மரத்தடியில் வந்து நின்றார்கள்.

அந்தப் பருத்த மரத்தின் அடிப் பகுதியின் மறுபுறத்திலிருந்து வந்த பேச்சுக் குரல் அவர்கள் கவனத்தை ஈர்த்தது.

''ஏழாம் வகுப்பு அனிதா கெட்டிக்காரியா இருப்பா போல இருக்கு!'' யாரோ ஒரு மாணவியின் குரல்.


''என்ன விஷயம்?'' மற்றொரு மாணவியின் கேள்வி.

''கண் காட்சியில் வைப்பதற்கு ஒரு 'ஒர்க்கிங் மாடல்' செய்து கொண்டிருக்கிறாளாம்.... ரொம்ப நல்லா வருதாம்....''

செய்தது என்ன?

''உன் பழைய நோட்டுப் புத்தகங்களிலேயிருந்து எழுதாத தாளையெல்லாம் கிழிச்சு, ரெண்டு நோட்டுக் தைச்சுத் தந்தேனே! என்ன செய்தே?''

''ஒண்ணு காம்போஸிஷன் எழுத; இன்னொண்ணு இம்போஸிஷன் எழுத வச்சிட்டேன்!'' -சுதர்ஸன்



''உனக்கு யார் சொன்னது?''

''கட்டுரை நோட் எடுக்கப் போயிருந்தேன். சயன்ஸ் டீச்சர் மற்ற டீச்சர்களிடம் சொல்லிக்கொண்டிருந்தாங்க.''

'திக்'கென்றது வனிதாவுக்கு.

அவள் முக வாட்டத்தைக் கண்ட கமலி, ''வனிதா, வருத்தப்படாதே! நிச்சயமா உன் மாடலுக்குத்தான் பரிசு கிடைக்கப் போகுது...பாரேன், அனிதா செய்யற மாடல் உருப்படவே உருப்படாது''என்று சமாதானப்படுத்தினாள்.

கொஞ்சம் ஆறுதல் அடைந்தாள் வனிதா.

பள்ளி அலங்கரிக்கப்பட்டுக் கோலாகலமாக இருந்தது. எங்கும் ஓரே குதூகலம்.

அறிவியல் கண்காட்சி திறக்கப்பட இன்னும் இரண்டு மணி நேரமே இருந்தது. பிரபல டாக்டர் மனோகர் கண்காட்சியைத் திறந்து வைக்கப்போகிறார்.

கண்காட்சி அரங்கில் தனக்கு ஒதுக்கப்பட்டிருந்த இடத்துக்குத் தனது மாடலைக் கொண்டு போய்ச் சேர்ந்திருந்தாள் வனிதா.

அவளுடைய கண்கள் அங்கும் இங்கும் அலை பாய்ந்து கொண்டிருந்தன. ஆமாம். அனிதாவைத் தேடிக் கொண்டிருந்தாள்.

அவளுடைய இடத்துக்குச் சற்றுத் தள்ளி அனிதாவின் இடம் இருந்தது.

அங்கங்கே மாணவிகள் தங்கள் பொருள்களை ஒழுங்கு செய்து கொண்டிருந்தார்கள்.

வனிதா தனது மாடலை 'செட்-அப்' செய்து முடித்து விட்டாள்.

அடடே! இன்னும் அனிதாவைக் காணோமே!

அந்த நேரத்தில் கமலி இரைக்க-இரைக்க ஓடிவந்தாள்.

''என்னடி இப்படி ஓடிவர்றே?என்ன விஷயம்?''

''அனிதா ஹெச். எம். ரூம்லே அழுதுக்கிட்டிருக்கா....''

''என்னவாம்?''

''அவள் தயாரித்த மாடலை எடுத்து வரும்போது தவறி விழுந்து உடைஞ்சு போச்சாம்.''


'குப்'பென்று வியர்த்து விட்டது வனிதாவுக்கு. எதிர்பாராத இச் செய்தி ஒருபுறம் அவளை மகிழ்விக்கிறது.... ஆனால் மறுபுறம்?

ஒரு நொடியில் சமாளித்துக் கொள்கிறாள். கண்காட்சியில் அனிதா கலந்து கொள்ள முடியாது. பரிசு...? நிச்சயம் அவளுக்குத்தான். மீண்டும் பள்ளியில் பிரபலமாகி விடுவாள்! அப்பா அமெரிக்கா கூட்டிச் செல்வார். உள்ளம் குளிர ஆரம்பிக்கிறது. வெற்றிக் கனி பறிக்கத் தயாராகி விட்டாள்!

எல்லோரும் கைதட்டக் கத்தரிக்-கோலால் ரிப்பனை வெட்டிக் கண் காட்சியைத் திறந்தார் டாக்டர் மனோகர்.

அனைவரும் கண்காட்சிக்குள் நுழைந்தார்கள்.

சிறுமிகள் செய்த அறிவியல் பொருட்கள் அற்புதமாகத்தான் இருந்தன.



வனிதாவுக்கு ஒரே ஆச்சரியம்.

மாடல் உடைந்த பிறகு எதற்காக அனிதா இங்கு வந்தாள். அவளுடைய இடத்தில் ஆடாமல் அசையாமல் ஏன் நிற்கிறாள்? அவளுக்கு முன் மாடல் ஏதுமில்லையே!

இதற்குள் பிரமுகர்கள் வனிதா இடத்திற்கு வந்து விட்டார்கள்.

அவள் செய்த மாடலை இயக்கிக் காட்டினாள்.

பூமியைச் செயற்கைக் கோள் சுற்றி வந்தது. அனைவரும் வியப்போடு நோக்கினார்கள்.

''வெரி குட்'' டாக்டர்வாய் விட்டுப் பாராட்டினார். அவரோடு வந்த அனைவருமே ஒருமுகமாகப் பாராட்டினர். தலைமை ஆசிரியை அவளைத் தட்டிக் கொடுத்தார்.

மகிழ்ச்சியின் எல்லையை அடைந்தாள் வனிதா.

தனக்குப் பரிசு நிச்சயம் என்று தீர்மானித்துக் கொண்டாள்.

அவளைக் கடந்து அடுத்த பெண்... அதற்கு அடுத்தவள்...

இதோ அனிதாவை நெருங்கி விட்டார்கள்.

அனிதா என்னதான் செய்யப் போகிறாள்?

கூர்ந்து கவனித்தாள் வனிதா!

எப்பொருளும் இல்லாமல் தனியே நிற்கும் அனிதாவைக் கேள்விக் குறியோடு அனைவரும் பார்க்கிறார்கள்.

தலைமை ஆசிரியை அவசர அவசரமாக, ''சரி, மேலே போவோமா?'' என்று கேட்கிறார்.

கூட்டம் நகர முற்படும்போது ஒரு தாளை எடுத்து அனிதா காட்டுகிறாள்.

அத்தாளைப் பார்த்த மாத்திரத்தில், ஐயோ! அவர்கள் ஏன் அப்படி அதிர்ச்சி யடைந்து நிற்கிறார்கள்?

தலைமை ஆசிரியை ஏன் கண் கலங்குகிறார்?

வனிதா தன் இடத்தை விட்டு அங்கு ஓடுகிறாள்.

அனிதாவின் கையிலிருந்த தாளைப் பார்த்ததும், வனிதாவுக்கு மூச்சே நின்றுவிடும் போல் இருந்தது! அந்தத் தாளில் 'செயற்கை இதயம் பொருத்தப்பட்ட என்னைப் பார்க்காமல் போய் விடாதீர்கள்!' என்று எழுதப்பட்டிருந்தது.

பக்கத்து ஸ்டூலில் வைக்கப்பட்டிருந்த பெரிய உறையை எடுத்து டாக்டரிடம் நீட்டுகிறாள் அனிதா.

உறையினுள் எக்ஸ்ரே படங்கள்.

தலைமை ஆசிரியை வருத்தம் தோய்ந்த குரலில் பேச ஆரம்பித்தார்.

''சார், இவள் பெயர் அனிதா. இக்கண்காட்சியில் வைப்பதற்காக மிகவும் கஷ்டப்பட்டு 'இரத்த ஓட்ட மண்டலம்' மாதிரி ஒன்று செய்தாள். நன்றாக இயங்கியது. அதைத் தூக்கி வரும் போது எதிர்பாராத விதமாக உடைந்து விட்டது. எல்லோருக்கும் மிகவும் வருத்தமாகப் போய் விட்டது. ஆனாலும், அவள் கண்காட்சியில் கலந்து கொள்ள வேண்டும் என்று ஆர்வம் காட்டினாள். நாங்களும் அனுமதி கொடுத்தோம். ஆனால், இப்படிச் செய்வாளென்று நாங்கள் நினைக்கவில்லை.''

அதிர்ச்சியிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக மீண்டது அக்கூட்டம்.


கண்காட்சியில் கலந்து கொள்ள வேண்டும் என்ற அனிதாவின் ஆர்வத்தை அனைவருமே பாராட்டினார்கள்.

இன்னும் அதிர்ச்சியிலிருந்து வனிதா மீளவில்லை. அவளுடைய கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்தது.

கண்காட்சியைக் காண வந்திருந்த அவளுடைய அப்பா ''வனி, கண்ணு, உனக்குத்தான் முதல் பரிசு கிடைக்கப் போகிறது. அமெரிக்கா போகலாமா?'' என்றார்.

''இல்லையப்பா, இனி அனியோடு பேசுவது, அனியோடு விளையாடுவது, அனியோடு சேர்ந்து படிப்பது, அனிக்குத் தேவையான உதவி செய்வது—இது தான் என் வாழ்க்கை'' என்றாள்.

'குட்' என்று வனிதாவை ஆதரவாக அணைத்துக் கொண்டார் அப்பா.



மனிதனும் கொரில்லாவும்

மனிதன் உடம்பில் உள்ள எலும்புகள் 206. கொரில்லா உடம்பில் உள்ள எலும்புகள் 206. எந்தெந்த இடங்களில் மனிதனுக்கு எலும்புகள் இருக்கின்றனவோ அந்தந்த இடங்களிலே கொரில்லாவுக்கும் இருக்கின்றன! எலும்புகளின் உருவத்திலே சிறு சிறு மாற்றம் இருக்கும். ஆனால், உபயோகத்தில் அதிக மாறுதல் இருப்பதில்லை.

"அண்ணா... அக்கா... பந்தயத்திலே நான்தான் ஜெயிக்கப் போகிறேன்..." என்று உற்சாகமாகச் சொல்லிக்கொண்டே மலையில் ஏறிக்கொண்டிருந்தாள் செல்வி. அவளுக்கு வயது பன்னிரண்டு. சுட்டிப் பெண். வீட்டில் எல்லோருக்குமே செல்லப் பெண்.

"ஏய் செல்வி... ஓரமாகப் போகாதே... பாறை சறுக்கி விடும்... பார்த்துப் போ... பின்னால் கார் வரப் போகிறது...! நடு ரோட்டில் போகாதே...!" என்று எச்சரித்தபடி பின்தொடர்ந்தான் சுரேஷ்—செல்வியின் அண்ணன். வயது பதினாறு. வீட்டுக்கு மூத்த பையன் என்பதால் பொறுப்பும் அதனால் கிடைத்த அதிகாரமும் எப்போதும் பேச்சில் தெரியும்.

"இந்த அழகான இயற்கைக் காட்சிகளை நின்று பார்த்து ரசிக்கத் தெரியாமல் ஏன்தான் இப்படி ஓடுகிறார்களோ..." என்று அலுப்பும் பெருமூச்சுமாக வந்து கொண்டிருந்தாள் கீதா. சுரேஷின் மற்றொரு தங்கை. செல்விக்கு அக்கா. வயது பதினான்கு. கொஞ்சம் பருமனாக இருப்பாள். அவள் நின்று ரசித்ததற்கு இதுவும் ஒரு காரணம்.

மூவரும் விடுமுறைக்காக மலையனூர் மாமா வீட்டிற்கு வந்திருப்பவர்கள். அருகில் இருக்கும் சிறுகுன்றத்துக் குமரன் கோவிலின் எழிலைப் பற்றி அவர் வர்ணிக்கவே, உடனே பார்க்கத் துடித்தனர். நண்பர்களிடம் காரோ, ஜீப்போ ஏற்பாடு செய்துகொண்டு போகலாம் என்று மாமா சொல்லியிருந்தார். ஆனால், வேலைப் பளுவின் காரணமாகத் தள்ளிப் போட்டுக் கொண்டிருப்பதை மூவரும் தாங்கிக் கொள்ள முடியாமல், இன்று அவர்களாகவே புறப்பட்டு வந்துவிட்டார்கள். மலையடிவாரத்தில் டவுன்பஸ் இறக்கி விடவும், அங்கிருந்து நடந்தே மலை ஏற வேண்டியிருந்தது. யார் முதலில் ஏறுகிறார்கள் பார்க்கலாம் என்று பந்தயம் போட்டவள் செல்வி.

படிகளே இல்லாத பாதையில் ஏறுவதும் சுகமாகவே தெரிந்தது. ஏறிக் கொண்டிருந்த போது சில்லென்ற காற்றும், வழியிலே கண்ட இயற்கைக் காட்சிகளும் களைப்பே தெரியாமல் மனத்துக்கு மகிழ்ச்சியைத் தந்தன.

"அண்ணா... நம் நாட்டில் கோவில்களை ஏன் மலை மீது கட்டி வைத்திருக்கிறார்களோ?..." பெருமூச்சு விட்டபடி கீதா கேட்டாள்.


"கீதா... நம் முன்னோர்கள் செய்திருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் காரணம் இருக்கு... இந்த மலையைப் போல உறுதியாகவும் உயர்ந்ததாகவும் நம் எண்ணங்கள் இருக்குமானால், அங்கு ஆண்டவன் வீற்றிருப்பான்' என்பதை நமக்குச் சுட்டிக் காட்டவும், 'கஷ்டப்பட்டு மலையேறி வருகிறவர்கள் கடவுளைத் தரிசிக்கும் போது களைப்பை மறந்து களிப்பை அடைவது போல, விடாமுயற்சியோடு ஒரு காரியத்தில் ஈடுபட்டால் வெற்றி கிட்டும்' என்பதை நமக்குத் தெரிவிக்கவும் இப்படிக் கோவில் அமைத்திருக்கிறார்கள்" என்று சொல்லி முடித்தான்.

அண்ணன் அழகாகவும், அறிவோடும் பேசுவதைக் கேட்ட கீதாவுக்கு ஓரே மகிழ்ச்சி. அதைக் காட்டிக் கொள்ள விரும்பாமல்,

"அது சரி... இந்தப் பாதை இப்படி வளைந்து வளைந்து போகிறதே, இதுக்கு வளையல் பாதை என்று பெயராக இருக்குமோ?" என்று கிண்டலாகக் கேட்டாள்.

"இது யானைப் பாதை..." என்றான் சுரேஷ். அவன் தன்னைக் கேலி செய்வதாக நினைத்துக்கொண்டு கீதா முகம் வாடினாள்.

"நிஜமாகத்தான் கீதா. அதோ பார் 'போர்டில் எழுதியிருக்கிறதே!.." என்று சுட்டிக் காட்டினான். ஆம்,



அறிவிப்பு

யானைப் பாதை இத்துடன் முடிவடைகிறது. கோவிலுக்குச் செல்லும் பக்தர்கள் படிக்கட்டுகள் வழியாகச் செல்லவும்.

என்று அந்த நோட்டீஸ் போர்டில் எழுதியிருந்தது. அம்புக்குறி காட்டிய திசையில் படிக்கட்டுகள் தொடங்கியிருந்தன.

முன்னால் சென்ற செல்வி திடீரென்று, ''அண்ணா... அக்கா... ஓடி வாங்க... யானை!'' என்று குரல் கொடுத்தாள். குரல் வந்த திசையில் பார்த்த போது அங்கு சிறிய வாசல் திறந்திருப்பது தெரிந்தது.

''பயப்படாதே கீதா...வா போய்ப் பார்க்கலாம்...'' என்று சுரேஷ் தைரியமாக முன்னால் சென்றான். அவர்கள் நுழைந்த இடம் நந்தவனம் என்பது தெரிந்தது. பூத்துக் குலுங்கும் மரம் செடிகளுடன் புனிதமான மணம் வீசிக் கொண்டிருக்க, செல்வி சுட்டிக் காட்டிய இடத்தில் ஒரு யானை சிலை வடிவில் — நின்று கொண்டிருந்தது.

''நல்லவேளை... சிலைதான்... நான் பயந்தே போய்விட்டேன்'' என்ற கீதா, ''அண்ணா, பக்கத்திலே ஒரு பையன் சிலைகூட இருக்கிறதே...'' என்றாள்.

''யானைச் சிலைக்குப் பூவும் பொட்டும் அலங்கரித்திருப்பதைப் பார்த்தால், இங்கு யாரோ தினம் பூஜை செய்கிறார்கள் என்று தோன்றுகிறதே! மாமா இதைப் பற்றிச் சொல்லவேயில்லையே...!'' என்றான் சுரேஷ்.

''அங்கே பாரேன்...'' என்று சொல்லிக் குதித்துக் கொண்டு ஓடினாள் செல்வி. அவளைத் தொடர்ந்த மற்ற இருவரும் கிழவி ஒருத்தி பூ கட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்தனர். பூக்கள் புத்தம் புதிதாக இருப்பதையும், கிழவியின் கை அசைவையும் கண்ட பின்னரே, அவள் நிஜக் கிழவிதான், சிலையல்ல என்பது புரிந்தது!

''பாட்டி... இந்தத் தள்ளாத வயசிலே தனியாகப் பூ கட்டிக் கொண்டிருக்கிறீர்களே.... துணைக்கு யாராவது...'' என்று இழுத்தபடி சுற்றிலும், பார்த்தான் சுரேஷ்.

''தனியாவது தள்ளாமையாவது... இதோ கணேசன் இருக்கிறான்.... ராமு இருக்கிறான்... கூப்பிடு தூரத்தில் முருகன் இருக்கிறான்...'' என்று சிலைகளையும் கோவிலையும் சுட்டிக் காட்டிப் பேசினாள் கிழவி.

''விளக்கமா சொல்லுங்க பாட்டி... அந்தப் பையன் சிலை யாருடையது..? பக்கத்திலே யானைச்சிலை இருக்கிறதே.. அதைப் பத்திச் சொல்லுங்க...'' என்றாள் கீதா ஆர்வமாக.

''நிழலிலே உட்காருங்க, குழந்தைகளா... கோவில் திறக்கறதுக்குள்ளே... பூவையும் கட்டி முடிச்சிடுவேன்... முழுக் கதையையும் உங்களுக்குச் சொல்லி முடிச்சிடுவேன்...''

இதற்குள் இடைமறித்த செல்வி, ''ஹய்யா, கதையா...! சொல்லுங்க பாட்டி...'' என்று குதித்தாள்.


''என் பேரு பொன்னம்மா. பொன்னம்மாப் பாட்டி என்று இப்போ கூப்பிடுவாங்க. அப்போ உங்களை மாதிரி சின்னப் பொண்ணா இருந்த போது 'பொன்னி' 'பொன்னி'ன்னு என்னைக் கூப்பிடுவாங்க... இந்த யானை பேர் கணேசன்... பக்கத்திலே நிற்கிறவன் ராமு... அப்புறம் வள்ளி, சாந்தி, சேகர் எல்லோருமே உங்களாட்டமா சின்னப் புள்ளைங்களா இருந்தப்போ நடந்த சம்பவங்களைச் சொல்றேன்; கேளுங்க...'' என்று கதையைத் தொடங்கினாள் பாட்டி.

வேலையா இந்தக் கோவிலிலே யானைப் பாகனாயிருந்தான். அவன் யானையை அழைத்துக் கொண்டு புறப்பட்டால், குழந்தைகள் எல்லோருக்

உப்பு மூட்டை

''உனக்கு ரெட்டைத் தங்கைகள் பிறந்திருக்காமே!''

''உம்...ஒரே சமயத்திலே ரெண்டு உப்பு மூட்டைகளைத் தூக்கி விளையாட்டுக் காட்டணுமே!'' -சுதர்ஸன்



குமே கொண்டாட்டம் தான். வேலையாவின் குழந்தைகள் வள்ளி, ராமு இருவருக்கும் மிகவும் பெருமையாக இருக்கும். மற்றவர்கள் பயந்து பயந்து அருகில் வருவதும், நடுங்கிக்கொண்டே தும்பிக்கையைத் தொடுவதுமாக இருக்கையில், அவர்களால் யானையைக் குளிப்பாட்டவும், தீனி கொடுக்கவும், அலங்காரம் செய்யவும், செல்லமாக அதை அதட்டவும் முடிகிறதல்லவா? அதுவும் ராமுவுக்கு ஒரு ராஜகுமாரனைப் போல் அதன் முதுகில் சவாரி செய்து கொண்டு போவது தனிப் பெருமைதானே!

முறம் போலக் காதுகளை ஆட்டிக்கொண்டே மெதுவாக முட்டியை மடக்கி, அவன் ஏறிக் கொள்வதற்காக அது காத்து நிற்கும். பல்வேறு தொனிகளில் அவன் 'கணேசா' என்ற ஒரே வார்த்தையைச் சொல்லும்போது, அவன் என்ன சொல்கிறான் என்பதைப் புரிந்து கொண்டு அதன்படி செய்யும்.

விரைந்து செல்ல வேண்டுமா, நிற்க வேண்டுமா, ஆற்றில் இறங்க வேண்டுமா, குளித்தது போதும் என்று புறப்பட வேண்டுமா, குழந்தைகள் கொடுக்கும் பழம் தேங்காயை வாங்கிக் கொள்ள வேண்டுமா — இப்படி எல்லாவற்றிலும் ராமு சொல்வது 'கணேசா' என்றுதான்.

வேலையா பார்த்துப் பார்த்து யானைக்கு அலங்காரம் பண்ணும் போதும் ராமு கூடவே நிற்பான். நெற்றியில் விபூதிப் பட்டையும், குங்குமமும் வைத்தால் மட்டும் போதாது என்று, தும்பிக்கை வரை அலங்காரக் கோலம் வரையச் சொல்லுவான். காது மடல்கள், வாலைக்கூட விட்டு வைக்காமல் அழகு படுத்தச் சொல்லுவான்.

சின்ன வயதிலேயே, தாயின் மடியில் தூங்கிய நேரத்தை விட, கணேசனின் முதுகில் அவன் தூங்கிய நேரம்தான் அதிகம். அக்கா வள்ளியுடனோ பள்ளித் தோழர்களுடனோ விளையாடுவதை விடக் கணேசனுடன் விளையாடுவதுதான் பிடித்தமான பொழுதுபோக்கு. அதற்காகப் படிப்பில் நாட்டமில்லாதவன் அல்ல. பள்ளிக்கூட மணி அடிக்கும்போது சரியாக வகுப்பறையில் நுழைந்து விடுவான். பாடங்களைக் கவனித்துப் படிப்பான்.

விடுமுறை நாட்களில் கோயிலில் குழந்தைகளின் கூட்டம் அதிகமாக



வேலை கிடைத்ததா?

"பாபு, உங்க அண்ணா லக்னோ போயிருந்தாரே, அவருக்கு வேலை கிடைச்சுதா?"

"இல்லேடா கோபு லக்னோ போயும் அண்ணாவுக்கு நோ லக் (No Luck)

—K. வெங்கடேஸ்வரன் (960)

இருக்கும். உச்சிக்கால பூஜை முடிந்ததும், பிரசாதம் தயாராக இருக்கும். குழந்தைகள் முண்டியடித்துக் கொண்டு வரும்போது ராமு அவர்களையெல்லாம் வரிசையாக நிற்க வைப்பான். குருக்கள் ஐயா எல்லோருக்கும் பிரசாதம் கொடுப்பார். ராமுவுக்கென்று தனியாகப் பிரசாதம் எடுத்து வைத்திருப்பார். அவரது அன்பும் சேர்ந்திருப்பதால், பிரசாதத்தின் சுவை கூடியிருக்கிறதோ என்று ராமு நினைப்பான்.

பிரசாதத்தை வாங்கிக்கொண்டு மண்டபத்தை நோக்கி ஓடுவார்கள் மற்ற குழந்தைகள். பெரிய அண்டாவில் வைத்திருக்கும் பெரிய பெரிய சோற்று உருண்டைகளை, பந்துபோல இரண்டு கைகளாலும் உருட்டி, உருட்டி வேலையா உயரே வீசுவான். 'ஆ'வென வாயைத் திறந்து லாகவமாகக் கணேசன் வாங்கிக் கொள்ளும். குழந்தைகளுக்கு அது பெரிய வேடிக்கை! இதைப்பார்த்துக்கொண்டே தாங்களும் சாப்பிட்டு முடிப்பார்கள்.

அதைப்போல மரநிழலில் அசைந்து அசைந்து தென்னங் கீற்றுகளையோ, தழைகளையோ தின்னும் போதும் வேடிக்கை பார்ப்பார்கள். ராமு மேலும் மேலும் தழைகளைக் கொண்டு வந்து போடுவான்.

"ராமு... உங்க கணேசன் ஆடாமல் அசையாமல் நிற்கவே நிற்காதா?..." என்று குழந்தைகள் கேட்பார்கள். அவனுக்கு வியப்பும் பெருமையும் ஏற்படும்.

இரவு கொட்டடியில் கணேசனை விட்டு வீடு திரும்பும்போது ராமுவுக்கு வருத்தமாக இருக்கும். மறுநாள் கணேசனுக்கு எப்படியெல்லாம் அலங்காரம் செய்யலாம் என்று நினைத்துக் கொண்டே தூங்கிப் போவான்.

குருக்கள் ஐயா சில சமயம் கேலி செய்வார்.

''ராமு... நீ எட்டாவது வகுப்பு முடிச்சதும் உன்னைப் பட்டணத்துக்கு அனுப்பிப் படிக்க வைக்க நானும் வேலையாவும் நினைத்திருக்கிறோம்.... ஆனால், அது நடக்குமா என்று சந்தேகமாய் இருக்கு...'' என்பார்.

''ஏன் ஐயா...? நான் நல்லாப் படிக்கிறேனே!...'' என்பான் ராமு.

''நீ இந்த ஊரைப் பிரிந்தாலும், கணேசனை விட்டுப் பிரிய மாட்டாய் போலிருக்கே... அப்புறம் பட்டணம் எப்படிப் போவது? யானை மேலேயே ஏறிப் போயிட்டு வந்திடுவியோ!'' என்று சொல்லிப் பெரிதாகச் சிரிப்பார்.

''விளையாட்டுப் புள்ளை தானுங்களே... போகப் போகச் சரியாகிவிடும்... பட்டணமும் படிப்பும் ஆளையே மாத்திவிடாதா?...'' என்று பிள்ளைக்காகப் பரிந்து கொண்டு வருவான் வேலையா.

''ஆளே மாறிவிட்டால் உன்னையும் என்னையும் மறந்து விடப் போகிறான் போ...'' என்று பதிலுக்குச் சொல்லிவிட்டு,

''ராமு... நீ பெரிய படிப்பு படித்துவிட்டால் உனக்குக் கர்வம் வந்துவிடுமோ?'' என்று சந்தேகமாக ராமுவிடம் கேட்பார்.

''பெரிய... உருவம் உடையவன் கணேசன், அவன்கிட்டே உயிராகப் பழகறப்போ வராத கர்வம், பெரிய படிப்பினாலே வந்திடுமா ஐயா?... படிச்ச முடிச்சதும் இந்தக் கோவிலுக்கே வந்து வேலை பார்ப்பேன்...'' என்று உறுதியாகச் சொல்வான்.

இவர்கள் இப்படியெல்லாம் நினைத்திருக்க இறைவன் நினைத்தது வேறு விதமாக அல்லவா இருந்தது!

வழக்கமாக ஐந்து மணிக்கே எழுந்துவிடும் வேலையா அன்று ஆறு மணியாகியும் எழுந்திருக்கவில்லை. மலையிலிருந்து கணேசன் குரல் கொடுக்கத் தொடங்கியது. அதைக் கேட்டுவிழித்துக் கொண்டான் ராமு.

''அப்பா... அப்பா... கணேசன் கூப்பிடுதே...'' என்று வேலையாவை எழுப்பினான். ஆனால், வேலையா நினைவற்றுக் கிடப்பது கண்டு திடுக்கிட்டுப் போனான். ஓடிப்போய் வைத்தியர் ஐயாவை அழைத்து வந்தான். அவர் கொடுத்த பச்சிலை மருந்தில் குணம் தெரிந்தது. சிறிது நேரத்தில் வேலையா எழுந்து உட்கார்ந்தான்: சாப்பாடு சாப்பிட்டான்.

ராமுவுக்கும் வள்ளிக்கும் போன உயிர் திரும்பி வந்தது போலிருந்தது.

அன்று ஓய்வெடுத்துக் கொள்ளும் படி சொல்லிவிட்டு வைத்தியர் ஐயா போய்விட்டார். தந்தையைப்பார்த்துக் கொள்ளும் பொறுப்பை அக்காளிடம் விட்டுவிட்டு, கணேசனைக் கவனிக்கப் புறப்பட்டான் ராமு.


ஒருநாளும் லீவே எடுக்காத ராமு, அன்று பள்ளிக்கூடம் போகாமல் கணேசனை இழுத்துக் கொண்டு ஆற்றங்கரைக்கு வந்து சேர்ந்தான்.

''கணேசா... அப்பாவுக்கு நல்லா ஆயிடுமா...?'' என்று வாய்விட்டு அழுகையுடன் கேட்டான் ராமு. கணேசன் ஆறுதல் சொல்வது போல, துதிக்கையால் தடவிக் கொடுத்தது.


அப்போது 'கலகல'வென்ற சிரிப்பு சத்தம் கேட்டது. நிமிர்ந்து பார்த்தான் ராமு. கரையில் நின்று கொண்டிருந்தாள் சாந்தி. ஊரிலேயே பெரிய பணக்காரரான வேதாசலத்தின் மகள்தான் சாந்தி. தன் தந்தையுடன் அவள் கோவிலுக்கு வரும்போது பார்த்திருக்கிறான்.

''யானையோடு பேசறியே... அதுக்குப் புரியுமா...?'' என்று கேட்டாள் கண்களை உருட்டியபடி.

''நல்லாப் புரியும்...'' என்றான் ராமு.



சர்க்கரையில் இரண்டு வகை



''சர்க்கரை எதிலிருந்து தயாரிக்கிறார்கள்?'' என்று கேட்டால், ''கரும்பிலிருந்து'' என்று உடனே சொல்லி விடுவீர்கள். பீட் கிழங்கிலிருந்தும் சர்க்கரை தயாரிக்கிறார்கள் என்பது உங்களுக்குத்தெரியுமா?

கரும்பு பயிரிட முடியாத குளிர்ப் பிரதேசங்களில் பீட் பயிர் செய்யப்படுகிறது. பீட் கிழங்கிலிருந்து சர்க்கரை எடுக்கலாம் என்பதை 1747-ஆம் ஆண்டு கண்டு பிடித்தார்கள். கரும்பிலிருந்து கிடைக்கும் சர்க்கரையை வாயில் போட்டுப் பாருங்கள்; பீட் கிழங்கிலிருந்து கிடைக்கும் சர்க்கரையையும் வாயில் போட்டுப் பாருங்கள். இரண்டுக்கும் வித்தியாசமே தெரியாது!

அவள் கையில் ஒரு சடை நாய்க் குட்டி பயந்து ஒட்டிக் கொண்டு ''பவ்... பவ்...'' என்று குரைத்தது ''உஷ்... ஜிம்மி... சும்மா இரு...'' என்று அதட்டிவிட்டு,

''சின்னப் பையனா இருக்கிறே... உனக்குப் பயமா இல்லையா...?'' என்று கேட்டாள்.

''பயமா... எனக்கா?... ஏன் சாந்தி, உன் ஜிம்மியைப் பார்த்து உனக்குப் பயமா இல்லே?...?'' என்று திருப்பிக் கேட்டான்.

''ஐய்யே... இது கு...ட்...டி... நாய்...''

''அது உனக்குக் கு...ட்...டி...ப்... பாப்பா... அதேபோல் இதுக்கு நான் குட்டிப் பாப்பா... இதுங்கிட்டே பாசம்தான் வருமே தவிர பயம் எப்படி வரும்?'' என்று சொல்லிவிட்டு ராமு சிரிக்க, சாந்தியும் சேர்ந்து சிரிக்க, ஜிம்மி பயம் தெளிந்து வாலை ஆட்ட, கணேசன் காதுகளை அசைத்துத் தும்பிக்கையை உயர்த்திக் குரல் கொடுத்தது.

கணேசன் புஸ்ஸென்று முதுகில் நீரை ஊற்றிக் கொள்ளும்போது, ''ஐ... ஷவர்பாத் எடுக்கிறாப் போல் குளிக்குதே...'' என்று சிரித்தாள் சாந்தி.

ராமு கைக்கெட்டியவரை கணேசனுக்கு அழுக்குத் தேய்த்து விட்ட போது,

''நீ எவ்வளவுதான் அழுத்தி அழுத்தித் தேய்ச்சாலும் என் ஜிம்மி மாதிரி வெள்ளையாக ஆகிவிடாது, உன் கணேசன்...'' என்று கேலி செய்தாள், சாந்தி.

''உடல் கறுப்பாக இருந்தாலும் உள்ளம் வெள்ளையாக இருக்கிறதுதான் முக்கியம். சில மனுஷங்க உன் ஜிம்மியைப் போல் நிறத்திலே வெள்ளையா இருந்தாலும், நன்றி காட்டறதிலே இதைப் போல இல்லையே!...'' என்று ராமு சொல்லவும், சாந்தியின் முகம் வாடிப் போயிற்று.

''ராமு... அது எனக்கும் புரியுது. அப்படிப்பட்டவர்கள் என்றைக்காவது திருந்தலாம் இல்லையா...? மிருகங்கள் கூட அன்புக்குக் கட்டுப்படுகின்றன. ஆனால்... ஆனால்...'' அதற்குமேல் வார்த்தைகள் வராமல், உதடுகள் துடிக்க, கண் கலங்க நின்று கொண்டிருந்தாள் சாந்தி.

ராமுவுக்குப் புரிந்தது. அவளது தந்தை வேதாசலத்தைப் பற்றித்தான் சொல்ல நினைக்கிறாள். பெற்ற தந்தையைப் பற்றிப் பிறரிடம் அவதூறாகச் சொல்லக் கூடாது என்ற பண்பு அவளைத் தடுத்து விட்டது என்பது தெளிவாகத் தெரிந்தது. அவள் சொல்லாவிட்டால் என்ன?

வேதாசலத்துக்குச் செல்வம், செல்வாக்கு இரண்டுமே நிறைய இருப்பது ஊருக்கே தெரியும். குழந்தைப் பாக்கியத்திற்கும் குறைவில்லாமல் சாந்தியும் சேகரும் பிறந்திருக்கின்றனர். வியாபாரத்தில் தேர்ந்தவர் என்பதை அவரைச் சுற்றியிருக்கும் மக்கள் கூட்டம் நிரூபித்தது. பட்டை பட்டையாக விபூதியும் நடுவில் குங்குமமும், தவறாமல் கோவிலுக்கு வருவதும் அவரைப் பக்திமானென்று பறைசாற்றின. ஆனால், அவர் நல்லவர் என்று அடையாளம் காட்டும் வகையில் தேடித் தேடிப் பார்த்தாலும், நல்ல குணம் எதுவுமே அவரிடம் தென்படவில்லையே!

ஆண்டவன் சந்நிதியில் அனைவரும் சமம் என்கிறோமே, அந்தக் கொள்கை அவரிடம் செல்லுபடியாகாது. அவர் தரிசனத்திற்கு வந்துவிட்டால், அனைவரும் வழிவிட்டு ஒதுங்க வேண்டும்.

பக்தியைக் காட்டுவதைவிடப் படா டோபத்தைக் காட்டுவதில்தான் அவர் கவனமாக இருப்பவர். ஏழை, எளியவர் என்ற இரக்கமே இல்லாமல் பூக்காரக் கிழவியிடம் கூட ஏமாற்றுவதை ராமு பலமுறை பார்த்திருக்கிறான். வம்புக்குப் போகாத வேலையாவையும் விட்டு வைக்காமல் அதட்டி உருட்டுவார்.

அப்படிப்பட்டவர் திருந்த வேண்டும் என்று அவர் மகள் நினைக்கிறாள்.

''கவலைப்படாதே சாந்தி... இந்தக் குன்றத்துக் குமரனை நம்பு... எல்லாம் சரியாகிவிடும்...'' என்று ஆறுதல் சொன்னான். சற்று முன்னர் அவனே ஆறுதல் வேண்டி நின்றவன்தான்!

''சாந்தி, என் அப்பாவுக்கு உடம்பு சரியில்லை. எழுந்திருக்கக்கூட முடியவில்லை'' என்று வருத்தத்துடன் சொன்னான் ராமு.

''என்ன, உன் அப்பாவுக்கு உடம்பு சரியில்லையா? இதற்குக் காரணம் நேற்று நடந்த சம்பவமாகத்தான் இருக்கணும்...''

''சாந்தி... நேற்று என்ன நடந்தது...? விளக்கமாகச் சொல்லு...'' பதைபதைப்புடன் கேட்டான் ராமு.

நேற்று நடந்த சம்பவம்... அது முதல் அதிர்ச்சி! ராமு... ''போகப் போக நீயும் உங்கப்பாவும் எத்தனை அதிர்ச்சிகளைச் சந்திக்க வேண்டியிருக்குமோ?'' என்றபடி சொல்லத் தொடங்கினாள் சாந்தி.

கோவிலில் • திருவிழா, உற்சவம் அல்லது வெள்ளிக்கிழமை, பௌர்ணமி இதுபோன்று விசேஷங்கள் இல்லாத மற்ற சாதாரண நாட்களில் கணேசனை வீதி வீதியாக அழைத்துப் போவது வழக்கம்தான். அதன்படி நேற்று கணேசனை அழைத்துக் கொண்டு புறப்பட்டான் வேலையா.

சில குழந்தைகளுக்குத் தலையைத் தொட்டு ஆசீர்வாதம் கிடைத்தது. பச்சிளம் குழந்தைகளை வாங்கி யானையின் முதுகில் போட்டு எடுத்து வேலையா திருப்பிக் கொடுக்க, புஸ்ஸென்று நீர் தெளித்து அவர்கள் நலமாய் வாழ ஆசீர்வதித்தது. பெரியவர்கள் சீப்புச் சீப்பாகக் கொடுத்த வாழைப் பழங்களைத் தும்பிக்கையில் எடுத்து வாய்க்குள் அப்படியே போட்டுக் கொண்டது. வேதாசலத்தின் பங்களாவுக்கு அருகே வந்தபோது, அவரே வாசலில் வந்து வரவேற்றார். அவரைக் கண்ட கூட்டம் பயத்தாலோ மரியாதையாலோ சிதறிப் பிரிந்தது. வேலையா யானையுடன் காம்பவுண்டுக் கேட்டைத் தாண்டி உள்ளே நுழைந்தான்.

''வா... வேலையா... நீ எத்தனை நாளைக்கு இப்படியே கஷ்டப்படப் போறே... வள்ளியும் வளர்ந்து நிற்குது... அதுக்குக் கல்யாணம் கட்டி வைக்க வேண்டாமா...?'' மெல்லத் தூண்டிலை வீசினார், வேதாசலம்.

''முருகன் மனசு வைக்கணுமே...'' என்றான் அப்பாவி வேலையா.

''நீ மனசு வைத்தால் போதாதா...?'' என்று சுற்றுமுற்றும் பார்த்துக் குரலைத்தணித்தபடிதொடர்ந்தார். வேதாசலத்தின் பங்களாவிற்குள் நுழையத் துணிவில்லாத தெருக்குழந்தைகள் வாசற்புறத்திலே நின்று விட்டனர். அது மாலை நேரம். தோட்டத்தில் காற்றாட அமர்ந்திருந்த வேதாசலத்துக்கு அங்கேயே டிபனை வைத்து விட்டு வேலைக்காரர்கள் வீட்டிற்குப் போய் விட்டனர். சாந்தியின் அம்மா. கோவிலுக்குப் போயிருந்தாள். அருகில் யாரும் இல்லாத தெம்பில் வேலையாவிடம் டிபன் தட்டை நீட்டிவிட்டு,

''நீ இதையெல்லாம் கண்ணால்கூடப் பார்த்திருக்க மாட்டியே... சாப்பிடு... தாராளமாகச் சாப்பிடு...'' என்றார்.

இதற்குள் யானை குரல் கொடுத்தது. அதைக் கேட்டு அங்கே வரப்போன

என்ன இனிஷியல்?


''மகன்: அப்பா, அதோ போகுதே அதுக்குப் பேரென்னப்பா?

அப்பா: ஓநாய்

மகன்: அதன் பெயர் ஓ. நாய். அப்படியானால் நம்ம வீட்டு நாய்க்கு இனிஷியல் என்னப்பா?

—எஸ். மோகன்ராஜ்





ஆலாப் பறப்பது' என்றால்....?

''என்னடா இப்படி 'ஆலாப் பறக்கிறியே!' என்று அவசரப்படுகிறவர்களைப் பார்த்துச் சிலர் கூறுகிறார்கள்.

'ஆலா' என்பது என்ன? அதற்கும் அவசரப்படுகிறவர்களுக்கும் என்ன தொடர்பு?

ஆலா என்பது கடற் கரையில் வாழும் ஒரு வகைக் கழுகு. அதன் தலை, மார்பு, வயிறு, வால் எல்லாமே வெள்ளையாக இருக்கும். மற்ற இடங்களெல்லாம் கருஞ் சிவப்பாக இருக்கும். அது இறக்கைகளை அடித்து வட்டமிட்டுக் கடலின் மீது எந்த நேரமும் பறந்து கொண்டே இருக்கும். சளைக்காது. நண்டு, மீன் ஏதாவது கண்ணுக்குத் தெரிந்தால் 'லபக்' கென்று கீழே பாய்ந்து தூக்கிச் சென்றுவிடும்.

ஓரிடத்தில் நிற்காமல் எப்போதும்பறந்து கொண்டே இருக்கும் ஆலாவை, அவசரக்காரர்களுக்கு ஒப்பிடுவது சரிதானே?

(சென்ற இதழில் வந்த குப்புசாமி — அப்புசாமி பாட்டிலே பாருங்கள்: கடைசி வரியில் 'ஆலா' வருகிறது!)

சாந்தியை, தந்தையின் பேச்சுக் குரல் தடுத்து நிறுத்தியது.

''நல்ல வேளையா... வீட்டிலே யாரும் இல்லை... ஏன் வேலையா... உனக்கு ஒரு பழமொழி தெரியுமா... 'யானை இருந்தாலும் ஆயிரம் பொன்.. இறந்தாலும் ஆயிரம் பொன்' என்று...?''

''ஐயா...!'' பதறினான் வேலையா.

''இது உயிரோடே இருந்தால்... உனக்குக் கிடைக்கிறது என்ன? ஏதோ கொஞ்சம் பணமும், கோவில் உருண்டைச் சோறும்தான்...ஆனால்... நான் சொல்றபடி கேட்டால்...''

ஒன்றும் பேசத் தோன்றாமல் திகைத்து நின்றிருந்தான் வேலையா. 'படக் படக்' என அடித்துக் கொள்ளும் மனத்துடன் சாந்தி ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தாள். அது தவறுதான். அதனால்தான் வேதாசலத்தின் திட்டத்தை அவளால் புரிந்து கொள்ளவும் முடிந்தது.

''யானைத் தந்தத்திற்கு வெளி நாட்டிலே என்ன மதிப்பு தெரியுமா...?'' என்று அவர் சொன்னதும்,

''ஐயா... பெத்த புள்ளைக்கும் மேலாக இது மேலே உயிரையே வைச்சிருக்கேனுங்க... என் காதுபட அப்படிச் சொல்லாதீங்க...'' என்றபடி வேலையா அவர் காலில் விழுந்து கெஞ்சினான்.

''எழுந்திரு... அப்படியானால் வேறு ஒரு யோசனை சொல்லட்டுமா...'' என்று ஆரம்பித்தவர் கிசுகிசுத்த குரலில் சொன்ன இரகசியம் இதுதான்:

காட்டில் அவருடைய ஆட்கள் வெட்டி வைத்திருக்கும் சந்தனக் கட்டைகளை அவ்வப்போது கடத்துவதில் உதவி செய்ய வேண்டும் என்பதுதான். வேலையாவையோ, யானையையோ யாரும் சந்தேகப்படமாட்டார்கள் என்பது அவர் எண்ணம்.

''ஐயா... அந்தப் பாவத்திலேயும் எனக்குப் பங்கு வேண்டாம். அந்தப் பணத்திலேயும் பங்கு வேண்டாம்...'' என்று கை குவித்தபடி யானையுடன் வீடு திரும்பிவிட்டான் வேலையா.

அந்த அதிர்ச்சி தாளாமல்தான் தந்தை படுத்து விட்டாரா?...ஐயோ! அவர் நிரந்தரமாகப் படுத்து விட்டால்...? — ராமு கண் கலங்கினான்.

வேலையாவுக்கு அடிக்கடி மயக்கம் வந்தது. அதன்பின் ஒருநாள், வலது கையும் காலும் இழுத்துக் கொண்டு விட்டன. வாய்கூடக் கோணிக் கொண்டு போயிற்று. வைத்தியர் பக்கவாதம் என்றார். தடவிக் கொள்ளத் தைலமும் உள்ளுக்குச் சாப்பிட மருந்தும் கொடுத்து வந்தார். வேலையா நோய்வாய்ப்பட்டுப்படுக்கையில் விழவே ராமுவின் படிப்பில் மண் விழுந்தது. சின்னஞ்சிறு தோள்களில் குடும்பத்தின் சுமையும் விழுந்தது.

வேதாசலம் எதிர்பார்த்ததும் இதைத்தானே? ராமுவைக் கூப்பிட்டனுப்பினார்.

''சின்னஞ்சிறு வயது. பாவம்... படிக்க வேண்டிய நாளிலே... இப்படி ஒரு கஷ்டமா...? ராமு! நீ படிக்க ரொம்ப ஆசைப்படுகிறாயாமே...'' என்று தேன் தடவியது போலே பேசினார்.

மௌனமாக நின்று கொண்டிருந்தான் ராமு

''நீயோ சின்னப் பையன்... அதுவோ அறிவுகெட்ட மிருகம்!.... உனக்கு அடங்குமா?...'' புதிர்போலத் தோன்றினாலும் கணேசனைத்தான் குறிப்பிடுகிறார் என்று புரிந்ததும், விழிகள் சிவக்க அவரை ஏறிட்டு நோக்கினான்.

''ஆற்றுக்குப் போகும்போது வரும்போது... அப்படி இப்படிப் போற வர சாக்கிலே... மலைக்காட்டுப் பக்கமா யானையை ஓட்டி விட்டுடு.... சர்க்கஸ்காரங்க அதைப் பிடிச்சுப் போயிடுவாங்க. யாராவது கேட்டா தழை ஒடிச்சிக்கிட்டிருந்தப்போ ஓடி விட்டதா சொல்லிப்பிடு. நானும் மத்தவங்க நம்பும்படி செய்திடுறேன்.''

ராமு புரிந்தும் புரியாத பாவனையில் நின்றான்.

மௌனம் சம்மதத்துக்கு அடையாளம் என்று தவறாகப் புரிந்து கொண்டவர்,

''அப்புறம் என்ன...? நீ படிப்பைத் தொடங்கலாம்... உங்கப்பனுக்கு இங்கிலீஷ் வைத்தியம் பார்க்கலாம்... ஆப்பிளும், ஆரஞ்சுமா வாங்கித் தரலாம்... அதுக்கெல்லாம் பணம்... நான் தருவேன்... எனக்குக் கிடைக்கப் போறதிலே பங்கு தர வேண்டாமா..? ரெட்டை லாபமாச்சே...! உன் கணேசன் தருவது ஒரு பக்கம்... கணேசனுக்குப் பதிலா சர்க்கஸ்காரன்கிட்டே இருக்கிற யானையைக் கோவிலுக்கு வாங்கிடலாம். கமிஷன் என் கையிலே விழுந்திடும்...'' என்று வெற்றிச்சிரிப்புச் சிரித்தார் வேதாசலம்.

''ஐயா... நான் வேலையாவோட மகனுங்க... என் உடம்பிலேயும் அந்த ரத்தம் ஓடறபோது... நான் மட்டும் தப்புக் காரியம் பண்ணுவேன் என எதிர்பார்த்தது உங்க தப்புங்க...'' என்று சொல்லிவிட்டு விடுவிடுவெனப் போய்விட்டான் ராமு.

வேதாசலத்தின் பேச்சுக்களால் மனம் புண்பட்டுப் போயிருந்த ராமுவுக்கு அன்றிரவு தூக்கம் சரியாக வரவில்லை. அசதியால் கண்கள் மூடிய போது, சர்க்கஸில் கணேசன் சரியாக வித்தை காட்டாததால் சவுக்கடி படுவது போலவும், சரியாகச் சாப்பிடாததால் நாளுக்கு நாள் துரும்பாக இளைத்து வருவது போலவும் கனவு கண்டான்.

திடுக்கிட்டு எழுந்தான் ராமு. கண்டதெல்லாம் கனவு என்று புரிந்தது. விடிந்து வெகு நேரமாகி விட்டிருந்தது. அவசரமாகப் பல் துலக்கி, குளியல் மற்றவற்றை முடித்து, சாப்பிடாமலே கோவிலுக்கு ஓட்டமும் நடையுமாக வந்து சேர்ந்தான்.

அன்றே வேதாசலம் தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கினார்.

மலை ஏறிவந்த வேதாசலம் வழியில் நின்ற ராமுவிடம், ''எங்கேடா உங்கப்பன்... அங்கே பார்... கோவிலுக்கு வருகிற பிள்ளைகளைத் தூக்கிப் போட்டு உன் யானை மிதித்துவிடும் போலிருக்கிறதே! உன் அப்பன் வீட்டிலே படுத்து ஹாய்யாகத் தூங்கிக்கிட்டிருக்கானே...!'' என்று கூச்சலிட்டார்.

விவரம் தெரிந்துகொண்டே பேசுபவரிடம் விளக்கம் சொல்ல என்ன இருக்கிறது என்று ராமு பேசாமல் நின்றான்.

கூட்டத்தில் ஒருவர், ''வேலையாவுக்கு மலை ஏற முடியாதுங்க... கைகால் இழுத்துக்கிட்டுது...'' என்று சொல்லவே,

''அப்படியானால் வேறே ஆளைப் போட வேண்டியதுதான்...'' என்று ஆணியடித்தது போல் சொல்லிவிட்டு நகர்ந்தார்.

அன்று முதல் சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் யானையைச் சிறுவன் ராமுவின் பொறுப்பில் விட்டிருப்பதே தப்பு என்று சொல்லிக் கொண்டிருந்தார் வேதாசலம். ''என்றாவது ஒரு நாள் இது ஒரு உயிரைப் பலி வாங்கினால்தான் உங்களுக்குத் தெரியும்''

மோதிய காரணம்?

பெரியவர்: ஏண்டா பையா, சைக்கிளில் பெல் இல்லாததால் மோதினாயா? இல்லை, விளக்கு இல்லாததாலா?

பையன்: பிரேக் இல்லாததனால் தான்.

—பட்டுக்கோட்டை ரவி



என்று வருவோர் போவோர்களிடம் சொல்வார்.

இந்த நிலையில் விநாயகர் சதுர்த்தியும் கோவில் திருவிழாவும் அடுத்தடுத்து வரவிருந்தன. வேதாசலத்தைப் பகைத்துக்கொண்டால், உற்சவச் செலவுக்கு என்ன செய்வது என்ற நிலையில் குழம்பினர் டிரஸ்டிகள்.

''பரம்பரை பரம்பரையா வேலையா குடும்பம்தான் யானைப் பாகனு இருக்கிற வழக்கம்'' என்று குருக்கள் ஐயாதான் பேச்சைத் தொடங்கினார்.

''வேலையாவையே ஒரு வார்த்தை கேட்டுவிட்டு...'' என்று இழுத்தார் இன்னொருவர்.

''அவனைத்தான் வேண்டாம் என்று முருகனே ஒதுக்கி விட்டாரே! வாய் பேச முடியாதவன் என்ன சொல்லப் போகிறானாம்?'' என்று இடக்காகச் சொன்னார் வேதாசலம்.

''அடக் கடவுளே...முருகன் மேலேயே அந்தப் பழியைப் போட்டுவிட்டான் இந்த அக்கிரமக்காரன்... ஒரு ஊழியனுக்கு நோய் வந்துவிட்டால் நோயைப் போக்க வழியைத் தேடாமல், நோயாளியையே ஒதுக்கிவிடவா இறைவன் சொல்கிறான்!'' என்று மனத்திற்குள்ளாகக் குமைந்தார் ஒருநல்லவர்.

''வைத்தியம் செய்யும் வழியைச் சொல்லாமல், வாழவிடாமல் செய்யும் வழியைச் சொல்கிறாரே...'' என்று மற்றொருவர் நினைத்துக் கொண்டார்.

''வேதாசலம் சொல்வது சரிதான்'' என்று ஆமாம்சாமி போடும் ஓர் ஆசாமி சொன்னார்.

''அந்தக் குடும்பத்துக்கு நஷ்டஈடாக ஏதாவது... கொடுத்து விட்டு வேறொரு பாகனை வரச் சொல்லலாம்...'' என்று குருக்கள் நடுநிலைமையாகச் சமாளித்தார்.

''வேலையிலே இருக்கும்போது அடிபட்டு இறந்து போனால்தான் நஷ்டஈடு சமாச்சாரம்... அது சரி... உங்களுக்கு ஏன் இவ்வளவு அக்கறை? பங்கு ஏதாவது...'' என்று குத்தலாக வேதாசலம் கேட்க,

''முருகா!'' என்று அதிர்ந்துபோய் வாயை மூடிக் கொண்டார் குருக்கள்.

''புதுப் பாகனுக்கு இந்த யானை அடங்குமா?...'' என்ற சந்தேகத்தைக் கிளப்பினார் ஒருவர்.

''அப்படியானால் புதிய யானையும் புதிய பாகனுமாக ஏற்பாடு பண்ணிடுவோம்... பொறுப்பு என்னுடையது...'' என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டு எழுந்தார் வேதாசலம்.



வருந்துவது ஏன்?

''வட்ட வடிவமான பூரண சந்திரனைப் பார்த்து சந்தோஷப்படாமல் ஏண்டா வருத்தப்படறே?''

''அதைப்பார்த்தால் எனக்கு பரீட்சையில் கிடைக்கப்போற மார்க் அல்லவா நினைவுக்கு வருது? எப்படி சந்தோஷப்பட முடியும்?''

-லலிதா செல்லப்பா

அந்த ஏழைக் குடும்பத்தின் மீது இவருக்கு ஏன் இந்த வன்மம் என்பது எல்லோருக்கும் புரியாத புதிராக இருந்தது. குன்றத்தில் குடிகொண்டுள்ள குமரனும் புதிர்ச் சிரிப்புடன் காட்சியளிப்பதாகவே குருக்கள் ஐயாவுக்குத் தோன்றியது.

குருக்கள் ஐயா வழக்கம் போல கையில் பிரசாதத்துடன் ராமுவைத் தேடி வந்தார். அவர் வருவதைக் கூடக் கவனிக்காமல் கணேசனை அலங்கரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தான் ராமு. ''இவ்வளவு ஆசையும் அக்கறையுமா யானையைக் கவனித்து வருகிற குழந்தையை இனி வராதே; வீட்டுக்குப் போ'' என்று எப்படிச் சொல்வது? எனக் குழம்பித் தவித்தார்.

''அய்யா... இதைப் பார்த்தே மலைத்து நிற்கிறீர்களே... இதென்னங்க பிரமாதம்? பிள்ளையார் சதுர்த்தி வரட்டும், பாருங்க... ஜமாய்த்துவிடலாம்... கழுத்துக் கொள்ளாமல் மாலையும் பூவுமாகக் கணேசனுக்கு ஜோடிக்க வேண்டும். முதுகிலே ஜம்மென்று புது வேஷ்டி புரளவிட வேண்டாமா?... நெற்றி நிறைந்து, காது மடல்கள், முதுகு என்று அலங்காரக் கோலம்... வாலைக்கூட விட்டு வைக்க மாட்டேன் அய்யா... சாமி புறப்பாட்டின்போது 'கணீர் கணீர்' என்ற மணிச் சத்தம் கேட்கும்படியா

வீதியிலே இவன் நடந்து வந்தால், பிள்ளையாரே நடந்து வராப்போல எல்லோரும் அசந்து நின்றுவிட வேணும்...'' மேலே மேலே அவன் உற்சாகமாகச் சொல்லிக் கொண்டு போகவே, குருக்கள் ஐயாவால் தாங்கவே முடியவில்லை.

''கொள்ளை ஆசையைத் தேக்கி வைத்திருக்கிறாயே ராமு... எல்லாம் பறிபோய் விட்டதே...!'' என்று கண்களில் நீர் மல்கச் சொல்ல ஆரம்பித்தார்.

''என்னங்க அய்யா!''

''உனக்கு வயது பதினாறு பதினைந்து இருக்குமா...? உன் ஆசை நிறைவேறணும் என்றால் ஒரே நாளிலே ஐந்து, ஆறு வயது அதிகமாகி விட்டால் நடக்கும்'' என்று ஆரம்பித்து, அவன் சிறுவன் என்பதைக் காரணம் காட்டி, வேதாசலம் விலக்கிவிடச் சொன்னதையும், கோவில் நிர்வாகம் ஏற்றுக் கொண்டதையும் சொல்லி முடித்தார்.

''அவர் நடந்துக்கிறது சரியா, நாங்க செய்கிறது சரியா என்பது குன்றத்து முருகனுக்கும் இந்தக் கணேசனுக்கும்தான் தெரியும் அய்யா...

'பாதகஞ் செய்பவரைக் கண்டால் நீ
பயங்கொள்ள லாகாது பாப்பா.
மோதி மிதித்துவிடு பாப்பா — அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா'

என்று பாரதியார் பாடியிருக்கிறாரே! அதையும் பார்த்து விடலாம்'' ஆவேசமாகக் கூறினான் ராமு.

''ஏழை சொல் அம்பலம் ஏறுமா? வேதாசலத்துக்குப் பணபலமும் பக்கபலமும் நிறைய இருக்கே... அவனோட மோதினால் தோல்விதான் மிஞ்சும்...'






அவனைத் தேற்றும் வகை தெரியாமல் அவரும் கலங்கினார்.

அழுகையும் ஆத்திரமும் முட்டி மோத கணேசனின் காலைக் கட்டிக் கொண்டான் ராமு. அதுவும் புரிந்து கொண்டது போலத் துதிக்கையால் தடவியது. துக்கத்தைப் பகிர்ந்து கொள்வது போல உணவு உண்ண மறுத்தது.

அதிகாரப் பூர்வமாக மற்றவர்கள் அவனைப் போகச் சொல்லுமுன் அன்பைக் குழைத்து, பக்குவமாக விஷயத்தைச் சொல்ல நினைத்துத்தான் குருக்கள் சொன்னார். ஆனால், அவன் படும்பாட்டை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

''ராமு... ஆண்டவன் மேலே பாரத்தைப் போட்டுவிட்டு நிம்மதியாக இருந்து விடு...'' ஆறுதல் சொன்னார்:

வீட்டிற்கு வர மனமில்லாமல் வந்து சேர்ந்த ராமுவால் நிம்மதியாக இருக்க முடிந்ததா?



இரண்டு நாட்களாகச் சோறு இல்லாமல், தூக்கமில்லாமல் விழுந்து கிடந்தான் ராமு. வள்ளி எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தாள்.

''அக்கா... அங்கே கணேசன் சாப்பிடாமல் கிடக்கிறானே...எனக்கு மட்டும் சாப்பிட முடியுமாக்கா...'' என்று பரிதாபமாகக் கேட்டான்.

''உன்னை யானையைப் பார்க்கவே கூடாது'னு யாரும் சொல்லவில்லையே... நீ போய்ப் பாரு... உன்னைப் பார்த்து அது சாப்பிடும்... நல்ல படியா நடந்து கொள்ளச் சொல்லு... அது கேட்கும்... அதை விட்டுட்டு மூலையிலே விழுந்து கிடந்தால் சரியாகி விடுமா?'' என்று அதட்டினாள் வள்ளி.

''தப்புப் பண்ணினவன் மாதிரி இப்படித் தலைமறைவாகக் கிடப்பானேன்? நிர்வாகம் என்றால் சட்ட திட்டம் எல்லாம் இருக்கும். நம்ம விதி... அப்பாவுக்கு உடம்புக்கு வந்து விட்டது... உனக்கு வயசு பத்தாது என்று இன்னொரு ஆளைக் கொண்டு

வருகிறாங்க...இதிலே என்ன தப்பு?...'' என்று நியாயம் பேசினாள் அவள்.

குருக்கள் ஐயாவும் வந்து பார்த்து விட்டுப் பட்டணத்தில் இருக்கும் தனது தம்பியின் முகவரியைக் கொடுத்தார். அவரைப் போய்ப் பார்த்தால் அவனது படிப்பிற்கோ வேலைக்கோ உதவி கிடைக்கும் என்று நம்பிக்கை யூட்டினார்.

ஆனால் ராமு முடிவு செய்வதற்குள்ளாக வேலையாவின் நிலைமை மோசமாகியது. வைத்தியர் ஐயாவைத் தேடி ஓடினான் ராமு. ''முப்பது மைல் தூரத்திலுள்ள ஒரு ஊரிலே யாருக்கோ விஷக்கடி என்று வண்டியில் அழைத்துப் போயிருக்கிறாங்க. நாளை மறுநாள் வந்துடுவார்'' என்று அவர் மனைவி சொன்னாள்.

''அம்மா... அவர் வழக்கமாகத் தருகிற பச்சிலையையாவது கொடுங்க அம்மா...'' என்று பதறினான் ராமு.

''இருக்கிறதைத் தாரேன் தம்பி... ஒருவேளைக்குத்தான் வரும்... ஆனால் உன்னாலே முடிந்தால் இன்னும் கொஞ்சம் பறித்து வைத்திருப்பது நல்லது.''

''எங்கே கிடைக்கும் சொல்லுங்கம்மா...?'' என்று பதற்றத்தோடு ராமு கேட்கவும் வைத்தியர் மனைவி சொன்னாள்.

''மலை ஏறிக் கோவிலுக்குப் போக வலதுபக்கம் திரும்புகிறோம் இல்லையா, அந்த வலது பக்கம் திரும்பாமே, இடதுபக்கம் திரும்பி ஒத்தையடித் தடம் வழியா கொஞ்சதூரம் நடந்து போகணும். குறுக்கே தெரியும் வழி மறைச்சான் பாறைமேலே மெதுவா ஏறி மறுபக்கம்குதிச்சுத் திரும்பினால் ஒரு சுனை தெரியும். அதைச் சுற்றி இந்தச் செடிகள் வளர்ந்திருக்கிறதா அவர் சொல்லுவாரு.... இந்த இலையை அடையாளமா எடுத்துக்கிட்டுப் போ... ஆனால், சூரியன் உதிக்கிறதுக்குள்ளே இலையைப் பறிச்சால்தான் பலன் இருக்கும்'' என்றவள்,

''தம்பி... சுனையிலே தண்ணீர் குடிக்கச் சில காட்டு மிருகங்கள் வருமாமே!... ஜாக்கிரதையாகப் போக வேண்டுமே... நாளை ஒரு பொழுது தாண்டிவிட்டால் வைத்தியர் ஐயா வந்து விடுவார்...'' என்று தயங்கிய படி சொல்லி முடித்தாள். ராமு அதற்குள் பறந்து விட்டான்.

ராமு கொண்டு வந்த பச்சிலையைச் சாறு பிழிந்து முன்பு போலப் புகை காட்டினார்கள். ராமுவும் வள்ளியும் தெய்வத்தை வேண்டியபடி அன்றிரவு முழுவதும் வேலையாவின் அருகிலேயே கிடந்தார்கள். அதிகாலை நாலு மணியிருக்கும். வள்ளியும் வேலையாவும் அயர்ந்து தூங்கும்போது ராமு பச்சிலை தேடிப் புறப்பட்டுவிட்டான்.

நடந்து நடந்து பழக்கப்பட்ட மலைப்பாதை என்றாலும் அச்சம் தரும் இருட்டு. மிருகங்கள் வந்து விடுமோ என்ற பயம். ஆனாலும் தயங்கவில்லை. வழிமறிச்சான் பாறையில் ஏறி மறுபக்கம் குதித்தபோது ஏதோ தட்டுப்பட்டது. காலால் இங்குமங்கும் துழாவிய போது உருண்டு போய்ப் பாதையில் 'டணார்' என்ற சப்தத்துடன் மோதிய பொருள்... 'அட... இது கணேசனின் கழுத்து மணி அல்லவா...! எத்தனை ஆண்டுகள் பழக்கப்பட்ட' பொருள்! அப்படி



சர்க்கார் என்பது....?

பௌனார் ஆசிரமத்தில் ஒரு நாள் விவாதத்தின்போது ஒருவர் எழுந்து, ''தேசமெங்கும் கிணறுகள் தோண்டினால் உணவு உற்பத்தி பெருகும். அதனால் வறுமை நீங்கும். தண்ணீர்த் தட்டுப்பாடு குறையும். ஆகவே, சர்க்கார் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்'' என்றார்.

அதற்கு விநோபா பாவே அவர்கள், ''சர்க்கார் என்பது நாம்தானே! மக்களின்றிச் சர்க்கார் எங்கே இருக்கிறது? ஆகவே வாருங்கள். நமது நிலத்தில் முதலில் ஒரு கிணறு தோண்டத் தொடங்கலாம்'' என்று கூறியதுடன், மண்வெட்டியையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டுவிட்டார்.

-வசந்தாகோவிந்தன்


யானால் கணேசன் இங்கு வந்திருக்கிறதா...!'' சுற்றிலும் பார்த்தான் ராமு. இருட்டில் சரியாகப் புலப்படவில்லை.

''கணேசா...!'' என்று குரல் கொடுத்தான். பதில் இல்லை. பாறை மீது ஏறி நின்று அதைவிட உரக்கக் கூவினான். எங்கிருந்தோ 'ரா...மூ...' என்பது போலக் கணேசன் குரல் கொடுப்பது கேட்டது. சந்தேகமேயில்லை. அது கணேசன் தான் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு குரல் வந்த பக்கம் அடிமேல் அடி எடுத்து வைத்துக் கவனமாக நடந்தான்.

அங்கு ஒரு இடத்தைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்த கணேசனைப் பார்த்தும் விட்டான். விரைவாக வந்த ராமுவைத் தும்பிக்கையால் தடுத்து நிறுத்தியது கணேசன். அதன் செய்கையைப் புரிந்து கொள்ள ராமுவுக்குச் சற்று நேரமாயிற்று. காரணம் என்ன தெரியுமா...?

எங்கிருந்தோ யாரோ 'அம்மா... அப்பா...' என்று முனகும் குரல் கேட்டது. உற்றுக் கேட்டபோது வேதாசலத்தின் மகள் குரல் போல் தோன்றவே, ''சாந்தி... சாந்தி.... நீ... எங்கே இருக்கே...?'' என்று அலறினான். இதற்குள் பொழுது விடியத் தொடங்கியிருந்ததால், ஓரளவு சுற்றுப்புறம் புலப்படத் தொடங்கியது. யானை பிடிப்பதற்காக வெட்டி வைத்திருந்த ஆழக் குழிக்குள் சாந்தி விழுந்துவிட்டதை ஊகித்துக் கொள்ளவும் அவனால் முடிந்தது.

யாரை உதவிக்கு அழைப்பது? இந்த நேரத்தில் அந்தப் பக்கம் யார் வரப்போகிறார்கள்? நின்று நேரத்தை வீணாக்கினால் பயத்தாலே சாந்தியின் உயிருக்கே மோசம் வந்துவிடும்...' என்று குழம்பித் தவித்தான். அருகில் இருந்த ஓர் உயரமான பாறை மீது ஏறிப் பார்த்தான். அப்போது சிறிது தூரத்தில் ஒரு ஜீப் நிற்பதைக் கண்டான். அதிலிருந்து இறங்கியவர் வேதாசலமேதான்! பாறை மீது ராமுவையும், கீழே யானையையும் கண்டதும் அவர் ஓடோடி வந்தார். அருகிலே வந்ததும், ''திருட்டுப் பயலே... உன்னை வர வேண்டாம் என்று சொன்னதற்காகப் பழிவாங்க நினைத்தாயா? என் மகள் சாந்தி எங்கே? என் மகன் சேகர் எங்கே? நேற்றிலிருந்து காணோமே! அவர்களை ஒளித்து வைத்துவிட்டு யானையையும் கடத்திக்



கிளியின் பேச்சு

''கிளிக்கூண்டை டெலிபோனுக்குப் பக்கத்தில் மாட்டாதே என்றேனே கேட்டாயா?''

''இப்ப என்ன ஆயிடுத்து?

''கிளி 'ரங்கா, ரங்கா' என்று சொல்வதற்குப் பதில் 'ஹலோ' 'ஹலோ' என்றல்லவா சொல்லுது?''

-லலிதா செல்லப்பா

கொண்டு ஓடப் பார்க்கிறாயா?'' என்று மிரட்டினார்.

''ஐயா... உங்களுடைய பெண் சாந்தியை உடனே காப்பாற்ற வேண்டும். யானை பிடிப்பதற்காக வெட்டி வைத்த குழியில் அவள் விழுந்து கிடக்கிறாள்! பச்சிலை பறிக்க வந்த நான் அதை அறிந்து, உதவிக்கு யாரையாவது அழைத்துப் போகலாம் என்று பார்த்தேன்''

''என்ன! சாந்தி குழிக்குள் விழுந்து கிடக்கிறாளா? எங்கே? எங்கே?'' என்று பதறினார் வேதாசலம்.

குழியிருந்த இடத்திற்கு அவரை அழைத்து வந்தான் ராமு.

வேதாசலம் பயந்து பதறித் தவித்தார். ''சாந்தி... சாந்தி...'' என்று குழியைச் சுற்றிச் சுற்றி வந்தார். ''அப்பா... அப்பா...'' என்று முனகலாகக் கேட்டுக் கொண்டிருந்த சப்தம் சிறிது நேரத்தில் நின்று விட்டது.

சாந்தியின் குரல் கேட்காததால், அவள் மயக்கமடைந்திருக்க வேண்டும் எனப் புரிந்து கொண்டார்கள். ராமுவுக்கு அவளைக் காப்பாற்ற வேண்டுமானால் உடனே செயல்பட வேண்டும் என்பது புரிந்தது.

''கணேசா... பார்த்துக்கிட்டு சும்மா நிற்கிறியே...!'' என்று கெஞ்சினான் ராமு.

''ராமு... நான் செய்த பாவங்களுக்கு என் மகள் பலியாகிவிடக்

கூடாது... என் மகளைக் காப்பாத்தச் சொல்லு ராமு... எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தருகிறேன்...'' என்று கெஞ்சினார்.

இதற்குள் சேகர் அங்கே இரைக்க இரைக்க ஓடிவந்தான். ''அப்பா நேற்று மாலையில் நானும் சாந்தியும் கோயிலுக்குப் போய்விட்டு, சிறிது தூரம் இந்தப் பாதையில் நடந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தோம். அப்போது, ஒரு காட்டு யானை எங்களைத் துரத்தியது. நாங்கள் போட்ட கூச்சலைக் கேட்டுக் கணேசன் ஓடி வந்தது. நாங்கள் அதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அது காட்டு யானையுடன் வெகுநேரம் பயங்கரமாகச் சண்டை போட்டது. வீட்டுக்குத் திரும்பி வரும் வழியில் சண்டை நடந்ததால், எதிர்த்திசையில் நானும் சாந்தியும் ஓடினோம். அப்போது சாந்தி இந்தக் குழியில் விழுந்து விட்டாள். நான் யாரையாவது உதவிக்கு அழைத்து வர முயன்றேன். ஆனால், காட்டு யானை கணேசனிடமிருந்து தப்பிச் சிறிது தூரத்தில் வருவதைக் கண்டேன். உடனே ஓடிப் போய் ஒரு குகைக்குள் ஒளிந்து கொண்டேன். நன்றாக இருட்டிய பிறகு வெளியில் வந்தேன். ஆனால் வழி தெரியவில்லை. அருகிலே இருந்த ஒரு மரத்தில் ஏறி, இரவு முழுவதும் அங்கேயே இருந்தேன். விடிந்ததும் இறங்கி, சாந்தி விழுந்த குழியைத் தேடிக் கொண்டு வந்தேன். நல்லவேளை? உங்களையும் ராமுவையும் பார்த்தேன்.... சாந்தி எங்கே? இன்னும் குழியில்தான் கிடக்கிறாளா?'' என்று கவலையோடு கேட்டான்.

உடனே ராமு, ''கணேசா... சாந்தியை மீட்க வேண்டியது உன் பொறுப்பு...'' என்று உரத்து ஆணை இடுவது போலக் கூறினான்.

மறுநிமிடம் கணேசன் குழிக்குள் பாய்ந்தது. சடசடவென்று குழியை மூடியிருந்த இலை தழைகள் நொறுங்கின. சற்று நேரத்தில் தும்பிக்கையால் சாந்தியைத் தூக்கி வெளியே மெல்ல எறிந்தது. மயக்கமாகக் கிடந்த சாந்தியை வேதாசலமும் சேகரும் ஜீப்பிற்குக் கொண்டு போனார்கள். ஆனால், கணேசன் குழியில் விழுந்து விட்டது. மேலே ஏறத் தெரியவில்லை; ஏற முடியவில்லை.

''ராமு... காட்டிலாகா அதிகாரிகள் கிட்டே தகவல் சொல்லி, கணேசனை மீட்டிடுவோம். கவலைப் படாதே...!'' என்று ஆறுதல் சொல்லி விட்டுப் போய்விட்டார் வேதாசலம்.

சிகிச்சைக்குப் பின் சாந்தி பிழைத்துக் கொண்டு விட்டாள். ஆனால், தகவல் கிடைத்து ஆட்கள் வருவதற்குள்... கணேசன்...? முன்தினம் காட்டு யானையுடன் பலமான சண்டை, அதற்கு முன்பு சரியான உணவின்றிக் கிடந்ததால் ஏற்பட்ட பலவீனம், எல்லாமாகச் சேர்ந்து கணேசன்



ஆதாரம்; சேப்டி நியூஸ்—மேப்ல்

விஜயா சீனிவாசன்

சைக்கிளில் செல்லும்போது...

✲ சைக்கிளில் பிரேக், பெல், லைட் முதலியவற்றை நல்ல முறையில் வைத்திருக்க வேண்டும்.

✲ திருப்பங்களில் செல்லும்போது ஸைகை செய்ய வேண்டும்.

✲ மற்ற வாகனங்களைப் பிடித்தபடி சைக்கிள் விடக் கூடாது.

✲ திருப்பங்களில் வேகத்தைக் குறைக்கவேண்டும்.

✲ சைக்கிளில் சென்றபடி சர்க்கஸ் வேலைகள் செய்யக் கூடாது.

✲ ஹாண்ட் பாரில் நீளமான பைகளை மாட்டக் கூடாது. சக்கரத்தில் மாட்டிக் கொண்டு விபத்தை ஏற்படுத்தும்.

✲ சைக்கிளில் இருவரோ மூவரோ பக்கவாட்டில் கைகோத்தபடி செல்லக் கூடாது.

✲ நடு ரோட்டில் சைக்கிளை நிறுத்திவிட்டுப் பேசுவது தவறு.

✲ போக்கு வரத்து அதிகம் உள்ள இடத்தில் சைக்கிள் ஓட்டிப் பழகக் கூடாது.

உயிரைப் பறித்து விட்டன. சடலமாகத் தான் அதை வெளியே எடுக்க முடிந்தது.

ராமு, கணேசன் மீது விழுந்து கதறிக் கதறி அழுதான். உடல் நலமில்லாதிருந்த வேலையாவிற்குக் கணேசன் இறந்தது பேரிடியாக இருந்தது. அந்த அதிர்ச்சியைத் தாங்க முடியாமல், வேலையாவும் ஒரு வாரத்தில் இறந்து விட்டார்.

சாந்தியும், சேகரும் இவற்றையெல்லாம் கண்டு மிகவும் வேதனைப்பட்டார்கள்.

வேலையா இறந்த நாலாம் நாள் காலை, ராமுவும் அவன் அக்காள் வள்ளியும் ஊரை விட்டே போய்விட்டார்கள்'' என்ற செய்தி வேதாசலத்துக்கு எட்டியது. உடனே குழந்தைகளுடன் விரைந்து வந்து வேலையன் வீட்டைப் பார்த்தார். அது காலியாகக் கிடந்தது! வீட்டிலே இருந்த ஒருசில சாமான்களை எடுத்துக்கொண்டு முதல்நாள் இரவு யாரிடமும் சொல்லாமல், யாருக்கும் தெரியாமல் ராமுவும் வள்ளியும் போய்விட்டார்கள்! எங்கு போனார்களோ? எப்படி இருக்கிறார்களோ?

வேதாசலம் நாலாபக்கமும் ஆள் அனுப்பித் தேடிப் பார்க்கச் சொன்னார். கண்டுபிடிக்க முடியவில்லை.

''ஐயோ, நான் எவ்வளவு பெரிய பாவி! ராமு, என்னைப் போன்ற கொடியவர்கள் வாழும் ஊரில் இருப்பதே சரியில்லை என்று இந்த ஊரை விட்டே போய்விட்டாயா?'' என்று தம் தவற்றை உணர்ந்த வேதாசலம் கதறிக் கண்ணீர் விட்டார்.

இறந்த கணேசனின் நினைவாக ஒரு சிலை எழுப்ப அவர் முடிவு செய்தார். அப்போது சேகரும் சாந்தியும், ''அப்பா, கணேசனைப் பிரிந்து ராமுவால் இருக்க முடியவில்லை. நாமாவது அவர்கள் இருவரையும் பிரிக்காமல்' பக்கத்தில் பக்கத்திலே இருவர் சிலைகளையும் வைக்கலாம் அப்பா'' என்று ஆசையோடு சொன்னார்கள்.

''நல்ல யோசனைதான். ஆனாலும், உயிரோடு இருப்பவர்களுக்குச் சிலை வைப்பது...'' என்று இழுத்தார் வேதாசலம்.

''...தவறில்லையப்பா. உயிரோடிருக்கும் சில தலைவர்களுக்குச் சிலைகள் இல்லையா?'' என்று கேட்டாள் சாந்தி.

''சரி, கணேசனின் புகைப்படம் கோயிலில் இருக்கிறது. ராமுவின் படம் இருந்தால், சிற்பியிடம் கொடுத்துச் சிலை செய்யச் சொல்லலாம். ராமுவின் படம் எங்கேயாவது கிடைக்குமா?'' என்று கேட்டார் வேதாசலம்.

உடனே சேகர் தன் மணிபர்சில் செருகி வைத்திருந்த ஒரு புகைப் படத்தை எடுத்தான். ''அப்பா, எனக்கு மாமா வாங்கித் தந்த கேமராவில் நான் எடுத்த முதல் படம் இதுதானப்பா!'' என்றான். அந்தப் படத்தில் கணேசனும், அருகிலே ராமுவும் அழகாக நிற்பதைப் பார்த்ததும், ''ஆ! இந்தப் படம் மிக நன்றாக இருக்கிறது. பளிச்சென்று இருக்கிறது. இதையே சிற்பியிடம் கொடுக்கலாம்.'' என்றார் வேதாசலம்.

அவர் விருப்பம் போல் இதே இடத்தில் இரு சிலைகளும் எழுப்பப் பட்டன.

-இவ்வளவு நேரமாகப் பூக்காரப் பாட்டி சொன்ன கதையைக் கேட்டுக் கண் கலங்கிய செல்வி, சுரேஷ், கீதா மூவரும் கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தார்கள்.

''ஏன் பாட்டி, அதற்குப் பிறகு ராமு ஒரு தடவையாவது இங்கு வந்தாரா? அவரைப் பற்றி ஏதாவது தகவல் கிடைத்ததா?''

''இல்லை. அவனும் அவன் அக்காளும் எங்கு இருக்கிறார்களோ! எங்கிருந்தாலும் அவர்களுக்கு முருகன் துணை இருப்பான்.''

பாட்டியிடம் பத்து முழம் பூ வாங்கிக் கணேசனுக்கும் ராமுவுக்கும் போட்டு விட்டுக் கோயிலை நோக்கி மூவரும் நடந்தார்கள்.



காலங்கள்

"காலங்கள் எத்தனை வகைப்படும்"

"கடந்த காலம், எதிர்காலம், ராகு காலம்"

-லலிதா செல்லப்பா



'அப்பு' என்ற சிறுவனுக்கு
அழுகை வந்தது;
இப்பொழுது தன்பெயரின்
இளப்பம் தெரிந்தது!

'அப்பு' என்று பெயரிட்டார்கள்
அன்னை தந்தையர்;
அப்பெயரைக் கேலிசெய்தார்
அன்பு நண்பர்கள்!

வெளியில் பெயரைச் சொல்லஅப்பு
வெட்கப் பட்டனன்;
துளியும்நெஞ்சில் மகிழ்ச்சியின்றித்
துன்பப் பட்டனன்!

'என்ன பெயர்!' என்றுமனம்
எண்ணி நொந்தனன்;
இன்னும்நல்ல பெயர்எண்ணி
ஏக்கம் கொண்டனன்!

'ஏஷியாடி'ன் சின்னம்யானை
'அப்பு' ஆனது;
தேசமெங்கும் அப்பெயரே
தெரிந்த தானது!

பத்திரிகை, செய்தித்தாள்கள்
பிரசுரித்தன;
எத்திசையும் அப்பெயரே
எதிரொ லித்தது!

அனைவருக்கும் அறிமுகமாய்
ஆகி விட்டது!
நினைவுகளில் 'அப்பு'பெயர்
நிலைத்து விட்டது!


கவுரவமாய் நண்பர்களும்
கருத லாயினர்;
தவறுக்காக அப்புவிடம்
தலைகுனிந்தனர்.

நிற்கவில்லை அப்பு நன்றாய்
நிமிர்ந்து நடந்தனன்;
பெற்றோரிட்ட பெயருக்காகப்
பெருமை கொண்டனன்!

அப்புவுக்கு மனம்நிறைந்து
சிரிப்பு வந்தது;
இப்பொழுது தன்பெயரின்
ஏற்றம் புரிந்தது!

ஏக்கம் தீர்ந்தது!

மலர் மகன்



பிருந்தாவனம்

கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் பங்கு கொள்ளும் பகுதி



புளுகோ புளுகு!

எங்கள் ஊரில் ஒரு பையன். அவன் எதற்கெடுத்தாலும் புளுகுவான். அதுவும் எப்பேர்ப்பட்ட புளுகு! அண்டப் புளுகு! ஆகாசப் புளுகு! புளுகோ புளுகு!

வெளிப்படையாக அவன் பெயரைச் சொல்லலாமா? தலைப்புக்குள்ளேயே அவன் ஒளிந்திருக்கிறானே, தெரியவில்லையா? ஆம், 'கோபு'தான்!

—பா. ஸ்ரீராமன் (2047)
கேளம்பாக்கம்

வெள்ளை ரோஜா



காலையில் பூக்குது வெள்ளை ரோஜா—
அதைக்
கண்டு மகிழுது சின்னப் பாப்பா.

தோட்டத்தில் பூக்குது வெள்ளை ரோஜா
—அதைத்
தொட்டுப் பார்க்குது சின்னப்பாப்பா

பாலைப்போல் இருக்குது வெள்ளை
ரோஜா — அதைப்
பார்த்து மகிழுது சின்னப் பாப்பா.

பூத்துக் குலுங்குது வெள்ளை ரோஜா—
—அந்தப்
பூவைப்போல் சிரிக்குது சின்னப்
பாப்பா

—ஆர். உஷா (2238)
புதுடில்லி-23

சுவிகாரப் புதல்வன்

"நீங்கள் சுவிகாரம் எடுத்தீர்களே, அந்தப் பையன் இப்போது என்ன செய்கிறான்?"

"ஓட்டலில் சுவிட், காரம் செய்கிறான்."

—நா. சிவகுமார் (2896)
கடலூர்-1





முழுப் பெயர்

ஹாங்காங்கில் ஒரு சீனர் தன் மகன் பெயருக்கு ஓர் உயில் எழுதி வைத்திருந்தார். அந்தச் சீனரின் முழுப் பெயர்:

வாங்கூன் பியூவாங் சூடாங் வாங்யான் ஸீபி வாங்யின்யிடாங் வாங்யின் லேடாங் குவாங் யான்டான் சிக்ஸின் டாங்வாங் பூக்டாங்.

அம்மாடியோவ்!

—என். சீனுவாசன் (2989)
சென்னை-49.

கணபதி கூடையில் ஆப்பிள்!

கணபதி கையில் ஆப்பிள் கூடை. கூடையில் உள்ள பழங்களில் பாதியையும் ஒரு பழத்தில் பாதியையும் அவர் எடுத்துக் கொண்டு, மீதிப் பழங்களோடு கூடையைத் தம்பி முருகனிடம் கொடுத்தார். முருகனும் கூடையில் உள்ள மீதிப் பழங்களில் பாதியையும் ஒரு பழத்தில் பாதியையும் எடுத்துக்கொண்டு, மீதியை நாரதரிடம் கொடுத்தார். நாரதர் மீதியில் பாதியையும், ஒரு பழத்தில் பாதியையும் எடுத்துக் கொண்டார். கூடை இப்போது காலி! அப்படியானால் கூடையில் இருந்த மொத்தப் பழங்கள் எத்தனை?

விடை 7 பழங்கள்.

—செள. சீனிவாசன் (533)
கோவை-2





இதயத் துடிப்பு

சிசு (மிகச் சிறிய குழந்தை) யின் இதயம் ஒரு நிமிஷத்துக்கு 120 தடவை துடிக்கும். வயது அதிகமாக ஆக, துடிப்பு அதிகமாகும் என்றுதான் பலர் நினைக்கிறார்கள். அப்படியல்ல. 7 வயதாகும்போது இதயம் 90 தடவை துடிக்கும். நன்கு வளர்ந்த பிறகு 72 தடவை துடிக்கும்.

—பி. ஜான்சன் சாமுவேல் ஜேசுதாஸ்
கன்னிராஜபுரம் (705)

'ம' வாக்கியம்

ம
துரையில்
தனகோபாலின்
கன்
னிகண்டன்
யிலாப்பூர்
லேசாமியின்
கன்
ஞ்களாவை
ணந்தான்.

—வை. இந்துமதி (2353)
சென்னை-33



காரணம்?

ஓட்டல்காரர்: ஏம்மா, குழந்தை அடம் பிடித்து அழுகிறானே, அவனுக்கு வேண்டியதை வாங்கிக் கொடுக்கப்படாதா?

பையனின் அம்மா: அவனுக்கு நாயை அடிக்க உங்கள் கடை இட்லிதான் வேணுமாம்.

—எஸ். ஜெயஸ்ரீ (1254)
திருச்சி-14



கடிகாரத்தில் 6 துண்டுகள்

வட்ட வடிவமான முகப்பை உடைய கடிகாரத்தை 6 துண்டுகளாகப் பிரிக்க வேண்டும். ஆனால், ஒவ்வொரு துண்டிலும் உள்ள எண்களின் கூட்டுத்தொகை சமமாக இருக்க வேண்டும். முடியுமா உங்களால்?

விடை:



கடிகாரத்தில் 1 முதல் 12 வரை கூட்டுத்தொகை 78. ஆறு துண்டுகளாகப் பிரிக்கும்போது ஒவ்வொரு துண்டின் கூட்டுத் தொகையும் 13 இருக்கவேண்டும். இங்கே உள்ள படத்தில் ஆறு பிரிவுகளும், ஒவ்வொரு பிரிவின் கூட்டுத் தொகை 13-ம் இருக்கின்றன அல்லவா?

—டி. சுமதி (1125)
மதுரை-3

பெண் பிள்ளையார்!


எங்கள் தெருவில் ஒரு பிள்ளையார் கோவில் புதிதாகத் திறக்கப்பட்டது. அங்கு பிள்ளையாருக்குப் புடவை கட்டப்பட்டிருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தேன்.

குருக்களிடம் ஒருவர், "என்ன குருக்கள், பிள்ளையாருக்குப் புடவை கட்டி விட்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

அதற்குக் குருக்கள்,

"ஓர் அசுரனை அழிக்க விநாயகர் பெண்ணாக உருமாறிப் போர் புரிந்து வெற்றி பெற்றார். எனவே, இவர் 'கஜேந்திரி அம்மன்' எனப்பட்டார்" எனப் பதில் கூறினார். நான் அதை நம்பவில்லை. புராணம் தெரிந்த பெரியவர்கள் யாராவது உண்மையை விளக்கிக் கூறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

—த. அருள் சிவபாலன் (47)
செங்கற்பட்டு-2



வேகமாகச் சொல்லிப் பாருங்கள்

* அடடா! கடலாடி வெள்ளைக் கோழி கிழடல்ல; மலடல்லவே!
* தேர் உருள, தேங்காய் உருள தேரடி மணி நுனி உருள.
* கடலிலே மரவுரல் உருளுது, புரளுது.
* அவள் அவல் தின்றாள்.

—ப. விஜயகுமார் (241)
சென்னை-7





அழுமூஞ்சி அண்ணாசாமி

பள்ளிக்கூடம் திறந்ததும் அடுக்கடுக்காகப் புதுப் புதுப் பாடப் புத்தகங்களையும், கட்டுக் கட்டாக நோட்டுப் புத்தகங்களையும் வாங்கித் தரும்படி அண்ணாசாமி நச்சரித்து அழுதான். வாங்கிக் கொடுக்கும்வரை அழுது தீர்த்தான்.

எல்லாம் வாங்கிக் கொடுத்தபின் அவன் தந்தை அவனை அழைத்து, ''இனியாவது உன் அழுகையை நிறுத்தி, பாடத்தைப் படி'' என்றார்.

''இவ்வளவு புத்தகங்களையும் எப்படித்தான் படிக்கப் போகிறேனோ! அதை நினைத்தாலே அழுகை அழுகை .....யாக .... வருதுப்பா!'' என்று அழுது கொண்டே கூறினான்,

அ... ழு.... மூ.... ஞ்.... சி
அ.... ண்.... ணா.... சா.... மி!

—கோ. ஸ்ரீதர் (1128)
சேலம்-7


ஏன் கூடாது?

எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கும் ஒரு வங்கிக்கு நானும் என் மாமாவும் சென்றோம். மாமாவிடம் அந்த வங்கியில் கணக்கு வைத்திருக்கும் ஒருவர் கொடுத்த 'செக்' இருந்தது. மாமா அந்த வங்கி மேலாளரிடம் ''சார், இந்தச் 'செக்'கில் பின்னால்தானே கையெழுத்துப் போடணும்?'' என்று கேட்டார்.

''கூடாது'' என்றார் மேலாளர், சிரித்துக்கொண்டே.

ஏன் அவர் அப்படிச் சொன்னார்?

(பின்னால் கையெழுத்துப் போட முடியுமா? அதனால்தான்!)




ஒற்றுமை!

சீப்புக்கும் வாழைப் பழத்துக்கும் உள்ள ஒற்றுமை என்ன தெரியுமா?

சீப்பு தலையை வாரிவிடும்.
வாழைப்பழம் காலை வாரிவிடும்!

—து.நா. ஆனந்த்குமார் (266)
வேலூர்-1



அன்பு

'அன்பு' என்னும் மூன்று எழுத்தில் தான் 'உலகம்' என்னும் நான்கு எழுத்து அடங்கியுள்ளது.

அன்பினை வாங்கவும் முடியாது; விற்கவும் முடியாது. அன்பின் விலை அன்பே!

—வி. ஜெயலட்சுமி (407)
சென்னை-49



Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032
(Phone: 431543) Editor: K. Rajendran



மகாகவி சுப்பிரமணிய பாரதியார்
விழா – செப்டம்பர் 11

REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka

ஜீவனும் அனுவும்


மொழி பற்றி மொழிகிறார்கள்

எழுத்து மொழி வளர்வதற்குப் பல்லா யிரம் வருடங்களுக்கு முன்னரே, ஆதி மனிதன், முதிர்வடையாத வரைபடங்கள், வண்ணச் சித்திரங் களைக் குகைச் சுவற்றில் தீட்டி எண்ணங்களை வெளியிட்டான். பிரான்ஸிலுள்ள லாஸ்கோவில் இக்கலைக்குப் பல உதாரணங்கள் உள்ளன.



This represents 'warriors'.


ஆதி எகிப்தியர்கள் (சுமார் 3000 கி.மு. முதல்) எண்ணங்களையும் கருத்துக்களையும் வெளியிட ஒரு சித்திர முறையைக் கண்டு பிடித்தனர். அதன் பெயர் ''ஹீரோக்ளிஃபிக்ஸ்.''



இந்த ஒவ்வொரு அடையாளமும் ஒரு பேசும் வார்த்தையைக் குறிக்கும். காலப் போக்கில், இந்த அடையாளங் கள், வார்த்தையின் பொருளை விட்டு ஒலியை மட்டுமே குறிக்க ஆரம்பித்தன.



இன்றும் ரீபஸ் என்னும் எளிய விளையாட்டில் இம்முறை கையாளப் படுகிறது. வார்த்தைகளின் எழுத்துக் களுக்கு சித்திரங்களை உபயோகிப்பார் கள். கீழ்க்கண்ட ரீபஸ் முறையில், நிஜமான செய்திக்கும் Saws, ropes, ஆகியவற்றுக்கும் தொடர்பே இல்லை. அவை குறிப்பது: Someone saw many People race by.



சீன எழுத்தும் (பிக்டோகிராம் எனப்படும்) இவ்வாறே வளர்ந்தது. விரிவான தூரிகைக் கோடுகளே எண்ணங்களின் சித்திர விளக்கமாகும் எகிப்தியரைப் போலவே, இச் சின்னங் களும் ஒலியை மட்டுமே குறிக்கும்.





இந்த தூரிகைக் கோடு, ஆரம்பத்தில் 'பாட்' என்று பொருள்படும். அதை 'லி' என்று உச்சரித்தார்கள். இதிலுள்ள ஒற்றுமையை கவனிக்கவும் மொழி வளரவளர, பொருள் மறைந்து 'லி' என்னும் ஒலியை மட்டுமே இச்சின்னம் குறித்தது.

இன்று, பெரும்பாலான மொழிகளுக்கு எழுத்து உள்ளது. ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட ஒலியைக் குறிக்கும். ஆதி இந்திய எழுத்து 'ப்ரம்மி' எனப்படும். சித்திரங்களும் தொடர்ந்து உபயோகத் தில் உள்ளன. போக்குவரத்துச் சின்னங்களைப் பார்த்தால் இது புரியும்.

